# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 057 வள்ளுவர் ஆண்டு: 2046

தை 08, வியாழக்கிழமை 22.01.2015


வானிலை
மேகமூட்டமான வானிலை காணப்படும் மாலை, இரவு வேளையில் குளிரான கால நிலை காணப்படும்.

## 33 ரூபாவால் குறைந்தது பெற்றோல்



அண்மைய வருடங்களில் அதிகூடிய விலைக் குறைப்பு:

மைத்திரி அரசு அதிரடி!

கொழும்பு, ஜன.22
சகல எரிபொருள்களின் விலைகளும் நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளன. அதிகபட்சமாகப் பெற்றோல் லீற்றர் ஒன்றுக்கு 33 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.
அண்மைய ஆண்டுகளில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அதிகூடிய விலைக் குறைப்பு இதுவாகும். பதவியேற்றுள்ள புதிய அரசு தான் தேர்தல் பரப்புரைகளில் வழங்கியிருந்த வாக்குறுதிகளுக்கு அமைவாக இந்த விலைக் குறைப்பை மேற்கொண்டுள்ளது.
விலைக்குறைப்பின்படி, ஒரு லீற்றர் 92 ரகப் பெற்றோல் 117 ரூபாவாகவும், 95 ரகப் பெற்றோல்

பக்.26

### மு.காவுக்கு இரு பிரதி அமைச்சுகள்

கொழும்பு, ஜன.22
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் இருவருக்குப் பிரதியமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

பக்.25

### யாழ். தேர்தல் மாவட்டத்துக்கு இனி 7 எம்.பிக்கள்

யாழ்ப்பாணம், ஜன. 22
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்துக்கான நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியலின்படி யாழ். தேர்தல் மாவட்டத்துக்கு 7 நாடாளுமன்ற ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன

பக்.26


### வேலையில்லா பட்டதாரிகள் யாழில் போராட்டம்

பக்.04

### டெங்கு தொற்றில் யாழ்ப்பாணம் இரண்டாமிடம்

யாழ்ப்பாணம், ஜன.22
டெங்குத் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையின் அடிப்படையில் தேசிய ரீதியில் இரண்டாவது மாவட்டமாக இனங்காணப்பட்டுள்ளது யாழ்ப்பாணம். யாழ். மாவட்டத்தில் நேற்றுவரை 440 பேர் டெங்குத் தொற்றால்

பக்.25



## வடக்குப் பிரச்சினைக்கு முன்னுரிமை அவசியம்

### ஜாதிக ஹெல உறுமயக் கட்சி வலியுறுத்துகின்றது

கொழும்பு, ஜன.22
வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள ஜாதிக ஹெல உறுமயக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் மதித்துச் செயற்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் உரையாற்றும்போது அந்தக் கட்சியின் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பக்.27

## படைக்குறைப்பு வடக்கில் நிச்சயம்

### அமைச்சர் மங்கள சமரவீர இந்தியாவில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.22
வடக்கு மாகாணத்தில் படைக் குறைப்புச் செய்யப்படும் என்று தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, வடக்கு மாகாணத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காகப் புலம் பெயர் தமிழர்களுடன் அரசு பேச்சு நடத்தும் என்றும் தெரிவித்துள்ளார். அத்துடன் இலங்கையர்கள் எந்தவொரு நாட்டிலும் அகதிகளாக வாழக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்ட

பக்.27

## இறுதிப்போரில் இராணுவம் அள்ளிய நகைகள் எங்கே?

### விசாரணையை ஆரம்பிக்கிறது மைத்திரி அரசு

கொழும்பு, ஜன.22
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடனான இறுதிப் போரில், மீட்கப்பட்ட தங்க நகைகள் மற்றும் பெருந்தொகைப் பணத்துக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் மைத்திரி அரசு விசாரணை ஆரம்பிக்கவுள்ளது. தேசிய நிறைவேற்றுச் சபைக் கூட்டத்தில் இது தொடர்பில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின், தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த தேசிய நிறைவேற்றுச் சபை, கடந்த வாரம் உருவாக்கப்பட்டது. அதில், ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் ரணில், முன்னாள் ஜனாதிபதி

பக்.26



## பொன்சேகாவுக்கு பொது மன்னிப்பு

### இராணுவப் பதவிப் பட்டமும் மீளக் கிடைக்கின்றது

கொழும்பு, ஜன. 22
முன்னாள் இராணுவத் தளபதியாகவும், முப்படைகளின் பிரதானியாகவும் கடமையாற்றியிருந்த சரத் பொன் சேகாவுக்குப் பொது மன்னிப்பு வழங்கி அவரை சகல குற்றச்சாட்டுக்களிலிருந்தும் ஜனாதிபதி மைத்திரிபால விடுவித்துள்ளார். அதையடுத்து அவருக்கு மீளவும் இராணுவப் பட்டங்கள் கிடைக்கவுள்ளதுடன், குடியுரிமையும்

பக்.26

## இளம் குடும்பஸ்தர் கொடூரக் கொலை!

### மனைவிக்கும் கத்திக் குத்து சுழிபுரத்தில் கோரச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 22
நித்திரையில் இருந்தபோது இளம் குடும்பஸ்தர் ஒருவர் கொட்டன்களால் அடிக்கப்பட்டும், கத்தியால் பல தடவைகள் குத்தப்பட்டும் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார். அவரது மனைவிக்கும் கத்தியால்

பக்.25

## பதவி விலகுமாறு மொஹான் பீரிஸுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜன 22
பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸை பதவி விலகுமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். அதனையடுத்துத் தான் பதவியிலிருந்து விலகுவதாக மொஹான் பீரிஸ் பிரதமர் ரணிலிடம் உறுதியளித்தார் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
சட்டவிரோதமான முறையில்

பக்.25

### தலைமைத்துவ பயிற்சி இனி இல்லை

கொழும்பு, ஜன.22
பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் வழங்கும் தலைமைத்துவப் பயிற்சி நிறுத்தப்படும் என்று அறிவித்துள்ளார் உயர் கல்வி அமைச்சர் பேராசிரியர் ராஜீவ் விஜயசிங்க. உயர் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் புதிய திட்டங்கள் அடங்கிய அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை முன்வைக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

பக்.25


யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி
இன்னும் 1 நாள்
JITF 2015


## கிழக்கு ஆட்சி விவகாரம்; ஜனாதிபதி- கூட்டமைப்பு பேச்சு

யாழ்ப்பாணம், ஜன. 22
கிழக்கு மாகாண சபை ஆட்சி தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று பேச்சு நடத்தவுள்ளது. இன்றைய பேச்சுடன் இந்த விவகாரம் முடிவுக்கு வரும் என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.
கிழக்கு மாகாண சபையில் பெரும்பான்மை எந்தவொரு கட்சிக்கும் இல்லாத நிலையில்

பக்.26

### பிரச்சினையை தீர்க்க ஜனாதிபதி களத்தில்!

*யாழ்ப்பாணம், ஜன. 22*
*கிழக்கு மாகாணசபையின் இழுபறி நிலைக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்காக, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் 37 பேரையும் ஜனாதிபதி மைத்திரிபால இன்று மாலை 4 மணிக்கு,*

பக்.27

## ரவிராஜ், லசந்த, ஜெயராஜ் படுகொலை சூத்திரதாரிகள் தகவல்கள் கிடைத்துள்ளன

### அமைச்சர் ராஜித பரபரப்புத் தகவல்

கொழும்பு, ஜன.22
படுகொலை செய்யப்பட்ட அரசியல்வாதிகளான மகேஸ்வரன், ஜோசப் பரராஜசிங்கம், ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, நடராஜா ரவிராஜ் மற்றும் ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க ஆகியோரின் படுகொலைகளுக்கு காரணமானவர்கள் யார் என்பது தொடர்பான தகவல்கள் தமக்குக் கிடைத்துள்ளன என்று தெரிவித்துள்ளார் சுகாதார அமைச்சர்

பக்.26

## செய்திகள்

# கிழக்கு முதலமைச்சர் குறித்து தனித்து முடிவெடுக்க முடியாது

### ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு



கொழும்பு, ஜன, 22

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தலைவராக இருக்கும் நான் கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி தொடர்பில் அன்று நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையி லான ஒப்பந்தம் குறித்து மகிழ்ச்சி அடைந்தாலும் இது விடயத்தில் தனித்துச் செயற்பட முடியாது. அனைத்து தரப்பினருடனும் கலந்து பேசி ஒரு இணக்கப்பாட்டின் மூலமே முடிவெடுக்க முடியும்' எனஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன தெரிவித்துள் ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று நேற்றுப் புதன்கிழமை நண்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

அந்தச் சந்திப்பில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது கட்சியின் சார்பில் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் உரையாற்றியதுடன், கட்சியின் பிரதிச் செயலாளர் நாயகமும் கல்முனை மாநகர முதல்வருமான சட்ட முதுமாணி எம்.நிஸாம் காரியப்பர் அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பில் கட்சியின் நிலைப்பாடுகளையும் கருத்துக்களையும் முன்வைத்து உரையாற்றினார்.

இதன்போது 100 நாள் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள அரசமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பில் ஜனாதிப்தியிடம் இருந்து சில தெளிவுகளையும் முதல்வர் நிஸாம் காரியப்பர் கோரினார். அதற்கு ஜனாதிபதி மைத்திரிபால பதிலளித்ததுடன் சில விடயங்களையும் தெளிவுபடுத்தினார்.

அதேவேளை, முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் கடந்த ஆட்சிக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கும், அவர்களது வாகனப் பிரச்சினைகள் குறித்தும் உரிய நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால உறுதியளித்துள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் உட்பட கட்சியின் உயர் பீட உறுப்பினர்கள் 50 பேர் வரை இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். (த-10)

# காணி சுவீகரிப்புக்கு எதிராக கவனவீர்ப்பு

### கூழாவடியில் நேற்று நடந்தது

யாழ்ப்பாணம்,ஜன. 22

ஆனைக்கோட்டை கூழாவடியில் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ள காணி நேற்று உரிமையாளர்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்டு இராணுவத்தினருக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் இராணுவத்தினரோ, யாழ். மாவட்டக் காணி சுவீகரிப்பு அலுவலரோ நேற்றுக் குறித்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு வருகை தரவில்லை. இருப்பினும், காணி சுவீகரிப்புக்கு எதிராக கவனவீர்ப்பு நடவடிக்கை அங்கு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

ஆனைக்கோட்டை கூழாவடியில் 5 பேருக்குச் சொந்தமான 19 பரப்புக் காணியை இராணுவத்தினர் சுவீகரித்துள்ளனர். கடந்த ஒக்ரோபர் மாதம் இதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த காணியை இராணுவத்தினருக்குக் கையளிப்பதற்கு, காணி உரிமையாளர்கள் மற்றும் அந்தப் பகுதி கிராம சேவையாளர் ஆகியோரைக் குறித்த முகாமுக்கு வருமாறு யாழ்.மாவட்ட காணி சுவீகரிப்பு அதிகாரி தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதியமைச்சருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன், ஜனாதிபதி மைத்திரிபாலவின் கவனத்துக்கு நேற்று முன்தினம் கொண்டு வந்திருந்தார். இதனையடுத்து உடனடியாகக் குறித்த நடவடிக்கையை இடைநிறுத்த ஜனாதிபதி பணித்திருந்தார்.

இதனால் நேற்றைய தினம் குறித்த காணி கையளிப்பு இடம்பெறவில்லை. இருப்பினும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் ஒழுங்குபடுத்தப்பட்ட காணி சுவீகரிப்புக்கு எதிரான கவனவீர்ப்புப் போராட்டம் குறித்த இராணுவ முகாமுக்கு முன்பாகச் சிறிது நேரம் இடம் பெற்றது. (த-5)



*மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு தெரிவித்து முற்போக்குத் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் விஜயகாந்தினால் 'மாற்றத்துக்காக ஒன்றிணைந்த உங்களுக்கு நன்றி' என்று எழுதப்பட்ட சுவரொட்டிகள் யாழ்.நகரப் பகுதியில் ஒட்டப்பட்டிருந்தன. அந்தச் சுவரொட்டிகளில் உள்ள முற்போக்குத் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் விஜயகாந்தின் படத்துக்கும் கட்சியின் பெயருக்கும் மட்டும் கழிவு ஓயில் பூசப்பட்டுள்ளது.ஜனாதிபதியின் படம் தெளி வாக உள்ளது. ஜனாதிபதித் தேர்தலின்போது முன்னர் மஹிந்தவுக்கு ஆதரவளிப்பதாகக் கூறியிருந்த விஜயகாந் பின்னர் எதிரணி வேட்பாளர் மைத்திரிபால யாழ்ப்பாணம் வந்தபோது அவருக்கு ஆதரவளிப்பதாக பல்டி அடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.* (த-21)

# அரசியல் நியமனங்கள் குறித்து மீள்பரிசீலனை

ஜனாதிபதித்தேர்தலை முன்னிட்டு வாக்கு வங்கியைத் தயார் செய்யும் வகையில் வழங்கப்பட்ட பதவி நியமனங்கள் மீள் பரிசீலனை செய்யப்படவுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டுத் தேர்தல் தொடர்பான அறிவித்தல் வெளியிடுவதற்கு முன்னரும் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியான பின்னரும் அரசியல் கட்சி சார் நிலையில் கட்சி ஆதரவாளர்களுக்குப் பதவி நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்த வகையில் நியமனங்கள் அரசியல் கட்சி சார் நிலையில் வழங்கப்பட்டன. வடக்கு மாகாணத்தில் சமுர்த்தி, ரயில் திணைக்களம் மற்றும் அலுவலகங்களில் பல நூற்றுக் கணக்கானோருக்குத் தற்காலி கமாகவும், நாளாந்த சம்பள அடிப்படையிலும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நியமனங்களின் முறைகேடுகள் மற்றும் நியமனம் வழங்கவேண்டிய நியமங்களுக்கு புறம்பான நடைமுறைகள் தொடர்பாக ஆராயப்பட்டு வருவதோடு மீள் பரிசீலனை செய்வதற்குஏற்பாடுகள்செய்யப்படுவதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-11)

# வெளி உறுப்பினர்களுக்கு எதிராகப் போராட்டம்

### யாழ். பல்கலை ஊழியர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ்.பல்கலைக்கழகப் பேரவையில் உள்ள வெளிவாரி உறுப்பினர்கள் 14 பேரும் தாமாகப் பதவி விலகவேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தியுள்ள யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம், தவறின் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் மேலும் தெரிவித்தள்ளதாவது:-

வெளிவாரி உறுப்பினர்களைப் பதவி விலகுமாறு நாம் கோரிக்கை விடுத்தும் இதுவரை அவர்கள் விலகவில்லை.அவர்களை விலக்குவதற்கு பல்கலைக்கழகத் துணைவேந்தரும் பீடாதிபதிகளும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தவேண்டும். தவறின், பல்கலைக்கழகத்தை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம்கையளிப்பதற்கு நாம் ஆதரவளிக்க வேண்டிய நிலை வரலாம்.

பல்கலைக்கழகக் கல்விசாரா ஊழியர்களுக்கான வெற்றிடங்களுக்கு உயர் கல்வி அமைச்சில் புதன்கிழமைகளில் தமது பெயர்களைப் பதிவு செய்யும் நடைமுறை இன்று வரை இருந்து வருகிறது. பல்கலைக்கழகத்தில் கல்வி சாரா ஊழியர்களுக்கு வெற்றிடம் ஏற்பட்டால் உயர் கல்வி அமைச்சில் பதிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அந்தப் பெயர் விபரத்தின் படி யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்தப்படும் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஆனால் உயர் கல்வி அமைச்சில் பெயர் பதிவு செய்திருந்தாலும் கடந்த கால அரசியல் தலைமீடுகள் காரணமாக அந்தப் பெயரில் உள்ளவர்கள் அமைச்சரின் சிபார்சையும் பெற்றுக் கொள்ளவேண்டும். அவ்வாறு பெறப்படாத பலரது பெயர்கள் நீக்கப்பட்டுத் தாம் விரும்பியவர்களின் பெயர்களைப் பதிவு செய்து பரீட்சை நடத்தி நியமனம் வழங்கியுள்ளார்கள்.

புதிதாகத் தெரிவாகும் பாதுகாப்பு ஊழியர்களின் ஜீ.சீ.ஈ சாதாரண தர,உயர்தரபரீட்சைப்பெறுபேறுப் பத்திரத்தைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி குறித்த பத்திரங்கள் உண்மையானவையா என்று பரிசீலிப்பது வழமை. ஆனால் யாழ்.பல்கலைக்கழகம் பரீட்சைப் பகுதிக்கு அவ்வாறு அனுப்பிஉறுதிப்படுத்து வதில்லை. 2009 ஆம் ஆண்டிலிருந்து இந்த நிலைமையே உள்ளது என்று சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (த-4)

# வலி.வடக்கு மீள்குடியமர்வு விவரங்கள் யாவும் உள்ளன

### புதிதாகப் பதிவு எதுவுமில்லை

யாழ்ப்பாணம், ஜன. 22

வலி.வடக்கு மக்களின் மீள்குடியமர்வு தொடர்பிலான சகல விவரங்களும் எங்களிடம் இருக்கின்றன. எனவே, வலி.வடக்கு மீள்குடியமர்வு தொடர்பில் எந்தப் பதிவுகளையும் மக்கள் மேற்கொள்ளத் தேவையில்லை. அவ்வாறு பதிவுகள் மேற்கொள்வதாயின் அறியத் தரப்படும் என்று வலி.வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபால சிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும்உறுப்பினர்கள்,வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் வலி.வடக்கு மக்களின் மீள்குடியமர்வு தொடர்பில் கரிசனையுடன் கவனமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

மேலும் வலி.வடக்கு மக்களின் மீள்குடியமர்வு தொடர்பிலான பதிவுகள் யாவும் எங்களிடம் இருக்கின்றன. கடந்த காலங்களில் அந்தப் பதிவுகள் சீராக மேற்கொள்ளப்பட்டன. அதற்குரிய ஆவணங்கள் யாவும் எங்களிடம் தயாராக இருக்கின்றன. எனவே தற்போது எந்தவிதமான பதிவுகளையும் மேற்கொள்ள வேண்டியதில்லை. அவ்வாறு ஏதாவது பதிய வேண்டிய தேவை ஏற்படின் அது தொடர்பில் அறிவிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-5)

# நட்சத்திரங்களின் ஒன்றுகூடல்





1980 துகளின் பிரபல சினிமா நட்சத்திரங்களான ரஜினிகாந்த், கமல் ஹாசன், சிரஞ்சீவி, மம்முட்டி, மோகன்லால் உள்ளிட்ட நடிகர்கள் மற்றும் நடிகைகள் தங்களது நட்பை புதுப்பித்துக் கொள்ளும் விதமாக வருடத்தில் ஒருநாள் ஏதாவது ஒரு நட்சத்திர விடுதியில் சந்திக்கின்றனர். அதுபோல் இந்த ஆண்டும் அதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றது. ராதிகாவின் மகள் ரேயன் இதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மூத்த நடிகர்களுடன் இன்றைய நட்சத்திரங்களான சிம்பு, வரலட்சுமி, வேதிகா, மஹத், வைபவ், நீது சந்திரா உள்ளிட்ட பலர் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர்.

ரஜினி மற்றும் கமலுக்கு சிம்புவும், ஸ்ரீபிரியாவுக்கு நீதுவும். சில்க் ஸ்மிதாவுக்கு பிந்து மாதவி மற்றும் நமீதாவும் மரியாதை செய்யும் விதமாக குறித்த நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர்.

மதுபாலா முதன்முறையாக நடனம் ஆட உள்ளார். கோவை சரளா, மனோபாலா நகைச்சுவை நாடகத்தில் பங்கேற்கின்றனர். மேலும் பல நடிகர்களுக்கு சினிமாத்துறை வழிகாட்டியாக விளங்கிய இயக்குநர் கே.பாலசந்தருக்கு அனைத்து நட்சத்திரங்களும் அஞ்சலி செலுத்துகின்றனர். இதைத்தவிர 1980 ஆம் ஆண்டுகளில் சாதித்த நடிகர், நடிகைகளின் ஒலி–ஒளி நிகழ்ச்சியும் இடம்பெற உள்ளது.

## ரிலாக்ஸா வாசியுங்க...

### புதுப் பொன்மொழிகள்

1. இரகசியத்தை வெளிப்படுத்தியவனுக்கும், துக்கத்தை வெளிப்படுத்தாதவனுக்கும் மனதில் நிம்மதி இருக்காது.

2. எல்லோரையும் நம்புவது அபாயகரமானது. ஒருவரையும் நம்பாமல் இருப்பது அதைவிட அபாயகரமானது.

3. எல்லாத் துன்பங்களுக்கும் இரண்டு மருந்துகள் உள்ளன. ஒன்று காலம், இன்னொன்று மௌனம்.

4. எல்லோரும் தம்மை விட்டு விட்டு வேறு யாரையோ சீர்திருத்த முயலுகிறார்கள்.

5. ஆசையில்லாத முயற்சியால் பயனில்லை. முயற்சியில்லாத ஆசையால் பயனில்லை.

6. நேற்றைய பொழுதும் நிஜமில்லை. நாளைய பொழுதும் நிச்சயமில்லை. இன்று மட்டுமே எமது கைகளில்...

7. பழைமையைப் பற்றி ஒன்றுமே தெரியாமல் புதுமையைச் சிறப்பாகப் படைக்க முடியாது.

8. தவறு நேர்ந்து விடுமோ என்று அஞ்சி அஞ்சி எந்தச் செயலையும் செய்யாமல் பின் வாங்குவது இழிவானது.



## யானைகளின் அட்டகாசம்



யானைகள், மனிதர்களினால் சட்டவிரோதமாக துன்புறுத்தப்படுவதனாலும் கொல்லப்படுவதனாலும் யானைகள் அச்சத்துக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றன. இதனால் மனிதர்கள் மீது கொண்ட கோபமோ என்னவோ, அடிக்கடி யானைகளின் அட்டகாசங்கள் அதிகரித்த வண்ணமே உள்ளன. அவ்வாறான யானையொன்று, கார் ஒன்றின் மீது ஏறி, காரை நொருக்கிய சம்பவம் தொடர்பிலான காணொலியொன்று வெளியாகியுள்ளது. தாய்லாந்தில் அமைந்துள்ள காவோயை தேசிய பூங்காவிலிருந்து தப்பி வந்த யானையொன்று, வீதியால் வேகமாக வந்துகொண்டிருந்த கார் ஒன்றின் மீது ஏறி காரை நொறுக்கியுள்ளது. குறித்த யானை, தனது முன்னங் காலால் கார் மீது ஏறி நின்றுள்ளது. பின்னர் காரில் அமர்ந்தும் உள்ளது. இந்தச் சம்பவத்தால், காரின் உள்ளே இருந்த வர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** தன்னம்பிக்கை அதிகரிக்கும். முயற்சிகளில் சாதகமான பயன் கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கெட்ட கனவுகள் தோன்றலாம். நட்பாக இருந்தவர்கள் பிரிந்து செல்லலாம்.

**இடபம்:** தொழில் வியாபாரம் வழக்கம்போல் நடக்கும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலைச் சந்திக்க வேண்டிஇருக்கும்.

**மிதுனம்:** குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. குடும்பத்தில் விட்டுக்கொடுத்துப் பேசுவது நன்மை தரும். பிள்ளைகளுக்காக சில பணிகளைக் கவனிக்க வேண்டி இருக்கும்.

**கடகம்:** பெண்கள் எடுக்கும் முயற்சிகளில் சாதகமான பயன் கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மாணவர்களுக்கு கல்வி தொடர்பான விடயங்களில் எதிர்பார்த்த பயன் கிடைக்கும்.

**சிங்கம்:** எடுத்த காரியத்தில் வெற்றி உண்டாகும். மனதில் தைரியம் கூடும். எல்லா கஷ்டங்களும் நீங்கி சுகம் உண்டாகும். தீர்க்கமான சிந்தனையும் தெளிவான முடிவெடுக்கும் திறமையும் உண்டாகும்.

**கன்னி:** எதிர்பார்த்த காரிய வெற்றி கிடைக்கும். வீண் கவலை ஏற்படும். வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. அயலில் இருப்பவர்களுடன் சில்லறைச் சண்டைகள் ஏற்படும்.

**துலாம்:** கடன்களை அடைப்பதில் வேகம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டியிருக்கும். உங்களது வேலையைக் கண்டு மேலதிகாரிகள் திருப்தியடைவார்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் நிலவிய இறுக்கமான நிலை மாறும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை உண்டாகலாம். கவனம் தேவை. நண்பர்கள், உறவினர்களிடம் பக்குவமாகப் பேசுவது நன்மை தரும்.

**தனுசு:** எந்தக் காரியத்திலும் சாதகமான பலன் பெற வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. பயணங்களின் போது கவனம் தேவை. உங்களது நடவடிக்கைகள் பெற்றோருக்குத் திருப்தியைத் தரும்.

**மகரம்:** வாக்கு வன்மையால் சகல நன்மைகளும் கிடைக்கப் பெறுவீர்கள். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாக நடந்து முடியும்.

**கும்பம்:** தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். நிதி நிலைமை சீர்படும். உத்தியோகத்தில் இருப்பவர்களது வேலைப்பளு குறையும். எதிர்பார்த்த இடத்துக்கு மாற்றம் கிடைக்கலாம்.

**மீனம்:** குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் மூலம் இருந்த மன வருத்தம் நீங்கி அவர்களுடன் சந்தோஷமாக வெளியே சென்று வருவீர்கள். மனக் கவலை நீங்கி நிம்மதி உண்டாகும்.

# செய்திகள்

## நேற்று திரண்டனர் வேலையற்ற பட்டதாரிகள்

### வேலை வாய்ப்பு வழங்கக் கோரி



யாழ்ப்பாணம், ஜன. 22
வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த வேலையற்றபட்டதாரிகள்நேற்று யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப் புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அரசியல் தலையீடற்ற வேலை வாய்ப்பை வலியுறுத்தி வேலை யற்ற பட்டதாரிகள் இந்தக் கவன வீர்ப்பில் பங்கேற்றனர்.

நேற்று முற்பகல் 10 மணியள வில் யாழ். பழைய பூங்கா பகுதி யில் நடைபெற்ற இந்தக் கவன வீர்ப்புப் போராட்டத்தில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுமார் 800ற்கும் மேற்பட்ட பட்டதாரி கள் கலந்துகொண்டனர்.

சுமார் 1 மணி நேரம் வரை நடை பெற்ற இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தின் முடிவில் வட மாகாண வேலை யற்ற பட்டதாரிகள் சமூ கத்துக்கான நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட் டது. இதில் தலைவராக ஆர். பிரதாபன் தெரிவு செய்யப்பட் டார். இதனைத் தொடர்ந்து முதற் கட்டமாகத் தமது கோரிக்கை களை விளக்கிய மனுவொன்றை ஆளுநரின் உதவிச் செயலாளர் ஜே.எக்ஸ்.செல்வநாயகத்திடம் தலைவர் கையளித்தார்.

இதேவேளை, இந்த மனுக்கள் வடமாகாண முதலமைச் சர் க.வி.விக்னேஸ்வரன், யாழ். மாவட்ட அரச அதிபர் சு.அருமைநாயகம் ஆகி யோரிடமும் கையளிக்கப் பட்டன.

மனுவைப் பெற்றுக் கொண்ட ஆளுநர் செயலகத்தின் உதவிச் செயலாளர் ஜே.எக்ஸ்.செல்வ நாயகம், இது தொடர்பில் ஆளு நருக்குத் தெரியப்படுத்தி வட மாகாண பட்டதாரிகள், டிப்ளோமா பட்டதாரிகள் தொடர்பில் கவன மெடுப்பதாகத் தெரிவித்தார் என்று கூறப்பட்டது. (த-10-20)

## வடிகால்களுக்கு கிருமிநாசினி விசிறும் பணி

யாழ். மாநகரப் பகுதியில் உள்ள வடிகால் மற்றும் நீர்தேங்கும் நிலைகளும் நுளம்புக் குடம்பி களை அழிப்பதற்கான அபேற் என்ற கிருமிநாசினி விசிறப் பட்டு வருகின்றது.

குறிப்பாகக் கரையோரப் பகுதி மற்றும் யாழ். நகரை அண்டிய பகுதிகளில்நுளம்புகளின்பெருக் கம் அதிகரித்துள்ளது.

நுளம்பைக் கட்டுப்படுத்தும் முக மாக அபேற் கிருமிநாசினி விசி றும் பணிகளை சுகாதாரப் பகுதி யினர் முன்னெடுத்துள்ளனர்.

அதனை விட நுளம்பு குடம்பிகளை அழிக்கும் மீன்குஞ்சுகளும் நீர் நிலைகளில் விடப்பட்டு வரு கின்றன. (த-17)



கிணறுகளில் கழிவு ஒயில் கலந்து குடிதண்ணீர் மாசடைந்து வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் இணைந்து நேற்று வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் பத்து நிமிடங்கள் வரை இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. பாட சாலை முடிந்து வெளியேறிய மாணவர்களும் ஆசிரியர் களுமே வீதியில் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.(த-86)

## யாழ். வருகிறார் சஜித் பிரேமதாச

### சமுர்த்திப் பயனாளிகளைச் சந்திக்க

யாழ்ப்பாணம், ஜன. 22
சமுர்த்தி உத்தியோகத்தர்களை யும், சமுர்த்திப் பயனாளி களை யும் சந்திப்பதற்காக அடுத்த மாதம், வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரும், ஐ.தே.க பிரதித் தலைவருமான சஜித் பிரேமதாச யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேன தலை மையில் புதிய அரசு கடந்த 9 ஆம் திகதி அமைக்கப்பட்டது. இதன் அமைச்சர்களாகப் பொறுப் பேற்றுக் கொண்டவர்கள் ஒவ் வொரு மாவட்டத்துக்கும் சென்று, கடந்தகாலங்களில் அந்த அமைச் சுகளினூடாக மேற் கொள்ளப் பட்ட விடயங்கள் தொடர்பில் ஆய்வு செய்து வருகின்றனர்.

அதனடிப்படையில், ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினரும், பெண்கள் விவகாரப் பிரதியமைச்சருமான திருமதி விஜயகலா மகேஸ்வரனின் ஏற்பாட்டில், வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாச யாழ்ப்பாணத்துக்கு எதிர்வரும் பெப்பரவரி மாதம் 6 ஆம் திகதி வருகை தரவுள்ளார்.



மானிப்பாய், வட்டுக்கோட்டை, கோப்பாய், கிளிநொச்சி, வடம ராட்சி, தென்மராட்சி, கிளி நொச்சி ஆகிய இடங்களுக்குச் சென்று சமுர்த்தி உத்தியோகத் தர்கள், சமுர்த்தி வங்கி முகாமை யாளர்கள், சமுர்த்திப் பயனாளி களைச் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)




## அரசியல் சிபாரிசுகளில் தகுதியற்றோருக்கு வேலை

### தகுதிகள் இருந்தும் நாம் புறக்கணிக்கப்பட்டுள்ளோம் நியாயம் கோருகிறது வேலையற்ற பட்டதாரிகள் சமூகம்

யாழ்ப்பாணம், ஜன. 22
சரியான வினைத்திறனான தகைமைகளைக் கொண்டிருந்தும் வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்களில் அரசியல் தலையீடுகளால் புறக்கணிக்கப்பட்டுள்ளோம். கடந்த காலங்களில் சில அரசியல் தலைவர்களின் சிபாரிசுகளின் அடிப்படையில் தகுதியற்றவர்கள் வேலைவாய்ப்புக்களில் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர். வேலை வாய்ப் புக்களில் உள்ளீர்ப்பதற்குரிய சட்டரீதியான நடைமுறைகள் நாட்டில் இருந்த போதும் கடந்த காலங்களில் வட மாகாணத்தில் இவை பின் பற்றப்படாமல் பலருக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள் ளன. இது மிகவும் வேதனையளிக்கின்ற விடயமாகும் என வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் சமூகம் தெரி வித்துள்ளது.

நேற்றைய தினம் நடத்திய கவனவீர்ப்புப் போராட்டத்தின் முடிவில் வட மாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், யாழ் மாவட்ட அரச அதிபர் சு.அருமைநாயகம், ஆளுநரின் உதவிச் செயலாளர் ஜே. எக்ஸ்.செல்வநாயகம் ஆகியோரிடம் கையளித்துள்ள மனுவிலேயே வடமாகாண பட்டதாரிகள் சமூகம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளை வேலைவாய்ப்புக்களில் உள்ளீர்க்கக் கோரல் தொடர்பானது. வடமாகாணத்தை சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகளாகிய நாம் நாட்டில் ஏற்பட்டுள்ள உயி ரோட்டமான மாற்றங்களை வரவேற்கின்றோம். இம்மாற்றங்கள் நாட்டில் அனைத்துத் துறை ரீதியாகவும் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித சந்தேகங்களும் இல்லை. இதனடிப் படையில் ஆக்கபூர்வமான பணிகளை முன்னெடுத்து வருகின்ற புதிய தேசிய அரசுக்கு எமது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின் றோம்.

பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறிய பட்டதாரிகளாகிய நாம் 2012ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை எந்தவொரு வேலை வாய்ப்புக்களையும் பெற்றுக்கொள்ள முடியாத இக்கட்டான நிலை மைகளிலேயே இருந்து வருகின்றோம். சரியான வினைத்திறனான தகைமைகளைக் கொண்டிருந்தும் வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங் களில் அரசியல் தலையீடுகளால் புறக்கணிக்கப்பட்டுள்ளோம். கடந்த காலங்களில் சில அரசியல் தலைவர்களின் சிபாரிசுகளின் அடிப்படையில் தகுதியற்றவர்கள் வேலைவாய்ப்புக்களில் உள் ளீர்க்கப்பட்டுள்ளனர். வேலை வாய்ப்புக்களில் உள்ளீர்ப்பதற்குரிய சட்டரீதியான நடைமுறைகள் நாட்டில் இருந்தபோதும் கடந்த காலங் களில் வடமாகாணத்தில் இவை பின்பற்றப்படாமல் பலருக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. இது மிகவும் வேதனையளிக் கின்ற விடமாகும்.

இது மட்டுமல்லாமல் தேர்தல் காலங்களில் வேலை வாய்ப்புக் களைப் பெற்றுத் தருவதாகக் கூறிப் பல தடவைகள் அலைக்கழிக் கப்பட்டு நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம். தற்போதய அரசியல் சூழ் நிலை மாற்றத்துடன் எமக்கான சகல வாய்ப்புக்களும் திறப்பதற் கான சூழ்நிலைகள் தோன்றியிருக்கின்றன. புதிய அரசின் பிரதமர் 10 லட்சம் வேலைவாய்ப்புக்களை வழங்குவதாக உறுதியளித் திருந்தார்.

எனவே வடமாகாணத்தில் கடந்த 2012ஆம் ஆண்டு முதல் பட்டம் பெற்று வெளியேறிய 5 அணிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான வர்கள் உள்ளனர். இவர்களது நிலையைக் கருத்தில் கொண்டு பாகு பாடின்றி வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்கப் புதிய அரசு ஆவன செய்யவேண்டும். – என்றுள்ளது. (த-10-20)

## தற்காலிக நடைபாதை கடைகள் அகற்றல்

கிறிஸ்மஸ், புதுவருடதினங்களை யொட்டி தற்காலிகமாக நடை பாதைக் கடைகளை வைக்க அனுமதிக்கப்பட்டவர்கள் தமக்கு வழங்கப்பட்ட பகுதிகளில் இருந்து கடைகளை உடனடியாக அகற் றுமாறு யாழ். மாநகரசபை ஆணை யாளர் எஸ்.பிரணவநாதன் அறிவித்திருந்தமைக்கமைய நேற்றையதினம் மாநகரப் பகுதி களில் இருந்த தற்காலிக கடை கள் அகற்றப்பட்டுள்ளன.

யாழ்.வணிகர் கழகத்தின் கோரிக் கையை அடுத்து உடனடியாக இந்த நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டது. அகற்றாதவர்களின் கடைகள் பொலிஸாரின் உதவி யுடன் அப்புறப்படுத்த மாநகர சபை நடவடிக்கைகளை எடுத் துள்ளது. (த-7)

## சிவாஜியின் பிரேரணைகள் அடுத்த அமர்வில் விவாதம்

யாழ்ப்பாணம், ஜன 22

தமிழ் மக்களின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா அல்லது ஐரோப்பிய ஒன்றியம் மத்தியஸ்தம் வகிக்கக் கோரும் ஆளுங்கட்சி உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின்பிரேரணை,ஆலோசனையின் பின்னர் அடுத்த அமர்வில் எடுத்துக் கொள்ளப்படும் என்று வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபையின் கடந்த திங்கட்கிழமைய அமர்வில் எடுத்துக் கொள்வதற்காக ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இரண்டு பிரேரணைகளைச் சமர்ப்பித்திருந்தார். அவை நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படவில்லை. இதன்போது அவையில், தனது பிரேரணைகள் உள்ளடக்கப்படாமைக்கான காரணத்தை அவர் கேட்டார்.

இனப்படுகொலை தொடர்பிலான பிரேரணையுடன் நாங்கள் முரண்பாடானவர்கள் அல்லர். இலங்கையில் நடந்தது இனப்படுகொலைதான் என்பதை எங்கும் நாங்கள் சொல்வோம். கடந்த முறை இது தொடர்பில் தெளிவான தீர்மானத்தை நாம் எடுத்திருந்தோம். முதலமைச்சர் இந்தப் பிரேரணையை அடுத்த அமர்வில் சமர்ப்பிப்பார். அதற்குரிய தகவல்களை முதலமைச்சருக்கு வழங்குங்கள் என்று அவைத் தலைவர் குறிப்பிட்டார்.

இதனை ஏற்றுக்கொண்ட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், தனது மற்றைய பிரேரணை ஏன் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று கேட்டதுடன், இந்த [illegible]ங்கள அரசுகள் எமது இனப் பரச்சினை பற்றிப் பேசமாட்டார்கள். எனவே தமிழ் மக்களின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா அல்லது ஐரோப் பிய ஒன்றியம் மத்தியஸ்தம் வகிக்கவேண்டும். இந்த விடயத்தை ஏன் அமர்வில் சேர்க்கவில்லை என்றார் சிவாஜிலிங்கம்.

இதன்போது பதிலளித்த அவைத் தலைவர், இந்தப் பிரேரணை தொடர்பில் நாம் கலந்துரையாடி அடுத்த அமர்வில் முன்வைக்கலாம் என்றார். இதனை மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஏற்றுக் கொண்டார். (த-5)

# காணிகள் சுவீகரிப்பை நிறுத்துங்கள்

### வடக்கு மாகாண முதலமைச்சர் காணி அலுவலருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜன 22

ஆனைக்கோட்டை கூழாவடியில் பொதுமக்களின் காணிகளைச் சுவீகரிக்க எடுக்கப்பட்ட முயற்சிகளை நிறுத்துமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட காணி சுவீகரிப்பு அலுவலருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, குறித்த காணி சுவீகரிப்பை நிறுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவிடம், பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனும் கோரிக்கை விடுத்துள்ளார்.



ஆனைக்கோட்டையில் 5 குடும்பங்களுக்குச் சொந்தமான 19 பரப்புக் காணியை இராணுவத்தினர் சுவீகரித்து நேற்று அதனைக் கையளிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சரும்,வடக்குமாகாண காணி அமைச்சருமான க.வி. விக்னேஸ்வரன், யாழ்.மாவட்ட காணி சுவீகரிப்பு அலுவலருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதில், குறித்த காணியை சுவீகரிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு பணித் துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதியமைச்சருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நேரடியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். இதன்போது குறித்த காணியை சுவீகரிக்கும் நடவடிக்கை கடந்த அரசினால் மேற்கொள்ளப்பட்டது என்றும், இதனை உடனடியாக கைவிடுமாறும் பின்னர் மீள்பரிசீலனை செய்து அதனைப் பொதுமக்களிடம் கையளிக்குமாறும் கோரியுள்ளார்.

இதனையடுத்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேயவர்த்தனவிடம் காணி சுவீகரிப்பு நடவடிக்கையை ஒத்திவைக்குமாறு பணித்துள்ளார். (த-5)



மூத்த ஊடகவியலாளர் மா.ஞானலிங்கம் எழுதிய "விதைத்ததில் விளைந்தது" வலிகிழக்கு வலம் பாகம்1 நூல் வெளியீட்டு விழா புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியில் நடைபெற்றது. வெளியீட்டு விழாவில் உதயன் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் நூலை வெளியிட்டு வைக்க வைத்திய கலாநிதி வை.தியாகராஜா பெற்றுக் கொள்கிறார். (த-11)

## மஹிந்தவை வரவேற்க மாகாண சபையின் நிதி

### அரசியல் அழுத்தம் என்கிறார் குருகுலராஜா

யாழ்ப்பாணம், ஜன 22

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்குக் கடந்த வருடம் மஹிந்த வருகை தந்த போது, வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணப் பணிப்பாளர் ஆகியோருக்கு விடுக்கப்பட்ட அரசியல் அழுத்தம் காரணமாகவே, மாகாண நிதியில் தேசிய பாடசாலைகளுக்கான புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார்.



வடக்கு மாகாண சபையின் கடந்த திங்கட்கிழமைய அமர்வில், சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரனினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மஹிந்த வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு வருகை தந்து, ஆய்வுகூடங்களைத் திறந்து வைத்திருந்தார். இந்த வருகைக்காகப் பாடசாலைகளை அழகுபடுத்தும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. மாகாணப் பாடசாலைகள் தவிர்ந்து தேசியப் பாடசாலைகளிலும், மாகாண கல்வி அமைச்சின் நிதியில் வேலைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதற்கு முழுமையான அரசியல் அழுத்தம் வழங்கப்பட்டது. இதனை நாம் மேற்கொள்ளாவிட்டால் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி அதிகளவிலான நிதிகளைப் பயன்படுத்துவார் என்ற காரணத்தினால் அமைச்சரவை அனுமதியைப் பெற்று நிதி விடுவிக்கப்பட்டது.

9.49 மில்லியன் சேமிப்பு நிதியாக இருந்தது. அதிலிருந்து 8.87 மில்லியன் ரூபா இதற்காகச் செலவு செய்யப்பட்டது என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் பதிலளித்த உறுப்பினர் கலாநிதி க.சர்வேஸ்வரன், ஒவ்வொருவரும் தங்களை நியாயப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்றும் இதனை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் குறிப்பிட்டிருந்தார். (த-5)

## ஆளுநரின் ஊழல்கள் விசாரணை வேண்டும்

### வடக்கு மாகாண சபையில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன 22

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கடந்த காலங்களில் மேற்கொண்ட ஊழல்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபையில் கடந்த திங்கட்கிழமை கோரிக்கை விடுத்தது.

வடக்குமாகாணசபையின் கடந்த திங்கட்கிழமை அமர்வில் உரையாற்றிய, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர் அஸ்மின், முன்னைய ஆளுநர் பரமசிவன் கழுத்திலிருந்த பாம்பாக இருந்தார். முன்னைய ஆளுநர் கடந்த காலங்களில் மேற்கொண்ட ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். (த-5)

## ச.தொ.சவில் நேற்று முதல் மதுபான விற்பனை தடை

கொழும்பு, ஜன. 22

நாட்டிலுள்ள ச.தொ.ச. விற்பனை நிலையங்களில் மதுபானங்கள் விற்பனை செய்வது நேற்று முதல் தடை செய்யப்பட்டுள்ளதாக உணவுப் பொருள்கள் பாதுகாப்பு அமைச்சர் காமினி ஜயவிக்ரம தெரிவித்துள்ளார்.

உணவுப் பொருள்கள் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை ஏற்ற பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்களில் மக்களுக்குநன்மைபயக்கும்பொருள்கள் மாத்திரமே விற்பனை செய்யப்படவேண்டும். இத னால் ச.தொ.சவில் மதுபானங்கள் விற்பனைசெய்யப்படமாட்டாது.

மேலும், லங்கா ச.தொ.சவில் இடம்பெற்ற ஊழல் குற்றச்சாட்டுக்களை ஆராய்ந்து எதிர்வரும் பத்து நாள்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இரண்டு பேர் கொண்ட குழுவையும் நியமித்துள்ளேன். இந்தக் குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்றதும், ஊழல், மோசடிகளுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்–என்றார். (த-5)

# செய்திகள்



## மட்டக்களப்பு - கல்முனை வீதி விஸ்தரிப்பு பணிகள் ஆரம்பம்

கல்முனை, ஜன, 22

நீண்டகாலம் புனரமைப்புச் செய்யப்படாமல் இருந்து வந்த பழைய மட்டக்களப்பு – கல்முனை வீதியின் வீதி விஸ்தரிப்புப் பணிகளின் முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி நகர சபைத் தவிசாளர் எஸ்.எச்.எம்.அஸ்பர் தெரிவித் தார்.

குறித்த வீதி விஸ்தரிப்புப் பணிகளின் முதற்கட்டமாக சட்டவிரோத கட்டடங்கள், மதில்கள் காத்தான்குடி நகர சபையால் உடைக்கப்பட்டு வருகின்றன. இதன்போது வீதியின் மத்தியிலிருந்து வீதி அபிவிருத்திக்குத் தேவையான 5 மீற்றர் பகுதிக்குள் உள்ள கட்டடங்கள், மதில்கள் போன்றவை காத்தான்குடி நகரசபையின் பைக்கோ இயந்திரம் மூலம் கட்டம் கட்டமாக உடைக்கப்பட்டு வருகின்றன. சட்டவிரோத கட்டடங்கள், மதில்கள் உடைக்கும் இந்தப் பணியில் காத்தான்குடி நகர சபைத் தவிசாளர் எஸ்.எச்.எம். அஸ்பர், பிரதித் தவிசாளர் எம்.ஜெஸீம், காத்தான்குடி நகர சபை உறுப்பினர் சியாட் உட்பட நகர சபை உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

மேற்படி சட்டவிரோத கட்டடங்கள், மதில்களை அகற்றுமாறு வீட்டு உரிமையாளர்களுக்கு காத்தான்குடி நகர சபை அறிவித்திருந்தும் அதனை வீட்டு உரிமையாளர்கள் அகற்றாத காரணத்தால் காத்தான்குடி நகர சபை அவற்றை அகற்றி வருவதாக அதன் தவிசாளர் தெரிவித்தார்.

குறித்த வீதி இரண்டு வழி போக்குவரத்து செய்யக்கூடிய வகையில் அமைக்கப்படவுள்ளது. (வ–10)

## இ.போ.ச. ஊழியர் சங்க வவுனியா அலுவலகம் திறப்பு

வவுனியா, ஜன.22

வவுனியா இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தேசிய ஊழியர் சங்கம் கடந்த சனிக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் றோகன கமகே மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் கருணதாச ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய முகாமையாளர் எஸ்.அஸ்கர், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாலை முகாமையாளர் எஸ்.சந்திரன் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாரதிகள், ஊழியர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் றோகன கமகே தேசிய ஊழியர் சங்கத்தைத் திறந்து வைத்து உரை நிகழ்த்துகையில்,

"கடந்த காலங்களில் அரசானது மக்களின் தலைகளில் சுமையை ஏற்றியிருந்தது. அந்த அரசை நீங்கள் சுமக்க முடியாமல் தவித்தீர்கள், பார்க்கும் இடமெல்லாம் அரச சார்புச் சுவரொட்டிகள், பதாகைகள் காணப்பட்டன. எந்த வேலையும் செய்ய முடியாமல் தலையீடுகள் நிலவின. ஆனால் கடந்த 10 தினங்களுக்குள் மக்களுக்கான வேலைத் திட்டங்களைச் செய்யக் கூடியதாக இருந்தது" என்று தெரிவித் தார். (வ–421)

## மன்னாரில் 'யு.என்.ஹெபிட்டாட்' வேலைத்திட்டங்கள் நிறைவுக்கு

**அலுவலக உபகரணங்கள் மன்னார் நகர சபையிடம் கையளிப்பு**

மன்னார் நகர சபையுடன் இணைந்து செயற்பட்டு வந்த 'யுஎன். ஹெபிட்டாட்' என்று அழைக்கப்படும் 'ஐக்கிய நாடுகள் வாழ்வக' அமைப்பின் வேலைத் திட்டங்கள் மன்னாரில் முடிவடைந்த நிலையில் குறித்த அமைப்பு தாம் பயன்படுத்தி வந்த ஒரு தொகுதி அலுவலக உபகரணங்களை மன்னார் நகர சபையிடம் செவ்வாய்க்கிழமை காலை வைபவ ரீதியாகக் கையளித்துள்ளது.

மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது. இதன்போது மன்னார் நகரசபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், மன்னார் நகரசபைச் செயலாளர் றொனால்ட் லெம்பேட், யு.என்.ஹெபிட்டாட் அமைப்பின் திட்ட முகாமையாளர் இந்து வீரசூரி, யு.என்.ஹெபிட்டாட் அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் யூட் பிரசன்னா மற்றும் அந்த அமைப்பின் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போதே குறித்த அமைப்பினர் பயன்படுத்தி வந்த ஒரு தொகுதி அலுவலக உபகரணங்களை மன்னார் நகர சபையின் பயன்பாட்டுக்காக மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசத்திடம் கையளித்தனர்.

இந்த வகையில் குறித்த அமைப்பு தொடர்ச்சியாக கடல் நீர் உட்சென்று பாதிப்படையும் மன்னார் பள்ளிமுனை 49 வீட்டுத்திட்டம் உட்பட அந்தப் பகுதியில் கடல் நீர் கிராமங்களுக்குள் உட்செல்ல முடியாத வகையில் 9 மில்லியன் ரூபா செலவில் தடுப்புச் சுவரை அமைத்துள்ளது. அத்துடன் துருசு, வீதிகள் ஆகியவற்றையும் குறித்த பகுதியில் அமைத்துள்ளது. இதனால் அந்தப்பகுதியைச் சேர்ந்த சுமார் 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்துள்ளதாக மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ் தெரிவித்தார். (வ–56)

## வெங்காயச் செய்கையில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்



அளவெட்டி,ஜன.22

அளவெட்டி, அம்பனை, தெல்லிப்பழை, பன்னாலைப் பகுதிகளில் அதிகளவான நிலப்பரப்பில் வெங்காயச் செய்கையில் அந்தப்பகுதி விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

வெங்காயச் செய்கைக்காக நிலம் பண்படுத்தப்படுவதையும் பரவலாக வெங்காயம் நடுகை செய்யப்பட்டு வருவதையும் காணக் கூடியதாக உள்ளது. தற்போது சந்தையில் வெங்காயத்தின் விலை கிலோவொன்று 80 ரூபா முதல் 140 ரூபா வரை உயர்வடைந்து செல்வதால் தாம் ஏனைய உப உணவுப் பயிர்களை நடுகை செய்வதைக் குறைத்து வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளதாக அளவெட்டிப் பகுதி வெங்காயச் செய்கையாளர்கள் கூறினார்கள்.

இதேவேளை– ஏனைய உப உணவுப் பயிர்களின் உற்பத்திக் குறைவால் பயிற்றை, பாவற்காய், கத்திரி, பச்சை மிளகாய், வெண்டி போன்ற மரக்கறி வகைகளும் சந்தையில் கூடிய விலைக்கு விற்கப்படுகின்றன. (வ–36)

## இணையத்தள வசதியுடன் மாணவருக்கு கணினிகள்

தென்மராட்சி, ஜன. 22

சாவகச்சேரித் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வ.ந.நவரத்தினத்தின் நினைவாக அன்னாரின் குடும்பத்தினரால் சாவகச்சேரி மாணவர்களின் கற்றல் தேவைகளுக்காக இணையத்தள வசதிகளுடனான 3 கணினிகள் வழங்கப்படவுள்ளன என்று நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபையின் பொது நூலகத்தில் லண்டன் வாழ் மருத்துவர் வே. சிவபாதசுந்தரம் வழங்கிய இணையத்தள வசதியுடன் மாணவர்களின் கற்றல் தேவைக்குக் கணினிகள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு கூறினார்.

பொது நூலகத்தில் பிரதேச நலன் விரும்பி ஒருவரால் வழங்கப்பட்ட இணையத்தள வசதியுடனான இரண்டு கணினிகளுடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் குடும்பத்தினரால் வழங்கப்படும் மூன்று கணினிகளும் சேர்க்கப்பட்டு பிரதேச மாணவர்களின் கற்றல் தேவைக்கு வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ–9)

## கமநல சேவை நிலையத்துக்கு எதிர்க்காணியில் பாதீனியம்

**கண்டும் காணாத உத்தியோகத்தர்கள்**

அளவெட்டி,ஜன.22

தெல்லிப்பழை கமநல சேவை நிலையத்துக்கு முன்பாக உள்ள தோட்டக் காணிகளிலும், கைவிடப்பட்ட குடியிருப்புக் காணிகளிலும் அதிகளவில் பாதீனியம் செழித்து வளர்ந்து பூத்துக் காணப்படுகிறது.

கமநல சேவை நிலையத்துக்கு கடமைக்காக வரும் பணியாளர்களும் தேவைகளுக்காக வரும் விவசாயிகளும் அதனைப் பார்த்துக் கொண்டு செல்கிறார்களே தவிர அதனை அழிப்பதற்கான எந்த ஏற்பாடுகளும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

இதேவேளை– இதற்கு அருகில் கால்நடை வைத்தியசாலையும் உள்ளது. பாதீனியம் பெருகி வளர்ந்து நிற்கும் காணியில் வெங்காயமும் நடுகை செய்யப்பட்டுள்ளதையும் காணக் கூடியதாகவுள்ளது.

பிரதேச செயலகம், சமுர்த்தி அலுவலகம் என்பனவும் அயலில் அமைந்துள்ளன.

இதேவேளை– வட மாகாண விவசாய அமைச்சரின் பாதீனியம் ஒழிப்பு தொடர்பாக விழிப்புணர்வு விளம்பரப் பலகையும், பாதீனியத்தை ஒழிப்பதில் கவனம் செலுத்தாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விளம்பரப் பலகையும் இந்தப் பிரதேசத்தில் காணப்படுகிறது. (வ–36)

# உலகச் செய்திகள்

## நம்பிக்கைக்குரிய நாடுகளின் பட்டியலில் இந்தியா 2 ஆம் இடம்

சென்னை, ஜன. 22

உலகில் உள்ள நாடுகளில் நம்பிக்கைக்கு உரிய நாடுகளின் பட்டியலில் இந்தியா 2ஆம் இடத்தைப் பிடித்துள்ளது.



சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த டாவோஸ் ரிசோர்ட்என்றஅமைப்பு நடத்திய ஆய்வில், இங்கிலாந்து முதல் இடத்தையும், இந்தியா இரண்டாம் இடத்தையும், நெதர்லாந்து மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளன.

இந்தியாவில்தற்போது பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள நிலையில், இந்தியாவின் நம்பகத்தன்மை அதிகரித்திருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஆட்சி, வணிகம், ஊடகங்களை அடிப்படையாக வைத்து நடத்தப்பட்ட இந்த ஆய்வில், கடந்த ஆண்டு இந்தியா 5ஆவது இடத்தை வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி)

## ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தீவிரவாதத்தை ஒழிக்க போர்

### அமெரிக்க அதிபர் ஒபாமா தெரிவிப்பு

வொஷிங்டன், ஜன. 22

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தீவிரவாதத்துக்கு எதிராக போர் தொடுக்க விரைவில் நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படும் என அமெரிக்க நாடாளுமன்றத்தில் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.



இது குறித்து மேலும் அவர் தெரிவிக்கையில்:– ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒடுக்கப் போர் ஒன்றே தீர்வாகும். சர்வதேச பயங்கரவாதத்தை ஒடுக்கவே அமெரிக்கா கடமைப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். தற்போது அமெரிக்கப் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து வருகிறது. 1999ஆம் ஆண்டைப் போல் வேலைவாய்ப்பு அதிகரித்து வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ரி)

## உலகப் பொருளாதார உச்சி மாநாடு சுவிஸில்

சென்னை, ஜன. 22

உலகப் பொருளாதார அமைப்பின் ஐந்து நாள் உச்சி மாநாடு, சுவிற்சர்லாந்திலுள்ள தாவோஸ் நகரில் கலை நிகழ்ச்சிகளுடன் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

உலகம் முழுவதிலும் இருந்து 2,500க்கும் மேற்பட்ட அரசியல் தலைவர்களும், தொழிலதிபர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். இந்தியாவில் இருந்து மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி, எரிசக்தித் துறை அமைச்சர் பியூஸ் கோயல், தலைமைப் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்ரமணியன், மகாராஷ்டிர மாநில முதல்வர் தேவேந்திர பட்னவீஸ், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு உட்பட அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள் என 100க்கும் அதிகமானோர் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.



ஜேர்மனிப் பிரதமர் ஏஞ்சலா மேர்க்கல், பிரான்ஸ் அதிபர் பிரான்சுவா ஹொலண்டே, சீனப் பிரதமர் லீ கெகியாங், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், சுவிற்சர்லாந்து அதிபர் சைமனோட்டா சோமருகா உட்பட 40 நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். பொருளாதாரம் தொடர்பான கருத்தரங்குகள் உட்பட முக்கிய நிகழ்வுகள், நேற்று ஆரம்பமாகின. இதில், உலகப் பொருளாதாரத்தை மேம்படுத்துவது குறித்தும், தீவிரவாதத்துக்கு எதிராகப் போரிடுவது குறித்தும் விவாதிக்கப்பட இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ரி)





## உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் | A | 10,11,12,13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை, ஓவியம் மட்டும் | B | 6, 7, 8, 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும் | C | 3, 4, 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

### கவிதைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று.
கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.
1. ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்.
2. கற்றதன் வழி உயர்வு காண்போம்.

### கட்டுரைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 600 - 750 சொற்கள்.
1. புகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்.
2. மாகாணத்திற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்
3. எமது சடங்குகளில் புலம் பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்
4. எமது பண்பாடும் நாம் படும்பாடும்
5. நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்.

பிரிவு B பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 400- 550 சொற்கள்
1. எதிரகாலச் சந்ததியினருக்கான உலகு
2. கிராமியம் எம் உயிர மூச்சு
3. சுற்றாடல் பேணுவோம்
4. தமிழர் வாழ்வும் வளமும்

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)
பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ............................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
............................
கற்கும் பாடசாலை: ............................
தரம்: ...............
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ............................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ............................
ஆசிரியரின் பாடத்துறை: ............................
அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி ............................ அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.
அதிபரின் ஒப்பமும் பதவி முத்திரையும்
உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

### ஓவியப்போட்டி

| | |
|---|---|
| பிரிவு A தரம் 10,11,12,13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| பிரிவு B தரம் 6, 7, 8, 9 | பனை வளமும் நாமும் |
| பிரிவு C தரம் 3, 4, 5 | பண்டிகை நிகழ்வு |

உங்கள் ஓவிய ஆக்கங்கள் 35 செமீ x 45 செமீ (14 x18) அளவுடைய வெள்ளை பிறிஸ்டல் போட் அல்லது வெள்ளை நிற கென்ற் (kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர் சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

### மக்கள் வங்கி அனுசரணையுடன் மாபெரும் சிறுகதைப் போட்டி

பிரிவு A தரம் 10,11,12,13 மாணவர்களுக்கானது. சிறுகதையானது, மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.

People's Bank Sisu Udana

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ. 1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டித் தேர்வில் உள்ளடக்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்படிவத்தில் , பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

30 ஆவது அகவையில் உதயன்,
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

30 அகவையில் உதயன்

# கருத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கோணல் புத்தி கொள்ளாதிருக்க புதிய அரசு உறுதி எடுக்கட்டும்

♦ நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு, இந்த நாடாளுமன்றத்தில் ஒற்றை ஆட்சிக்கு உள்ளேயே தீர்வுகாணப்படும்.

♦ அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தமும், ஒற்றை ஆட்சிக்கு உள்ளேயே உள்ளடக்கப்பட்டுள்ளது.

♦ அரசமைப்புக்கான பதினெட்டாவது திருத்தம் முழுமையாக நீக்கப்படும். பத்தொன்பதாவது திருத்தத்தைக் கொண்டுவந்து, அதன் ஊடாக, நிறைவேற்று அதிகாரம் முற்றாக நீக்கப்படும்.

இம்மாதம் எட்டாம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மூலம் புதிய ஜனாதிபதி தெரிவான பின்னர், நாடாளுமன்றம் முதன்முதலாகக் கூடிய வேளையில், புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற் கண்ட தகவல்களை அங்கு வெளியிட்டார்.

இவற்றை ஆதரிப்பது போன்று, எதிர்க்கட்சியின் புதிய தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, சபையில் கருத் துத் தெரிவித்தார்.

நாட்டின் இறையாண்மையைப் பாதுகாத்து, பிரிவினை வாதத்துக்கு இடமளியாது, தேசியப் பிரச் சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

அதற்கு, தாம் பூரண ஆதரவை வழங்குவதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

அத்தோடு, தேசியப் பிரச்சினையான இன விவகாரத்துக்கு முன்னுரிமை அளிப்பதோடு, அதனை இந்த அரசாங்கம் பதவியில் உள்ள காலத்திலேயே தீர்த்து வைக்க வேண்டும் என்றும், தமது உரையில் ஊன்றி, அழுத்தி எடுத்து இயம்பினார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் மக்களின் பிரச்சினை, அவசர விடயமாகக் கருதப்பட்டுத் தீர்க்கப்பட வேண் டும் என்று வலியுறுத்தினார்.

தமிழ் மக்கள் பல தசாப்தங்களாக எதிர்கொண்டு வரும் பல பிரச்சினைகளுக்கு தீர்வுகள் காணப்பட வேண்டும். ஐக்கியமான, பிரிக்கப்படாத, இலங்கை என்ற கட்டமைப்புக்குள், நியாயபூர்வமான, நிரந்தரமான, நீடித்து நிலைக்கக்கூடிய, பயன்தரவல்ல தீர்வு ஒன்றையே நாம் எதிர்பார்க்கிறோம் - என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலின்போது, எமது கட்சி - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - எந்தவித நிபந்தனைகளும் இன்றியே, மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கியது.

வடக்கிலும், கிழக்கிலும், அத்தோடு நாடு முழுவதிலும் வாழும் தமிழர்களும், தமிழ் பேசும் மக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானத்துக்கு அமைய ஒருமித்து வாக்களித்தனர் -

ஐக்கியமானதும், அதேநேரம் பிளவுறாததுமான இலங்கையில், நிரந்தரமானதும் நீடித்து நிலைக்கக் கூடியதுமான, எமது மக்களுக்குப் பயன்தரவல்ல தீர்வையே, அரசிடம் இருந்து எதிர்பார்க்கிறோம்.

தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமையினால், உண்டான பாதகமான நிலைமைகளால், இந்த நாட்டுக்குப் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டன என்பதனை எல்லோரும் அறிவர். அதனையும் கருத்தில் - கவனத்தில் - கொண்டு அரசு விரைந்து செயற்பட வேண்டும் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் அழைப்பு விடுத்தார் - வலி யுறுத்தினார்.

இன்றைய அரசு தமிழ் பேசும் மக்களின் - தமிழ், முஸ்லிம் மக்களின் - வாக்குகளால், மிகவும் குறிப்பாக வடக்கு, கிழக்கு வாழ் மக்களின் வாக்குகளால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவிக்கு வந்தார் என்பதனை மனதில் இருத்திச் செயற்பட வேண்டிய வேளை இது.

அதனைப் புறந்தள்ளி, உனக்கும் பேப்பே, உன் அப்பனுக்கும் பேப்பே என்ற கபடகரமான போக்கைக் கைக்கொள்வதற்குப் புதிய அரசு துளியேனும் துணியக்கூடாது.

பெரும்பான்மையினரான சிங்கள மக்களின் ஆதரவுடன், அரசை தக்க வைத்தால் போதும் என்ற கோணல் புத்தியுடன் செயற்பட முனைவது, உள்ளதையும் கெடுத்த கொள்ளிக்கண்ணன் பாத்திரம் பூண்ட நிலைக்கே தேறும்.

தீதும் நன்றும் பிறர் தர வருவதில்லை. அவரவர் செய்த வினையே திரும்பி வந்து சம்பந்தப்பட்டவரைத் தாக்கும் என்பது உலக நியதி.

அதனை மறந்து, அதிகாரம் மிக்க அரச கட்டிலில் ஏறுவோர், ஆதிக்கப்போக்கை, தமது விரல் நுனியிலேனும் மெல்லியதாகப் பூசவும் விழையலாகாது.

1956 ஆம் ஆண்டிலும், அதற்குப் பின்னர் அவ்வப்போதும் கிளர்ந்து எழுந்த தமிழ் மக்கள் மீதான இனத் துவேஷத்துக்கு முற்றுப்புள்ளி போடும் காலமாக இந்த வேளையை ஆக்குவது, முழுக்க முழுக்கத் தானே ஆற்றவேண்டிய அர்ப்பணமாக அமைய வேண்டும். என்பதை, புதிய அரசு ஒரு துளியும் மறந்து விடலாகாது.

# நெருக்கமடைகின்றது இலங்கை - இந்திய உறவு



சேரலாதன்

இலங்கை இந்தியாவுடன் நெருங்கிச் செயற்படத் தயாராகி வருவதை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் இந்தியப் பயணம் எடுத்துக் காட்டுகின்றது. இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இந்தியாவுக்கே என நிச்சயிக்கப்பட்ட நிலையில் மங்கள சமரவீர ஐந்து நாள் பயணமாக இந்தியா சென்றுள்ளார். அவர் தமது பயணத்தின்போது இந்திய வெளி விவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜை முதலில் சந்தித்துஉரையாடினார். இந்தச் சந்திப்பின் போது இலங்கையைப் பொறுத்தளவில் டில்லிக்கே முதலிடமெனக் கூறியமை சீனாவுக்கு விடுக்குமொரு செய்தியென அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஏனென்றால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் இந்தியாவை விட சீனாவுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. சீனாவும் உதவி என்ற போர்வையில் இலங்கையில் ஆழமாகவே காலூன்றி விட்டது. அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நிர்மாணப் பணிகளை சீனா மேற்கொண்டதுடன், கொழும்புத் துறைமுகத்தின் அபிவிருத்திப் பணிகள், அதிவேக சாலைகள் மற்றும் சாதாரண சாலைகளின் வேலைகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டது. நிர்மாணப் பணிகளைக் காரணம் காட்டி பெருந்தொகையான சீனர்கள் இலங்கையில் நிரந்தரமாகத் தங்கி விட்டனர். குறிப்பாக முன்னாள் ஜனாதிபதியின் சொந்த இடமான அம்பாந்தோட்டையில் பெருமளவில் சீனர்கள் காணப்படுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



சீனாவின் நிலப்பரப்பையும், மக்கள் தொகையையும், ஆயுத பலத்தையும், பொருளாதார வல்லமையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இலங்கையொரு சுண்டக்காய் என்றுதான் கூறவேண்டும். ஆனால், சீனா – இலங்கைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கியமை தேவையற்றதொரு விடயமல்ல. தெற்காசியாவில் தனது நாட்டின் கடல் ஆதிக்கத்தை நிலை நிறுத்த வேண்டுமாயின் அதில் இலங்கை வகிக்கக் கூடிய முக்கியபங்கை எடைபோட்ட பின்னரே சீனா இலங்கைமீது அதிக கரிசனை கொள்ள ஆரம்பித்தது. அம்பாந்தோட்டையில் பெரியதொரு துறைமுகம் சீனநாட்டின் நிதியுதவியுடன் அமைக்கப்படும்போது அது இந்தியாவின் கண்களை உறுத்தவே செய்தது. சீனா அந்தத் துறைமுகத்தில் தனது நாட்டுக் கப்பல்களை நிறுத்தி வைக்கப் போகின்றது என்பதும் இந்தியாவுக்குத் தெரியாததல்ல. ஆனால் இந்த விடயத்தில் இலங்கையைப் பகைத்துக் கொள்வதற்கு இந்தியா விரும்பவில்லை. அவ்வாறு ஒரு நிலை ஏற்பட்டால் சீனா இலங்கையுடன் மிகவும் நெருக்கத்தை ஏற்படுத்தி விடுமென்பதே இதற்கான பிரதான காரணமாகும். ஆகவே மறைமுகமான நடவடிக்கைகள் மூலமாக இலங்கையைப் பணிய வைத்துத் தன்வசம் சேர்த்துக்கொள்ளத் தீர்மானித்தது. செயலிலும் இறங்கி வெற்றியும் கண்டது.

இந்தியாவின் உளவு அமைப்பான றோ மஹிந்த ராஜபக்ஷவின் தோல்வியின் பின்னணியில் செயற்பட்டதாக வெளிவந்த செய்திகள் உண்மையென்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியதொரு நிலைதான் தற்போது காணப்படுகின்றது.

இலங்கை வெளிவிவகார அமைச்சரைத் தொடர்ந்து ஜனாதிபதியும் தமது முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை இந்தியாவுக்கே மேற்கொள்ளப் போகின்றார். இதனைத் தொடர்ந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இலங்கைக்கு வருகைதரவுள்ளார். தெற்காசியாவைப் பொறுத்தவரையில் இந்தியா ஒரு வல்லரசாகக் காணப்படும் நிலையில் அந்த நாட்டின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் பிரதமர் நரேந்திர மோடியும் திறமையும், உறுதியும்மிக்கவர் என்ற நற்பெயரை உலகளவில் ஈட்டிக் கொண்டுள்ளார். அவரது சுறுசுறுப்பான நடவடிக்கைகள் இந்தியாவை மந்த கதியிலிருந்து மீட்டெடுத்துள்ளது, எவரும் மறுக்க முடியாது. இந்த நிலையில் தனது பரம வைரியான சீனா அண்டை நாடான இலங்கையில் காலூன்றுவதால் ஏற்படும் விபரீதங்களை மோடி முளையிலேயே கிள்ளியெறிவதையே விரும்புவார். மேலும் இலங்கைத் தமிழர்களின் வாக்குகளால் மைத்திரிபால சிறிசேன வெற்றியடைந்தமை தமிழ் நாட்டில் மகிழ்ச்சியான உணர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தின்போது முன்னாள் ஜனாதிபதிக்கு அங்கு முன்பு ஏற்பட்ட அனுபவம் கிடைக்காதென்பதைக் கூறலாம். ஆனாலும், தமிழ் நாட்டு மக்கள் புதிய ஜனாதிபதியின் வருகையின் பின்னரும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகள் தீருமென்பதில் சந்தேகம் தெரிவித்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

ஆனாலும், இந்தியா இனியும் மெத்தனப் போக்கைக் கடைக்கொள்ளுமானால் அது இலங்கைத் தமிழர்களுக்கு செய்யும் துரோகமாகவே அமைந்துவிடும். இவ்வளவு காலமும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொய் வாக்குறுதிகளை வழங்கி இந்தியா உட்பட வெளிநாடுகளை ஏமாற்றி வந்துள்ளார். ஆனால் மைத்திரிபால சிறிசேன அவ்வாறான ஒருவரல்ல என்பது அவரது நடவடிக்கைகள் மூலமாகத் தெரிகின்றது. ஆகவே இலங்கையும், இந்தியாவும் ஒன்றிணைந்து பொருளாதார, பாதுகாப்பு விடயங்களில் செயலாற்றுவது போன்று இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வுகண்டு அமைதியான இலங்கையை உருவாக்க வேண்டு மென்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

கட்டுரை

# சிறுபான்மை மக்கள் தமது ஒற்றுமையை ஜனாதிபதித் தேர்தலில் காட்டிவிட்டார்கள்

## அமைச்சர் ரிஷாத் பதியுதீன் உதயனுக்கு வழங்கிய செவ்வியின் போது தெரிவிப்பு

ஜோ. குட்டி



**கேள்வி:**
நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை மக்கள் மற்றும் சிறுபான்மைத் தலைவர்களின் பங்கு குறித்து உங்களது கருத்து என்ன?

**பதில்:**
போர் காலத்திலும், அதற்கு முன்னரும் சிறுபான்மை அரசியல் தலைமைகளிடம் ஒவ்வொரு வகையான உறவுகள் இருந்தன. ஆனால், இந்தத் தேர்தலில் இந்துக்களும், கத்தோலிக்கர்களும், இஸ்லாமியர்களும், மலையகத் தமிழர்களும் தலைமைத்துவ மாற்றத்துக்காக ஒருமித்த கருத்துடன் ஒன்று சேர்ந்து செயற்பட்டனர். இதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். சிறுபான்மைச் சமூகம் விரும்பிய ஒருவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சிறுபான்மை மக்கள் தமது ஒற்றுமையைச் சாதித்துக் காட்டியுள்ளனர்.

கடந்த 30 வருடகாலமாக தமிழ் இளைஞர்கள் ஆயுத ரீதியாகப் போராடியும் அவர்களால் பயனெதுவும் கிட்டவில்லை. அதே போல் முஸ்லிம்களும் தனியாக கட்சியமைத்து செயற்பட்டனர். ஆனால், எதிர்பார்த்த விடயங்கள் எதுவுமே நாம் எதிர்பார்த்ததைப் போன்று சாதகமாக அமையவில்லை. ஆனால், நாட்டின் தலைமையைத் தீர்மானிக்கும் விடயத்தில் சம்பந்தனாக இருக்கலாம், ரவூப் ஹக்கீமாக இருக்கலாம், நாங்களாக இருக்கலாம், மனோ கணேசன், திகாம்பரம் மற்றும் கிழக்கிலுள்ள தலைமைத்துவங்களாக இருக்கலாம், நாம் அனைவரும் இந்தத் தேர்தலில் எமது ஒற்றுமையைக் காட்டியுள்ளோம் என்பதே உண்மை. இந்த ஆரம்பத்தை நாம் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதை நான் விரும்புகின்றேன். ஏனெனில் இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் தமிழ், முஸ்லிம் உறவுகளைப் பிரிக்க பல முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. ஆயுத ரீதியான அமைப்புகள் வந்ததன் பின்னர் அது மேலும் வலுப் பெற்றது. தற்போது இந்தத் தேர்தலின் பின்னர் நல்ல சகுனம் பிறந்துள்ளது. இதைப் பாதுகாக்க அரசியல் தலைமைகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபோல மதத் தலைவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்களுக்கிடையில் இருக்கின்ற சின்னச் சின்னப் பிரச்சினைகளை நாம் முதலில் பேசித் தீர்ப்போம். அதன்பின்னர் பெரும்பான்மை சமூகத்துடன்பேசி, ஒன்றிணைந்த நாட்டுக்குள் நியாயமான ஒரு நல்ல தீர்வைப் பெறுவோம்.

**கேள்வி:**
நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில்உங்கள்கருத்துஎன்ன?

**பதில்:**
ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இவ்வாறானதொரு முடிவை எடுக்கும் என அப்போது ஆட்சியிலிருந்த அரசு எதிர்பார்க்கவில்லை. நாம் முடிவெடுத்த போது, பல அச்சுறுத்தல்கள், பல மிரட்டல்கள் ஏன் மரண அச்சுறுத்தல் கூட விடுக்கப்பட்டது. பொது பலசேனா போன்ற அமைப்புக்களைக் கட்டுப்படுத்தாததால், இந்த நாட்டில் முஸ்லிம் மக்கள் வாழ்வதற்கே அஞ்சவேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது. அரசிலிருந்து கொண்டு இதைக் கட்டுப்படுத்த முயற்சித்தோம். ஆனால், அரசு இவ்விடயத்தில் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

அளுத்கம சம்பவம் தொடர்பில் பொது பல சேனாவின் பொதுச் செயலருக்கு எதிராக 100 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன. ஆனால், அவரைப் பொலிஸார் விசாரணைக்குட்படுத்தவில்லை. அதற்கு மேலிடம் அனுமதியளிக்கவில்லை. இவ்வாறான நிலையில், மீண்டும் இந்த அரசைக் கொண்டுவந்து சிறு பான்மை சமூகம் அச்சத்துடன் வாழும் நிலையை ஏற்படுத் தக்கூடாது என்று நாம் எடுத்த முடிவு வெற்றியளித்துள்ளது. அதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். நாம் எவரையும் குறைகூறவில்லை. எமது கட்சி அரசியல் ரீதியில் முன்னோக்கிச் செல்லும். 90 வீதத்துக்கும் அதிகமானோர் கட்சியுடன் இணைந்திருந்தனர். இந்த நிலையில், கட்சியின் கட்டுப்பாட்டை மீறியவர்கள் தொடர்பில் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் முடிவெடுப்போம். எமது கோரிக்கையை ஏற்று வடக்கு, கிழக்கு மட்டுமன்றி ஏனைய பகுதிகளிலும் வாக்களித்த, உதவியளித்த அனைவருக்கும் நன்றியைக் கூறிக் கொள்கின்றேன்.

**கேள்வி:**
வடமாகாணத்தில் இடம் பெறும் மீள்குடியமர்வுப் பிரச்சினையை எவ்வாறு கையாளப் போகின்றீர்கள்?

**பதில்:**
வட மாகாண முதலமைச்சர், புதிய மீள்குடியமர்வு அமைச்சர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து வட மாகாணத்தில் முன்னர் வாழ்ந்த முஸ்லிம்கள் யார்? குடியேறியுள்ள முஸ்லிம்கள் யார்? என்பதைக் கண்டறிய வேண்டும். வடமாகாணத்தைச் சேராத தமிழர்களையோ, முஸ்லிம்களையோ,

> ❝ வட மாகாண முதலமைச்சர், புதிய மீள்குடியமர்வு அமைச்சர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து வட மாகாணத்தில் முன்னர் வாழ்ந்த முஸ்லிம்கள் யார்? குடியேறி யுள்ள முஸ்லிம்கள் யார்? என்பதைப் பார்க்க வேண்டும். வட மாகாணத்தைச் சேராத தமிழரையோ, முஸ்லிம்களையோ, சிங்களவரையோ குடியேற்றமாட்டோம்.

சிங்களவர்களையோ வடமாகாணத்தில் குடியேற்ற மாட்டோம். வேறு மாவட்டங்களிலிருந்த பெரும்பான்மையினரைக் கொண்டுவந்து அண்மைக் காலங்களில் குடியேற்றங்கள் இடம்பெற்றன. எனவே, இது விடயம் தொடர்பில் வட மாகாண சபை, மீள்குடியமர்வு அமைச்சர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன இணைந்து திட்டமிட்டு மீள்குடியேற்றத்தைச் செய்யவும், எதிர்காலத் திட்டங்கள் தொடர்பிலும் ஆராயவும் உள்ளோம்.

**கேள்வி:**
100 நாள் வேலைத் திட்டத்தை எவ்வாறுசெயற்படுத்தவுள்ளீர்கள்?

**பதில்:**
மைத்திரி ஆட்சி என்ற தலைப்பின்கீழ் 100 நாள்களுக்குள் நாம் என்ன செய்யப்போகின்றோம் என்பதை மக்களுக்குத் தெளிவாக எடுத்துக்கூறி அவர்களது ஆணையைப் பெற்றுள்ளோம். அதில் எனது அமைச்சுடன் தொடர்புடைய விடயங்களை நூறு வீதம் நடை முறைப்படுத்துவோம். நாட்டின் கைத்தொழில்துறையை மேம்படுத்தல், முதலீடுகளை அதிகரித்தல், ஏற்றுமதியை அதிகரித்தல் ஆகியவற்றைச் செய்வோம். அத்துடன், நாடளாவிய ரீதியில் 10 மாவட்டங்களைத் தெரிவு செய்து சிறு கைத்தொழிலை மேம்படுத்த நடவடிக்கை எடுப்போம். எவ்வளவுவேகமாகஎமதுசெயற்பாட்டை முன்னெடுக்க முடியுமோ அவ்வளவு வேகமாக நாம் செயற்படுவோம்.

இது தொடர்பாக வியாபார சமூகத்துடன் பேச்சுக்களை நடத்தியுள்ளோம். இந்த வேலைத் திட்டங்கள் மிகவும் திட்டமிட்ட முறையில் இடம்பெறும். 100 நாள்களுக்குள் ஒரு கைத்தொழில் புரட்சியை மேற்கொண்டு காட்டுவோம்.

**கேள்வி:**
100 நாள்களின் பின்னர் இடம் பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் எவ்வாறு செயற்படவுள்ளீர்கள்?

**பதில்:**
ஹக்கீம் மற்றும் அஸாத் ஸாலி ஆகியோரின் சிறுபான்மைக் கட்சிகளுடன் இணைந்து பேசி ஓர் உடன்பாட்டுடன் போட்டியிட எதிர்பார்க்கின்றோம். அந்தக் கட்சிகள் ஓர் உடன்பாட்டுக்கு வரவில்லையாயின் பெரும்பான்மைக் கட்சிகளுடன் பேசுவோம். அந்த பெரும்பான்மைக் கட்சிகளுடனும் உடன்பாடு ஏற்படாவிட்டால்தனித்துப் போட்டியிடவும் நாம் தயாராக உள்ளோம்.

**கேள்வி:**
உங்களது அலுவலகத்தில் பொது பல சேனா முஸ்லிம்களது விவகாரங்களில் தலையிட்டமை குறித்து முறைப்பாடு செய்துள்ளீர்கள். இதன் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

**பதில்:**
மஹிந்த ராஜபக்ஷ அரசின் வீழ்ச்சிக்கு பொதுபலசேனாதான் காரணம். பொதுபலசேனாவைக் கட்டுப்படுத்துமாறு நான் ஆரம்பத்திலேயே கேட்டுக் கொண்டேன். அது ஒரு சாபக்கேடு. இறுதியில் 12 வருடங்கள் ஆட்சியில் இருக்க வேண்டியவர் மூன்று வருடங்களுக்கு முன்னாலேயே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

இது ஒரு சதிகாரக் கூட்டம். தாம் நினைத்தாற்போல நாடக மாடுவதற்கு இனிமேல் பொதுபல சேனாவுக்கு இடமளிக்கப்பட மாட்டாது. சட்டத்தை எவர் கையில் எடுத்தாலும் நிச்சயமாக நாம் நடவடிக்கை எடுப்போம். மத குருவாகஇருந்தாலும்அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**கேள்வி:**
வில்பத்து சரணாலயப் பகுதிகளில் நீங்கள் காணியைக் கைப்பற்றியுள்ளீர்கள் என்ற குற்றச்சாட்டு உங்கள் மீது சுமத்தப்படுகின்றதே?

**பதில்:**
வில்பத்தில் ஓர் அங்குலமேனும் நாம் கைப்பற்றவில்லை. அது மறிச்சுக்கட்டி மக்களின் சொந்தப்பூமி. 25வருடங்களாக அவர்கள் அங்கிருக்காததால் அந்த இடம் காடாக இருந்தது. வில்பத்து சரணாலயத்துக்குள் சிறு துண்டு நிலத்தைக் கூட யாரும் சுத்தம் செய்யவும் இல்லை. குடியேறவுமில்லை. குடியேறவேண்டிய தேவையும் இல்லை. இந்த இரண்டு குற்றச்சாட்டுக்களையும் நான் நிராகரிக்கின்றேன். ஊடகங்களால் இது போன்ற செய்திகள் இனி மேலும் கூறப்படுமாயின், சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து சிந்திப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

கருத்து

# வாசகர் திருமுகம்

## வியாபார ஸ்தலமாக மாறும் ஆலயம்

ஏழைகள் தமது குறைகளை கவலைகளை இறக்கி வைத்து ஆறுதல் அடைய நாடுகின்ற கோயில்கள் இன்று பணத்தைக் கறக்கும் வியாபார நிலையங்களாக மாறிவருகின்றன. இதற்கு உதாரணமாக யாழ்.நகரில் உள்ள பிரபல்யமான விஷ்ணு தலமொன்றின் அண்மைய நடவடிக்கையானது வியாபார ரீதியாக மாற்றம் பெற்று வருகிறது. இதுவரைகாலமும் நடைமுறையில் இருந்த 10 ரூபா அர்ச்சனை ரிக்கட்டுக்கள் நடைமுறை நிறுத்தப்பட்டு 50 ரூபா மற்றும் 100 ரூபா என கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. இதனை விட, இறைவனிடம் தங்களின் கஷ்டங்களைக் கூறி ஆறுதல் அடைந்து கிருபை பெறும் நோக்குடன் தர்ப்பை அணிந்து அர்ச்சனை செய்யும் தொன்று தொட்டு இருந்து வந்த நடைமுறையும் இல்லாது செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆலயத்தில் பல அடியார்கள் தங்களின் கருத்துக்களைக் கூறியும் ஆலய நிர்வாகம் அதனைச் செவிமடுக்காது பணம் ஈட்டும் முயற்சியிலேயே குறியாக உள்ளமை மிகவும் வேதனைப்படவும்– வெட்கப்படவும் வைக்கிறது.

ஏழைகளுக்கு உதவவும் நீதியை நிலை நாட்டவும் பல அவதாரங்களை எடுத்த இறைவன் இதற்காக என்ன செய்வாரோ?

எஸ்.கோசலாதேவி

## தனியார் பஸ்களில் அதிகரிக்கும் திருட்டுகள்

கடந்த சில தினங்களாக தனியார் பஸ்களில் திருட்டுச் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன. இதுபற்றி தனியார் பஸ்களின் நடத்துநர்களோ, ஓட்டுநர்களோ கவனிக்காது விடுவது வேதனைக்குரிய விடயம். பஸ்களில் அளவுக்கதிகமாக பயணிகளை ஏற்றிச் செல்வதுடன், அவர்களது கைப்பைகளை வாங்கி வேறு நபர்களிடம் கொடுத்து வைத்திருந்து திருப்பிக் கொடுக்குமாறு கூறுவதும் ஆண், பெண் இருபாலாரையும் ஒரே வரிசையில் முன்பின்னாக நின்று பயணிக்க வைப்பதும் இதற்கான காரணங்கள் எனலாம். பெண் பயணிகளது நகைகள், காசு, தொலைபேசி என்பனவே அதிக அளவில் தனியார் பஸ்களில் திருட்டுப் போகின்றன. எனவே தனியார் பஸ் சேவையுடன் சம்பந்தப்படும் தரப்பினர்கள் பஸ்களின் நடத்துநர்களும் ஓட்டுநர்களும் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி பயணிகளது பொருள்கள் பயணத்தின்போது திருட்டுப் போகாது அவதானித்துச் செயற்படுமாறு அறிவுறுத்தல்கள் வழங்க வேண்டும். பாதிக்கப்பட்டவன் என்ற வகையில் உரியவர்களுக்கு இதனை எனது வேண்டுகோளாக முன்வைக்கிறேன்.

கி.கமலேஸ்,
சுன்னாகம்.

### கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

## நடிப்பிலும் கைதேர்ந்தவர்தான்

14 ஆண்டுகள் இராமன் வனவாசம் சென்றிருந்தான். அவன் வனவாசம் முடிப்பதற்கு 14 ஆண்டுகள் ஆயின. இதேபோல் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தேர்தல் முடிவு வெளிவந்தவுடன் வனவாசம் சென்றிருந்தார். ஆனால் அவரது வனவாசம் 11 நாள்களிலேயே முடிவுக்கு வந்து விட்டது.

அம்பாந்தோட்டையில் தனது வீட்டுக்குள் முடங்கிக் கிடந்த மஹிந்த, கடந்த செவ்வாய்க்கிழமை கண்டிக்குச் சென்றிருக்கின்றார். கண்டியில் பௌத்த மத வழிபாடுகளில் ஈடுபட்டார். மஹாநாயக்க தேரர்களையும் இதன்போது சந்தித்துள்ளார். இவற்றின் முடிவில், அப்பாவி தனமாக தனது முகத்தை வெளிக்காட்டிக் கொண்டு, பழி வாங்கும் அரசியலை நிறுத்துங்கள். 42 வருட அரசியல் வாழ்வில் முதன் முதலாக எனது வீடு சோதனையிடப்பட்டிருக்கின்றது. பழிவாங்கல் செய்வதற்கு மக்கள் வாக்களிக்கவில்லை' என்றெல்லாம் அழுது புலம்பியிருக்கின்றார்.

மஹிந்தவினதும், அவரது குடும்பத்தவர்களதும் ஒவ்வொரு சொத்துக்களும், அவர்கள் இதுவரை செய்த அட்டகாசங்களும் ஒவ்வொன்றாக வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன. சிங்கள மக்கள் மத்தியில் மஹிந்தவின் மீதான வெறுப்பை இது அதிகரிக்கச் செய்து கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில் சிங்கள மக்கள் மத்தியில் தனக்கு அனுதாபத்தை தேடுவதற்காகவே மஹிந்த, 'பழிவாங்கும் அரசியலை நிறுத்துங்கள்' என்று கேட்டிருக்கின்றார். புலிகளை அழித்து நாட்டை மீட்டுத் தந்த என்னை பழிவாங்குகின்றார்கள். சிங்கள மக்களே, நீங்கள் பார்த்துக் கொண்டிருக் கின்றீர்களா? என்று கேட்காமல் கேட்டு, சிங்களமக்களை இப்போதே உசுப்பேத்தத் தொடங்கியிருக்கின்றார் மஹிந்தா.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான தனது பரப்புரையை அவர் மெல்லத் தொடங்குகின்றார். இனவாதத் தீயை இப்போது வேறு விதத்தில் பற்றவைக்கத் தொடங்குகின்றார். மைத்திரி, ரணில் உள்ளிட்டவர்களுக்கு எதிராக சிங்கள – பௌத்த வாக்குகளை திருப்புவதற்கான முயற்சியைச் செய்திருக்கின்றார்.

உண்மையில், மஹிந்தவுக்கு நெருக்கமான அரசியல்வாதிகள், அதிகாரிகள் வீடுகளிலிருந்து ஆயுதங்கள், லம்போகினி கார், பணப் புதையல், தங்கப் புதையல், படங்கள் பொறிக்கப்பட்ட கடிகாரங்கள் என்று அடுக்கடுக்காக வெளிவந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் மஹிந்தவின் வீட்டிலும், லம்போகினி கார் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் நீதிமன்றத்தின் அனுமதி பெற்றுத் தேடுதல் நடத்தினர்.

பொலிஸார் தமக்கு கிடைத்த தகவலை உறுதிப்படுத்துவதற்காக மஹிந்த வீட்டை முறைப்படியான அனுமதியுடன் சோதனை செய்தனர்.

மஹிந்த சொல்லும், பழிவாங்கலை இங்கு யார் செய்கின்றார்கள் என்பதுதான் புரியவில்லை. சில வேளைகளில் மஹிந்த, தனது ஆட்சியில் பொலிஸாரும், நீதிபதிகளும் ஆளும் கட்சி அரசியல்வாதிகள் சொல்வதைக் கேட்டுச் செய்ததைப் போன்று, தற்போதும் செயற்படுகின்றனர் என்று எண்ணுகின்றாரா ? அல்லது தற்போது பொலிஸாரும், நீதித்துறையினரும் சுயமாகச் செயற்படுகின்றனர் என்பதை உணர்ந்து, அவர்கள் தன்னைப் பழிவாங்குகின்றார்கள் என்று சொல்ல விளைகின்றாரா ?

மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் கேடு கெட்டு இருந்ததைப் போன்று தற்போது நீதித்துறையோ, பொலிஸ் துறையோ இல்லை. அவர்கள் சுயாதீனமாகச் செயற்படுகின்றனர். உண்மைகளைத் தேடுகின்றனர். எனவே குற்றவாளிகள் இதன் போது சிக்குவார்கள்.

அந்தப் பயத்தினால்தானோ என்னவோ, முன்னரே இந்தத் தேடுதல்களை அரசியல் பழிவாங்கல் என்று சொல்லி, மஹிந்த தன்னைப் பாதுகாக்க முற்படுகின்றார். இதனூடாக சிங்கள மக்களின் அனுதாபத்தையும் தேடுகின்றார்.

என்னதான் சொன்னாலும் மஹிந்தரே, நீர் நடிப்பிலும் கைதேர்ந்தவர்தான்.

பத்தி எழுத்து




# பறவைகளின் விநோத பழக்கங்கள்

## உணவுத் தேடும் குஞ்சு

ஐரோப்பிய செங்கால் நாரைகள் தங்களின் குஞ்சுகளுக்கு தாமே உணவைத் தேடிக்கொண்டு வந்து கொடுக்கும் பழக்கம் கொண்டவை. ஆனால் தாய் தகப்பன் நாரைகள் அவ்விதம் கொடுக்கும் உணவு குஞ்சு நாரைகளுக்குப் பிடிக்காமல்கூட போகுமாம். அந்த நேரங்களில் வேறு நாரைகளிடம் போய் உணவு வாங்கி உண்ண குஞ்சுகளின் தாய் தகப்பன் நாரைகள் குஞ்சுகளை அனுப்பி வைப்பதுமுண்டாம்.







ஒரு விறகு வெட்டி ஒரு மரத்தின் கிளை மீது அமர்ந்து கொண்டு அந்தக் கிளையையே வெட்டினானாம். இதனை உமாதேவியார் பார்த்துவிட்டு, 'இவன் என்ன முட்டாளாக இருக்கிறானே, கீழே விழுந்துசாகப்போகிறானே' என்றுசிவபெருமானிடம்சொன்னாராம். அதற்கு அவர் 'சரி அவன் உதவிக்கு உன்னைக் கூப்பிட்டால் நீ போய்க் காப்பாற்று; என்னைக் கூப்பிட்டால் நான் காப்பாற்றுகிறேன் என்றாராம். இருவரும் மிகவும் கவனமாக அடுத்து என்ன நடக்கப் போகிறது என்று ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தார்களாம். அவன் இருந்த கிளை இறுதியாக முறிந்து விழுந்தது. அவன் 'ஐயோ' என்று கதறிக்கொண்டே கீழே விழுந்தான். விழுந்த வேகத்தில் இறந்தும் போனான். உமாதேவியார் என்ன அவன் இறந்துபோனானே என்றாராம். அதற்கு சிவன் 'அவன் யமனின் மனைவி 'ஐயோ' வை அல்லவா கூப்பிட்டான். அதுதான், ஐயோ வந்து அவன் உயிரை எடுத்துக்கொண்டு போய்விட்டாள் என்றாராம்.




# ரயில் வண்டி

போகுது பார், ரயில் போகுது பார்.
புகையினைக் கக்கியே போகுது பார்.
குபுகுபு சத்தம் போடுது பார்.
கூக்கூக் என்றுமே கூவுது பார்.
தூரமும், நேரமும் குறைவது பார்.
துரிதமாய் எங்குமே ஓடுது பார்.
அறைஅறையான வண்டிகள் பார்.
அவற்றிலே மனிதர் செல்வது பார்.
ஸ்டேசனில் எல்லாம் நிற்குது பார்.
சிவப்புக் கொடிக்கே அஞ்சுது பார்,
மலையைக் குடைந்தே செல்லுது பார்.
மையிருள் தன்னிலும் ஓடுது பார்.
பாலம் கடந்துமே போகுது பார்.
படபட, கடகட என்குது பார்.
பட்டண மாமா கடிதமெலாம்
பையிலே தூக்கி வருகுது பார்.
காசைக் கரியாய் ஆக்காமல்,
கரியைப் புகையாய் விடுவது பார்!




ஜோ.தரணிகா,
யா/வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை

Middlesex University London

IT Degrees @ ICBT Campus



Apply Now
January Intake 2015

Middlesex University UK, with over 23,000 students, iscommitted in achieving high academic standards through a rigorous set of quality assurance procedures.

• Eligibility
• HND in Computing
• HND in Software Development
• HND in ICT
• Any other equivalent qualification (Case by case approval)

Bsc (Hons) in Information Technology

Bsc (Hons) in Business Information Systems & Management

For more information
0773 427 287

• Duration One Year

ICBT CITY CAMPUS
317A, Galle Road, Colombo 4.
Tel: (+94)114 869 999, Fax: (+94)114 541 018
cityinfo@icbtcampus.edu.lk

National Business Excellence 2014
Gold Award Winner
Education Service Sector

ஆக்கம்

# துரிதகதியில் அபிவிருத்தி அடைந்துவரும் வட பிராந்திய விவசாய ஆராய்ச்சிப் பணிகள்

கலாநிதி சி.ஜே.அரசகேசரி


**இனிப்புச் சோளம் அறிமுகம்**

பள்ளிச் சிறார்களுக்கு வழங்கும்சத்துணவில்சேர்த்துக்கொள்ளும் வகையில் ஓரளவு இனிப்புச் சுவையுள்ள சோளத்தெரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.
தாவர இன விருத்திக்கு ஏற்ற வகையில் உதவுமாறு வலை வீடு ஒன்றும், வெங்காயத்தின் நீண்ட நாள் ஆராய்ச்சிக்கு உதவும் வகையில் வெங்காய சேமிப்பு அறையொன்றும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

> தற்போது 25 ஏக்கர் நிலப்பரப்புள்ள இந்த ஆராய்ச்சி நிலையமானது சகல பகுதிகளிலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதற்கு ஏற்ற வகையில் தயார்படுத்தப்பட்டுள்ளது.

**பழப்பயிர்ச் செய்கை**

வட பிரதேசத்திலுள்ள மிகவும் பயன்தரக்கூடிய பல்வேறு வகைப்பட்ட வாழை இனங்கள் சேர்க்கப்பட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. திராட்சையில் இதுவரையில் வடபிராந்தியத்துக்கு மிகவும் பொருத்தமாகஇஸ்ரேல்புளூவை (Israel blue) விட மேலும் பொருத்தமான திராட்சை இனங்கள் உருவாக்கப்பட்டு காய்க்கும் தறுவாயில் உள்ளன. அவற்றைவிட -Dragon fruit என அழைக்கப்படும்.பெறுமதிவாய்ந்த பழத்தின் உற்பத்தியும், மாதுளை போன்றனவும் ஆராய்ச்சியில் உள்ளன.
இவற்றைவிட மா,பனா என்பவற்றில் தரமான தாய்த்தாவரங்களின் தெரிவுக்கு ஏற்ற வகையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளூரிலே இருக்கும் இனிப்புத் தோடை இனங்கள் சேர்க்கப்பட்டு வளர்க்கப்படுகின்றனவாக பயிர் இன விருத்தியின் ஆராய்ச்சிகள் முழு அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





**தாவர நோய்ப் பீடை முகாமைத்துவம்**

தாவரங்களில் ஏற்படும் நோய்ப் பீடை மற்றும் களைகளில் நாசம் போன்றவற்றைப் பரிகரிக்கும் ஆராய்ச்சிகளுக்கான களத்துண்டங்கள் ஆய்வு கூடங்களுக்காக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் இயற்கை முறையில் நோய்ப் பீடைக் கட்டுப்பாடு முக்கியத்துவம் வகிக்கிறது.

**அதி நவீன சுற்றுலா விடுதி**


நீண்டநாள்கள் தேவைகருதி பிரதானமாக விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய திணைக்கள அலுவலருக்கும் வட பிராந்தியத்தில் தங்கி நின்று கடமை மேற்கொள்ளும் வகையில் அதி நவீன குளிரூட்டப்பட்ட சுற்றுலா விடுதியொன்று இந்த நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
மேற்குறிப்பிட்ட ஆய்வு கூட மற்றும் களத்துண்டங்கள் போன்றவற்றிலும் கூட அபிவிருத்தி அடைந்துவரும் நிறுவனம் உள்ளக கட்டுமான வசதிகளுடன் மேம்பட்டு வருகின்றது. நீண்ட காலமாகக் குறைக்கப்பட்டு வந்த ஆராய்ச்சிப் பணிகள் துரித கதியில் மேம்பட்டு வருகின்றன. தற்போது 25 ஏக்கர் நிலப்பரப்புள்ள இந்த ஆராய்ச்சி நிலையமானது சகல பகுதிகளிலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதற்கு ஏற்ற வகையில் தயார்படுத்தப்பட்டுள்ளது. ஆதலால் இந்த ஆராய்ச்சிப் பணிகளின் பயன்பாடு விவசாயிகளைச் சென்றடைவதற்கு ஏற்ற சூழலே தற்போது நிலவுகிறது. எனவே விவசாய ஆராய்ச்சி அபிவிருத்திப் பணிகள்கூடிய விரைவில் விவசாயிகளைச் சென்றடைந்து எமது பிரதேசம் சுபீட்சம் அடையும் என எதிர்பார்க்கலாம்.



கட்டுரையாளர், கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் மேலதிக பணிப்பாளராகப் பணிபுரிகின்றார்.

வணிகம்



## கைதடி நவீல்ட் பாடசாலைக்கு டயலொக்கின் கணினிக் கூடம்

டயலொக் நிறுவனத்தின் சமூகப் பொறுப்பாண்மை செயற்றிட்டத்தின் கீழ் கைதடி நவீல்ட் பாடசாலைக்குக் கணினிக் கூடம் ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டது.
டயலொக் நிறுவனத்தின் சமூகப் பொறுப்பாண்மை செயற்றிட்டத்தின் இயக்குநர் தினாரா வகவத்த மற்றும் நவீல்ட் பாடசாலை அதிபர் எஸ்.மகேந்திரன் ஆகியோர் இணைந்து கணினிக்கூடத்தைத் திறந்து வைத்தனர்.
டயலொக் யாழ். சேவை நிலையத்தின் முகாமையாளர் தி.சிவ்குகன் மற்றும் அலுவலர்கள் இதில் பங்கேற்றனர். (த)

## யாழ். வர்த்தகக் கண்காட்சியை திறக்க ஜனாதிபதிக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்.ஜன.22
2015 ஆம் ஆண்டின் யாழ்ப்பாண வர்த்தகக்கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாண வர்த்தகக் கண்காட்சியின் 6 ஆவது கண்காட்சி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் தொடர்ந்து 3 தினங்கள் யாழ்.மாநகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.
இந்தக் கண்காட்சியில் பிரதம விருந்தினராகக்கலந்துகொள்ள புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
எனினும் ஜனாதிபதி குறித்த நிகழ்வில் கலந்து கொள்வாரா இல்லையா என்பது தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்னுமும், வெளியிடப்படவில்லை. அத் துடன் முக்கிய அமைச்சர்கள் மற்றும் இந்தியத் துணைத் தூத ரக அதிகாரிகள், வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பலருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
கடந்த வருடத்தை விட இந்த வருடம் 190 தென்னிலங்கை நிறுவனங்கள் மற்றும் 30 உள்ளூர் நிறுவனங்கள், பாகிஸ்தான், பங்களாதேஷ், சீனா உள்ளிட்ட நாடுகளின் இலங்கைக்கான முகவர் நிலையங்களின் உற்பத்திப் பொருள்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.
அத்துடன் கண்காட்சியைப் பார்வையிடுவதற்குப் பாடசாலை மாணவர்களுக்கு இலவச அனுமதியும் வழங்கப்படவுள்ளது.
(த-14)

# மெய்வன்மை போட்டிகள்

தென்மராட்சி, ஜன.22

கைதடி எழுதிடல் அ.த.க. பாட சாலையின் மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் ந.ஜெய ரூபன் தலைமையில் நடை பெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென் மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) வே. பாலசுப்பிரம்ணியமும் சிறப்பு விருந்தினராக வலய முறைசாராக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தர்மராஜாவும் கௌரவ விருந்தினர்களாக கைதடியூர் சிவலிங்கம் தம்பதி, கைதடி நவ சனசமூகநிலையத் தலைவர் மு.கயோதரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (வ–9)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

செல்லா சினிமா யாழ்ப்பாணம்

தைப்பொங்கல் வெளியீடு AC / DTS
40அடி அகலம் LED திரையில்
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
டைரக்டர் சங்கரின் பிரமாண்டமான தயாரிப்பில்
சியான் விக்ரம், எமிஜாக்சன் நடிப்பில்
ஐ
காட்சி:
10.30, 2.30, 6.30, 9.30
முற்றிலும் குளிரூட்டப்பட்டது

## சாயிராம் கொன்ரக்சன் கட்டட நிர்மாணிகள்

அழகிய வடிவிலான வீடுகள் வியாபார நிலையங்கள் போன்றவற்றை சிறந்த முறையில் நிர்மாணிப்பவர்கள் பழைய வீடுகளை மீள் நிர்மாணம் செய்தல் மற்றும் பைப்வேலைகள், பெயின்ரிங் வேலைகள், வெல்டிங் வேலைகள், போன்றவற்றையும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.
தொ.பே: 077 368 5008/077 576 8321
(56004) (12.3.7)

## மணல் விற்பனைக்கு

பூநகரி மணல் விற்பனைக்குண்டு.
ஒரு டிப்பர் (04 றைக்ரர்)
விலை 15,000/=
முகவரி: இல.411, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
077 341 4040
(56011) (12.3.7)

## பெயர் மாற்றம்

வரணி கரம்பைக்குறிச்சி தில்லையம்பலம் ராஜேஸ்வரன் ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து தில்லையம்பலம் சிவராசா என மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
தி.சிவராசா.
(56014) (12.3.7)

## MOTOR BIKE விற்பனைக்கு

NP VQ - XXXX
220 - PULSAR
தொ.பே: 077 524 1046
(56015) (12.3.7)

## உடனடி வேலை வாய்ப்பு

பிரபல பல்தேசிய வலையமைப்பு தொடர்பாடல் நிறுவனத்துக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. மாதாந்தம் ரூபா 50000/= மேல் வருமானம் மற்றும் நாள் ஒன்றுக்கு 1000/= மேலதிகமாக வழங்கப்படும்.
உடன் தொடர்பு கொள்ளவும்:
078 505 4068
(55949) (12.3.7)

## 24ஆவது பிறந்தநாள் வாழ்த்து



ச.சஞ்ஜீவன் (லண்டன்)

இன்று (22.01.2015) வியாழக்கிழமை அகவை 24இல் கால் பதிக்கும் எமது தவப்புதல்வன் செல்வன் ச. சஞ்ஜீவனை சீரும் சிறப்பும் பெற்று உசன் முருகன் அருளால் நீடூழி வாழ பொன்னான பிறந்தநாளில் அன்புடன் வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, அருமைத் தம்பி கபிசன், அம்மம்மா, அப்பம்மா, உறவினர், நண்பர்கள்.
சற்குணநாதன் கிருபாராணி தம்பதிகள்
உசன், மிருசுவில்.
(56019)(10.3.7)

## குறைந்த விலையில் உன்னதமான பயணம்



உலகில் எந்தப்பகுதிக்கும் சென்றுவர விமான பயணச் சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
*Conditions apply

| | |
|---|---|
| COLOMBO/CHENNAI/COLOMBO | Rs. 23,100 |
| COLOMBO/BANGALORE/COLOMBO | Rs. 32,200 |
| COLOMBO/MUMBAI/COLOMBO | Rs. 28,300 |
| COLOMBO/MALE/COLOMBO | Rs. 22,900 |
| COLOMBO/BANGKOK/COLOMBO | Rs. 26,150 |
| COLOMBO/SINGAPORE/COLOMBO | Rs. 27,500 |
| COLOMBO/KUALALAMPUR/COLOMBO | Rs. 25,600 |
| COLOMBO/MELBOURNE/COLOMBO | Rs. 99,500 |
| COLOMBO/LONDON | Rs. 41,200 |
| COLOMBO/DUBAI | Rs. 23,800 |
| COLOMBO/DOHA | Rs. 25,500 |

- London
- Perth
- New York
- Auckland
- Doha
- Thiruchi
- Delhi
- Bangkok
- Honk Kong
- Guangzhou
- Narita
- Melbourne
- Toronto
- Sydney
- Madurai
- Bombay
- Singapore
- Malaysia
- Rome
- Dubai

ஹேலீஸ் டிரவல்ஸ் & டூர்ஸ்
உங்கள் உல்லாச பயணத்திற்கு ஒரே தெரிவு!
யாழ்ப்பாணக்கிளை: 275, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 1878 மனோ : 077 773 0818
Skyline

## கட்டாக்காலி மாடு ஏலவிற்பனை

கட்டாக்காலி மாடு ஒன்று நல்லூர் பிரதேசசபையால் கொக்குவில் பகுதியில் கைப்பற்றப்பட்டு சபையின் பொறுப்பிலுள்ளது. இம்மாட்டினை உரிமைகோருபவர் எதிர்வரும் 26.01.2015ஆம் திகதிக்குள் உரிய அடையாளங்களை சமர்ப்பித்து அதனை மீட்டுச் செல்லுமாறு கேட்டுக் கொள்வதுடன் தவறும் பட்சத்தில் 27.01.2015ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு ஏலவிற்பனை செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

ப.வசந்தகுமார்.
தவிசாளர்,
நல்லூர் பிரதேசசபை.
(C18984) (12.3.7)

## யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

6th Jaffna International Trade Fair

உயர் கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல்
கல்வி யாழ்ப்பாணம்

JITF 2015


ஜனவரி 23ம், 24ம் மற்றும் 25ம் திகதிகளில்
மு.ப.10.00 மணி தொடக்கம் மாலை 08.00 மணி வரை
யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
(சுப்ரமணியம் பூங்காவிற்கு முன்பாக)



தினசரி இசை நிகழ்ச்சி

DAILY MUSICAL SHOWS & STUNT RIDERS Show

MAIN SPONSOR
STERLING AFTER CARE GUARANTEE
CO-SPONSOR
OFFICIAL BANKER
BANK OF CEYLON BOC
LECS LANKA EXHIBITION
Sri Lanka Export Development Board
SUPPORTED BY



# காரைநகர் களபூமி பாலா

# ஸ்ரீ முத்துமாரியம்

## புனராவர்த்தன நூதன து

## நவகுண்டபக

# மகா கும்பாபிஷே

## இன்று (22.01.2

### கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசிச் செய்தி



ஈழத்திருநாட்டின் யாழ். குடாநாட்டினது காரைநகர் பகுதியில் பாலாவோடை எனும் கிராமத்தில் குடிகொண்டு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் பாலாவோடை குறிஞ்சாக்குளி ஸ்ரீ முத்துமாரியம மனுக்கு இன்று மகாகும்பாபிஷேகம் நிகழ்வதனையிட்டு பெருமகிழ்வுடன் ஆசிகளையும் கூறி வைக்க விரும்புகிறேன்.

சைவமும் தமிழும் மங்காத வகையில் அதனை பேணிப்போற்றி வளர்த்து வருகின்ற காரைநகர் பதியிலே பாலாவோடை அம்பாளினு டைய மகா கும்பாபிஷேகம் சிறப்புற இம்முறை ஆலயத்தில் இடம் பெற்றுவரு கின்ற இவ்வேளை புதிய வடிவமைப்பில் அழகுறக் காட்சி அளிக்கிறது இந்த ஆலயம், எனவே இந்த மகா கும்பாபிஷேகப் பெருவிழாவில் கலந்துகொண்டுள்ள அனைத்து சைவப் பெருமக்களுக்கும் எனது நல் ஆசிகளையும் கூறி மகா கும்பாபிஷேகம் சிறப்புற எனது நல் ஆசிகளையும் கூறிநிற்கின்றேன்.

*''அம்பிகையை சரணடைந்தால் அதிகவரம்பெறலாம்''*

பிரதிஷ்டா பிரதமகுரு- ஸ்ரீ நா. பால ஸ்கந்தரூபக் குருக்கள் (ஆலய பிரமதகுரு)

### அம்பாளுக்கு இன்று குடமுழுக்கு

நீர்த் தடாகத்தின் முன் வீற்றிருந்து அகிலமெல்லாம் அருள்
பாலிக்கும் அன்னை முத்துமாரியே! - நீ
ஆட்டுகின்ற விதங்களில் ஆடுகின்ற நாமும்
இன்முகமான இவ்வையகத்தில் உன் முகப்பார்வையும்
எம்மை எல்லாம் மனம் குளிர வைக்குதம்மா
அன்னையே! உன்னுடைய குடமுழுக்கு விழாவில்- நீர்
காணும் எத்தனையோ குடமுழுக்கு விழாவில்
நாம் காண்பது ஒரு சிலவே - அந்த ஒருசில
குடமுழுக்கு விழாவில் நாம் காணும்போது
எம்மை எல்லாம் ஆனந்தம் ஆக்குதம்மா
நாம் வாழும் பூமியிலே இந்தக் காலம் எல்லாம் - உம்
நினைவை மறக்கலாமோ! மறந்தாலும் - தட்டி எழுப்புவாய்
உன் திருவருளால் குடமுழுக்கு விழாவினைப் பார்போம்
சரணம் தாயே! சரணம் சரணம்

S. மனோகரன்.

## தல வரலாறு

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமேல் திசையில் அமைந்துள்ளது காரைநகர். இது நாற்புறமும் கடலாற் சூழப்பட்டும் காரைச் செடிகள் முற்காலத்தில் நிறைந்தும் காணப்பட்டதால் காரைதீவு என அழைக்கப்பட்டது. அகத்தியர், துர்வாசமுனிவர் ஆகியோர் தவம் செய்த புண்ணிய பூமி.

பிரமதேவர் உலகங்களைப் படைக்கும்போது இக்காரை நாடு இவ்வாறு அமைய வேண்டுமென்னும் ஆசையோடு படைத்தாரென்று புராணங்கள் கூறுகின்றன. அறப்பெரிய தவமாற்றி வீடுற்ற தலப் பெருமையுடைய இவ்வூரில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூவகைச் சிறப்புடைய தலமாக அடியவர் ஒருவரின் அன்பொழுகும் கண்களுக்கு வேப்பமரத்திலுள்ள குறிஞ்சாச் செடியின் மத்தியில் தரிசனம் தந்த பாலாவோடை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் விசேடமானதாகும்.

குளக்கோட்டன், நீலன் என்னும் அரசர்கள் இராசாவின் தோட்டம் என்ற இடத்தில் அரசமாளிகை அமைத்து அரசாட்சி புரிந்துவந்தபோது போர்ப்படைகளை அனுப்பி போர்புரிந்த இடமே களபூமி என்றும் ''சூழ் வழங்கப் பொன் விளையுங் களபூமி'' எனவும் வழங்கப்படும். நெற் களஞ்சியமான வயல்கள் இருந்த இப்பகுதியின் தென் கிழக்குப் பகுதியில் பசுமாடுகள் நிறைந்து காணப்பட்டமையால் பாலாவோடை என்ற நாமம் அக்குறிச்சிக்கு ஏற்பட்டது. களபூமிப் பகுதியில் வாழும் பெருமக்களை வீரம்மிகுந்தவர்களாகப் பேசுவதைக் காண்கின்றோம். இது ஒன்றே இப்பகுதி போர்க்களமாக இருந்ததற்குத் தக்க சான்றாக இருக்கின்றது இங்கு வீற்றிருக்கும் அம்பாள் வீரத்தை வழங்கி வீறு நடைகொண்ட தெய்வமாக அருட்கடாட்சம் புரிவது அம்பாளின் திருவருட் செயலாகும்.

1825 ஆம் ஆண்டிற்கு முன்பு தோப்புக்காடு அன்பர் ஒருவரின் கண்களுக்கு வேப்பமரத்திலுள்ள குறிஞ்சாச் செடியின் மத்தியில் அம்பாள் தரிசனம் கொடுத்தார். அவ்விடத்தில் ஊர்மக்கள் குடில் கட்டி வழிபட்டார்கள். நாக பாம்பு ஒன்றும் அம்மனுடனேயே இருந்து வந்துள்ளது. தென்னிந்திய சிற்பாச்சாரியர்களைக் கொண்டு ஐந்து தலை நாகத்துடன் கூடிய மூலவர் உருவச்சிலையைக் கொண்டு வந்தபொழுது சுங்க அதிகாரியாக இருந்த ஆங்கிலேயர் ஒருவர் அதை இங்கு வரவிடாமல் தடுத்தார். அடுத்த நாள் அவ் அதிகாரி ஆலயம் இருக்குமிடத்தைத் தேடிவந்து உருவச்சிலையைக் கொடுத்தது மட்டுமன்றி கும்பாபிஷேகத்திற் குரிய உதவிகளையும் செய்தார்.

தம்பி பேரம்பலம் என்ற பேரன்பரினால் மடாலயக் கோயிலாக உருவெடுத்த ஆலயத்தின் அத்திவாரக்கல்லினை காசிநாதர் சின்னக்குட்டி என்பவரே நாட்டினார். இவ் மடாலயக் கோயிலின் நித்திய நைமித்திய பூசைகளை கரணவாயைச் சேர்ந்த சைவக் குருமாரே நடத்தினர் என்பர். இக் கோயிலின் முதற் கும்பாபிஷேகம் 1825 ஆம் ஆண்டளவிலேயே நடைபெற்றுள்ளது. மேற் கூறப்பட்ட தகவல்கள் செவி வழக்காகும்.

தம்பி பேரம்பலம் என்பவருக்கு பின்பு அவருக்கு சந்ததிப் பாக்கியம் இல்லாத காரணத்தால் அவரின் உறவினரான சரவணை தம்பிப்பிள்ளை என்பவரே ஆலயத்தை நிர்வகித்து வந்தார். இவர் காலத்தில் விளானையைச் சேர்ந்த க. சுப்பிரமணியம் என்பவரால் பிள்ளையார் பரிவாரமும் திரு. கந்தர் ஆறுமுகம் என்பவரால் சுப்பிரமணியர் பரிவாரமும் வேறு ஒரு அன்பரின் உதவியோடு வைரவர் பரிவாரமும் ஸ்தாபிக்கப்பட்டன.

சரவணை தம்பிப்பிள்ளை அகால மரணமானதைத் தொடர்ந்து பொதுமக்களின் உதவியுடன் கூட்டம் நடத்தப்பட்டு ஆ.ச.சங்கரப்பிள்ளை அவர்கள் ஆலய அறங்காவலர் பொறுப்பை 1942 ஆம் ஆண்டு ஏற்றார். சைவக்குருமார் நடத்தி வந்த பூசைகளை இவர் அறங்காவலர் பொறுப்பை ஏற்ற பின்பு அந்தணப் பெருமக்கள் மூலம் நித்திய நைமித்திய பூசைகளைச் செய்வித்து வந்தார். இவர் காலத்தில் நவக்கிரகங்கள் பரிவாரம், மணிக்கூட்டுக் கோபுரம், உள்வீதியின் அரைவாசிப் பகுதிக்கொட்டகை, திருக்குளம் ஆகியன அமைக்கப்பட்டு 1952 ஆம் ஆண்டு இரண்டாவது மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

ஆ.ச. சங்கரப்பிள்ளை அவர்கள் 1959 ஆம் ஆண்டு காலமானதைத் தொடர்ந்து அ.ச. சங்கரப்பிள்ளையினதும் ஆ.ச. கந்தையாவினதும் பிள்ளைகளுடன் சேர்ந்து தம்பியாராகிய ஆ.ச. ஆறுமுகம் அறங்காவலர்பொறுப்பை ஏற்று நடத்தினர்.


விளம்பர அனுசரணையா

**சண்முகன் ஸ்ரோர்ஸ்**
308, வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 9500

**கண்ணன் ஸ்ரோர்ஸ்**
268 , வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.

**பிள்ளையார் களஞ்சியம்**
இல. 316 , வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 229 0548

**சிவ ஐங்கரன் ஸ்ரோர்ஸ்**
இல. 358 , வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீராமஜெயம்
**ஸ்ரீசிவராம் ரேடர்ஸ்,**
284 , வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.

**ஐங்கரன் ஸ்ரோர்ஸ்**
354, வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.

**சிவலிங்க ராசா ஸ்ரோர்ஸ்**
**(சிவா)**
துறைமுகம் காரைநகர்.

**கிருஸ்ணா ஜுவல்லறி**
இல. 09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

**றாபா**
**வர்த்தக**
104- A,
யாழ்
தொ.பே.

**மனோஜ்**
கஸ்தூ

22 JAN 2015

# லாவோடை குறிஞ்சாக்குளி
# ம்மன் தேவஸ்தானம்
## துவிதள விமான அஷ்டபந்தன
## டபக்ஷ பிரதிஷ்டா
# ஷேக சிறப்பிதழ்
## ்1.2015) வியாழக்கிழமை



## லாறு

1971 இல் தேர் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் சில்லுகளுக் குரிய மரங்கள் கிடைக்கவில்லையே என ஏங்கிக்கொண்டிருந்த வேளையில் அம்பாள் தீர்த்தமாடும் தீர்த்தக்குண்டு என்னும் ஆழம் குறைந்த பரவைக் கடற்கரை மருங்கில் ஒரு பெரிய தேக்கமரம் தெய்வாதீனமாக வந்தடைந்தமை அம்பாளின் திருவருட் செயலாகும். ...ரம் தேர்த்...பணி வேலைகளுக்குப் பயன்பட்டது. 1973 ஆம் ஆண்டு ஏற்பட்ட அ...பாவிதம் கார...மாகவும் பின்னர் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற திருப்பணி வேலைகள் காரணமாகவும் பாலாவோடையைச் சேர்ந்த சி.க. நடராசாவினால் செய்து கொடுக்கப்பெற்ற உற்சவ விநாயகர், சுப்பிரமணியர் பிரதிஷ்டையுடன் 1977 ஆம் ஆண்டு மூன்றாவது முறை கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1984 ஆம் ஆண்டு புதிய தேரொன்று அப்போதைய அறங்காவலர் ஆ.ச. ஆறுமுகம் அவர்களின் அயராத பெரு முயற்சியினாலும் பல பெரியார்களின் உறுதுணையுடனும் அமையப் பெற்று வெள்ளோட்ட விழாக்கண்டு அக்காலம் தொடக்கம் அம்பாள் அத்திருத்தேரில் பவனி வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இந்தக் காலத்தில் கோபுரத் திருப்பணியும் பாலாவோடையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை செல்வரத்தினம் குடும்பத்தினரால் ஆரம்பிக் கப்பட்டது. பின்பு நாட்டு நிலைமை காரணமாக தடைப்பட்டிருந்தும் அம்பாளின் திருவருளால் மீண்டும் மேற்படி குடும்பத்தினரின் விடா முயற்சியால் இராஜகோபுரம் பூரணமடைந்ததோடு அவர்களின் உபயமாக கோபுர கும்பாபிஷேகமும் நடைபெற்று இப்போது அம்பாள் அடியார்களுக்கு இராஜகோபுர தரிசனம் கிடைக்கப் பெற்றமை மகிழ்ச்சி தரும் விடயமாகும். 1991 ஆம் ஆண்டு யுத்த சூழ்நிலையால் மக்கள் இடம் பெயர்ந்து ஆலய நித்திய பூசை தடைப்பட்டது. 1991 ஆம் ஆண்டில் ஆலய அறங்காவலர் ஆ.ச. ஆறுமுகம் கொழும்பில் மரணமானார். பின்னர் 1997 ஆம் ஆண்டு ஒரு சில மக்கள் திரும்பி வந்து செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் விளக்கேற்றி வழிபட்டு, (அறங்காவலர்களின் குடும்பத்தினர் கொழும்பில் இருந்த படியினால்) 1997 ஆம் ஆண்டு வைகாசி மாதத்தில் கூட்டம் ஒன்று கூடப்பட்டு ஒரு திருப்பணிச் சபை உருவாக்கப்பட்டது 1972 ஆம் ஆண்டு ஆனி மாதம் 25 ஆம் திகதி பாலஸ்தாபனம் செய்யப்பட்டு நித்திய பூசைகள் ஆரம்பிக் கப்பட்டன. 1998 ஆம் ஆண்டு ஆனி மாதம் 31 ஆம் திகதி அறங்காவலர் குடும்பத்தினரிடம் கோயில் நிர்வாகத்தைத் திருப்பணிச் சபையினர் கையளித்தனர். அறங்காவலர்களின் குடும்பத்தினர் ஒன்று சேர்ந்து 17.07.2000 ஆம் ஆண்டு அறங்காவலர் சபையை உருவாக்கிப் பதிவு செய்தனர். அறங்காவலர் சபையினர் அயராத முயற்சி செய்து திருப்பணி வேலைகள் துரித கதியில் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்தபொழுது முன்பு ஆன்மீக விதிகளுக்கு மாறான இடத்தில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டமையினால் ...கை மா...9 ஆம் திகதி (14.12.2000) மீண்டும் பாலஸ்தானம் செய்யப்பட்டு கு...ாபிஷேகத்...குரிய ஒழுங்குகளை மேற்கொண்டு தைத் திங்கள் 16 ஆம் நாள் (29.01.2001) நான்காவது தடவையான கும்பாபிஷேகத்தை அம்பிகை அடியார்களின் ஒத்துழைப்புடனும் அம்பாளின் அருட்காட்சத்தினாலும் நடத்தினர்.

இவ் ஆலயத்தின் வெளி வீதிப் பிரகாரங்களில் வேம்பு, அரசு, ஆல், இலுப்பை முதலிய மரங்களுள்ளன. ஆலயத்தின் வடகிழக்குப் பக்கத்தில் வைரவ சுவாமி வீற்றிருக்கும் ஆலய தல விருட்சமாக விளங்கும் இலுப்பை மரம் ஏறக்குறைய 200 ஆண்டுகள் வரை இருந்து கொண்டிருப்பதாக எண்ண இடமுண்டு. இது ஆலயத்தின் தொன்மையை எடுத்துக் காட்டுகின்றது. இங்குள்ள அன்னதான மண்டபம் அமரர் வே.இ.தம்பிப்பிள்ளை அவர்களினால் உருவாக்கப்பட்டு திருவிழாக்காலத்தில் பசிப்பிணி தீர்க்கும் அமுதசுரபியாக மிளிருகின்றது. ஆலயத்தின் தென்கீழ் திசையில் அமைந்துள்ள திருக்குளம் விளானையைச் சேர்ந்த அன்பர் தில்லையம்பலம் அவர்களின் பெருமுயற்சியால் அழகாக அமைக்கப்பட்டு புஷ்கரணியாக மிளிருகின்றது. வைகாசி அலங்காரத் திருவிழாவின் ஏழாம் நாளன்று முல்லைத்தீவிலுள்ள வற்றாப்பளை அம்மனின் பிரகாசமான ஒளியை பாலாவோடை அம்மனின் கிழக்கு பக்கமாக உள்ள கடற்பரப்பில் அடியார்கள் கண்டு ஆனந்தம் கொண்டுள்ளார்கள்.



ஈழநாட்டின் வடபாலுள்ள யாழ்.குடாநாட்டில் காரைநகர் பதியில் பாலாவோடைக் குறிச்சியில் சமுத்திரக்கரையில் கிழக்குநோக்கி வீற்றிருந்து அருள் மழை பொழியும் அன்னை பராசக்தியின் கும்பாபிஷேகப் பெருவிழா இன்று 22.01.2015 நடைபெறத் திருவருள் கிடைக்கப்பெற்றுள்ளது. குறிஞ்சாக்குளி முத்துமாரி அம்பாள் என்னும் திருநாமம் கொண்டு காட்சி அளிக்கும் தேவியின் எழில்மிகு தோற்றத்தை ஒத்த தோற்றத்தை வேறு எந்த அம்பாள் ஆலயத்திலும் காண்பதரிது. தீராநோய் தீர்த்தருளவல்ல முத்துமாரி அம்பாளின் எழில்மிகு காட்சியைப் பார்த்துப் பணிவதற்கு ஆயிரம் கண்வேண்டும் என்று கூறின் மிகையாகாது.

"ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்  
பூத்தாளை மாதுளம் பூநிறத்தாளைப் புவியடங்கக்

காத்தாளை அங்குசபாசாங்குசமுங் கரும்புமங்கை  
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே"

இக்குடமுழுக்குவிழாவிலே பங்குபற்றி மனம்மொழிமெய்களால் வழுத்துவார்க்கு தேவியின் அருட்கடாட்சம் கிடைக்கப்பெறு மென்பதில் கிஞ்சிற்றேனும் ஐயமில்லை.

"சின்னஞ் சிறியமருங்கினில் சாத்திய செய்யப்படும்  
பென்னம் பெரிய முலையும் முத்தாரமும் பிச்சி மொய்த்த  
கன்னம் கரிய குழலும் கண்மூன்றும் கருத்தில் வைத்  
தன்னம் தனியிருப்பார்க்கிது போலுந் தவமில்லையே" என்கின்றது அபிராமிப்பட்டரின் பாடல்.

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர் காடுவாராத நட்பும், மாறாத வளமையும் குன்றாத இளமையும் கழுபிணி இலாத உடலும், சலியாத மனமும் அன்பகலாத மனைவியும் தவறாத சந்தானமும் தளாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும் தடைகள் வாராத கொடையும் தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு துன்பமில்லாத வாழ்வும் தந்து காத்தருள்வாள் அருள்மிகு அன்னை பராசக்தி.கும்பாபிஷேகப் பெருவிழாவில் பங்குபற்றும் அடியவர்களுக்கு தேவியின் அருட்கடாட்சம் கிடைக்கவும் கும்பாபிஷேகம்ஒ இனிதே நடைபெறவும் உளமார வாழ்த்துகின்றேன்.

ச.ச.இராசரத்தினம்,  
தலைவர், அறங்காவலர் சபை, முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம். பாலாவோடை, காரைநகர்.



காரைநகர் பாலாவோடைப் பதியில் இருந்து அருளாட்சி செய்யும் குறிஞ்சாக்குளி முத்துமாரி அம்பாளிற்கு அடியவர்கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப்பினால் இன்று மஹா கும்பாபிஷேகம் இடம்பெறுவதையிட்டு மன மகிழ்வடைகின்றேன்.

மண்ணில் பிறந்த ஒவ்வொரு உயிரும் இறையருளுக்கு ஆட்படுவதே இவ் வாழ்க்கை. அதை அடிப்படையாகக் கொண்டே கிராமங்கள் நகரங்கள் தோறும் ஆலயங்களை முன்னோர்கள் அமைத்துள்ளனர். ஆலயங்களில் நடைபெறும் விழாக்கள் வழிபாடுகள் ஆன்மா ஈடேற்றத்தைத் தருவதாகும். பன்னிரண்டு வருடத்துக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகத்தை கண்ணாரக் கண்டு மனதார அனுபவித்து வாழ்வதே வாழ்வு. அந்த வகையிலே எமது முன்னோரால் அமைக்கப்பட்ட இந்த ஆலயம் காலத்திற்குக் காலம் பல திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு நான்கு தடவைகள் கும்பாபிஷேகம் இடம்பெற்று வந்ததுடன் நித்திய நைமித்திய உற்சவங்களும் முறைதவறாது சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.

இந்த ஆலயத்தில் பல்வேறு திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு ஐந்தாவது தடவையாக மகா கும்பாபிஷேகம் இடம்பெறுகின்றது. இந்த திருப்பணி வேலைகளில் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அடியவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன். புதிய மணிமண்டபத்தினை அழகுற அமைத்துத் தந்த K.K.V.குலரத்தினம் குடும்பத்தினருக்கும், வெளிநாடுகளில் வசிக்கும் களபூமி அன்பர்களுக்கும், உள்ளூர் வர்த்தக பிரமுகர்களுக்கும், பல்வேறு இடையூறுகளுக்கும் மத்தியிலும் கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற பூரண ஒத்துழைப்பு வழங்கிய களபூமி வாழ் இளைஞர்களுக்கும் சிறப்பாக நன்றியைத் தெரிவிப்பதுடன், இவர்களின் ஒத்துழைப்பால் புதிதாக வசந்தமண்டபம், புதிய மணிமண்டபம் என்பன அமைக்கப்பட்டதுடன், பிள்ளையார், முருகன், வைரவர் சந்நிதான தூபிகள் புதிதாக அமைக்கப்பட்டு தீர்த்தக்கேணி புனரமைக்கப்பட்டு இன்றும் பல்வேறு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு பெருஞ்சாந்தி பெருவிழாவாக மகா கும்பாபிஷேகம் இன்று இடம்பெறுகின்றது. இந்தக் கும்பாபிஷேக பெருவிழாவிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறுகின்ற நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளும் அடியவர்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

ச.ச.பாலச்சந்திரன்,  
செயலாளர்.


ணையாளர்கள்

**எஸ். வி. முருகேசு**  
154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.  
தொ.பே. 021 492 5831/ 222 8899

**றூபா பன்முக ர்த்தக நிலையம்**  
104 - A, ஸ்ரான்லி வீதி,  
யாழ்ப்பாணம்.  
தொ.பே. 021 222 8330

**நாராயணா ஹாட்வெயார் ரேடர்ஸ்**  
இல.92 - C, ஸ்ரான்லி வீதி,  
யாழ்ப்பாணம்.  
தொ.பே. 021 222 5390

**யாழ் ரேடர்ஸ் சென்ரர்**  
பாட்டா முகவர்  
11, நவீன சந்தை, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

**னோஜ் எக்ஸ்பிரஸ் (பிறை. லிமிட்.)**  
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**V.S.K.லொட்ஜ்**  
வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

# பல்சுவை

## உங்கள் முடிவுகளுக்கு நீங்களே பொறுப்பு

எமது வாழ்க்கையை நாம் எப்படி வாழ வேண்டும், நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் நமக்கு வெளியில் உள்ளவர்கள்தான் முடிவு செய்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக, மரபு என்ற பெயரில் தொடர்ந்து நடந்து கொண்டுவரும் ஓட்டம்தான் இதை நிர்ணயிக்கிறது. இந்த ஓட்டத்தைப் பொறுத்தவரையில் தன்னுடைய தொடர்ச்சி மட்டும்தான் அதற்கு முக்கியம். எவரையும் இது கணக்கில் கொள்வதில்லை. பெற்றோர்களும் இந்த ஓட்டத்துக்குக் கட்டுப்பட்டவர்கள்தான். இது பெற்றோர்களின் வழியாகத்தான் செயற்படுகிறது. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் பிரச்சினை வராதவரை, இந்த அடையாளம் பற்றிய கேள்வியே எழுவதில்லை. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே கடுமையான முரண்பாடுகள் வரும் போதுதான் இந்தப் பிரச்சினை தலையெடுக்கிறது.

இந்தக் காலகட்டம் புதியது. இப்போது நடந்து கொண்டிருக்கும் விடயங்கள் இதுவரையில் நடக்காதவை. இதுவரையில் பெற்றோரின் ஆதிக்கத்தில்தான் நாம் இருந்து வந்திருக்கிறோம். ஆனால் இதுவரை நாம் அறிந்திராத விடயங்கள் பரவலாக வெளிப்பட்டிருக்கின்றன. புதிய அறிவு அனைத்துத் துறைகளிலும் வெளிப்பட்டிருக்கிறது. பெற்றோரைவிட மக்களுக்கு அதிக அறிவு கிடைத்திருக்கிறது. பெற்றோரிடம் பிள்ளைகளுக்கு முன்பு இருந்த பயம் இப்போது இல்லை. ஆனால் பெற்றோர் அன்பு என்னும் பெயரில் இன்னும் ஆதிக்கம் செலுத்த முற்படுகிறார்கள். பெற்றோரின் மனம் புண்படுமே என்ற குழந்தைகளின் நினைப்பை அவர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அவர்களுக்கும், எது சரி, எது தவறு, என்பது குறித்துப் பெருமளவுக்குக் குழப்பமும் இருக்கிறது. தனது முடிவுகளுக்குப் பொறுப்பேற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறோமா என்பதை வைத்துத்தான் நாம் எம்முடைய முடிவுகளை எடுக்க வேண்டும். இதுதான் சரியான முடிவு,' என்று யாராலும் சொல்ல முடியாது. நன்கு சிந்தித்துச் செயற்படுங்கள். நீங்களா? மற்றவர்களா? உங்கள் வாழ்க்கையில் அதி முக்கியமான நபர் யார்? நீங்களா? மற்றெவருமா? இந்தக் கேள்விக்கான விடைகளை வைத்துத்தான் உங்கள் முடிவு அமைய முடியும். இதை வைத்துத்தான் உங்கள் வாழ்க்கையும் உங்கள் எதிர்காலமும் அமையும். உங்கள் வாழ்க்கைப் பாதை எந்தத் திசையில் நகரப் போகிறது; நகர வேண்டும் என்பதை நீங்கள் மட்டும்தான் தீர்மானிக்க முடியும். உங்கள் முடிவு எதுவாக இருந்தாலும், அதற்கு முழுப் பொறுப்பையும் நீங்களே ஏற்றுக்கொள்ளுங்கள்.



## தன்னைப் பற்றி அறிந்து கொள்ள பிரத்தியேக அறிவு அவசியம்

'தான்' என்பதை அறிவதற்கு எமக்குப் பிரத்தியேகமான அறிவு தேவைப்படுகிறது. ஆத்மாவை அறிவதற்கு பொருளைப் பற்றிய அறிவோ அன்றி உலகியல் அறிவோ எவ்விதத்திலும் துணைபுரியாது. 'தான்' அல்லது ஆத்மாவை அனுபவிப்பதற்கு எமக்குத் தேவைப்படுவது தன்னைப் பற்றிய அறிவு அல்லது ஆத்ம ஞானம்.



சாயி சிந்தனை

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 800 | 600 | 420 |
| நண்டு | 250 | 550 | 350 | 400 | 270 |
| கணவாய் | 400 | 550 | 500 | – | – |
| பாரை | 550 | 450 | 500 | 500 | 400 |
| சுறா | 550 | 600 | 600 | 800 | – |
| சீலா | 250 | 400 | 450 | 500 | 320 |
| விளை | 600 | 350 | 500 | 500 | 350 |
| முரல் | 300 | 250 | 350 | – | – |
| கும்பிளா | 450 | 250 | 500 | – | 250 |
| கிழாக்கன் | 300 | 500 | 400 | 600 | – |
| ஒரா | 400 | 400 | 600 | – | – |
| திரளி | 200 | 250 | 200 | 100 | – |
| நகரை | 200 | 250 | 350 | – | 250 |
| சூடை | 150 | 150 | 160 | 100 | 70 |
| ஒட்டி | 150 | 150 | 300 | 150 | 150 |
| திருக்கை | 150 | 250 | 200 | 300 | 130 |
| பாலை | 400 | 250 | 400 | 250 | – |
| வாழை | 150 | 150 | 300 | 300 | 200 |
| கொய் | 130 | 150 | 100 | 100 | – |
| மதனம் | 150 | 250 | 250 | – | 150 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### வெற்றியோ தோல்வியோ போராடுங்கள்

உலகவாழ்வில் இருந்து தப்பி ஓட முயற்சி செய்ய வேண்டாம். வெற்றியோ தோல்வியோ போராடுங்கள்.

பாமரன் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவன் தெய்வமாகவும் உயரவேண்டும். இதுவே ஆன்மிகத்தின் பயன்.

தெய்வீகத்தன்மை இல்லாமல் பெறும் மிதமிஞ்சிய அறிவும், ஆற்றலும் மனிதர்களை மிருகங்களாக்கிகீழ்நிலைக்குத்தள்ளிவிடும்.

சுயநலம், சுயநலமின்மை இந்த இரண்டையும் தவிர கடவுளுக்கும் சாத்தானுக்கும் வேறுஎந்தவிதமான வேறுபாடும் கிடையாது.

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | கிளிநொச்சி | திருநெல் வேலி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 140 | 60 | 80 | 80 | 40 | 100 | 100 |
| கத்தரி | 200 | 200 | 200 | 200 | 200 | 160 | 280 | 130 |
| கரட் | 160 | 200 | 160 | 200 | 260 | 160 | 240 | 300 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 60 | 50 | 50 | 60 | 40 |
| பயிற்றை | 160 | 140 | 160 | 200 | 160 | 140 | 240 | 110 |
| பாகல் | 200 | 280 | 120 | 150 | 200 | 160 | 240 | 180 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 60 | 80 | 60 | 120 | 50 |
| பெ.வெங்காயம் | 120 | 80 | 90 | 100 | 100 | 70 | 80 | 80 |
| சி.வெங்காயம் | 60 | 120 | 100 | 80 | 120 | 80 | 120 | 100 |
| பூசணி | 40 | 50 | 50 | 50 | 80 | 60 | 80 | 45 |
| தக்காளி | 180 | 220 | 180 | 180 | 200 | 180 | 240 | 180 |
| வாழைக்காய் | 90 | 80 | 70 | 100 | 120 | 80 | 120 | 90 |
| கீரை | 10 | 20 | 30 | 20 | 40 | 20 | 50 | 35 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 40 | 50 | 30 | 30 | 20 | 15 |
| மிளகாய் | 500 | 500 | 400 | 550 | 600 | 480 | 800 | 700 |
| புடோல் | 120 | 120 | 80 | 120 | 140 | 130 | 180 | 150 |
| கோவா | 120 | 150 | 120 | 180 | 200 | 120 | 200 | 160 |
| வெண்டி | 180 | 140 | 100 | 120 | 120 | 140 | 160 | 160 |
| போஞ்சி | 200 | 240 | 200 | 240 | 200 | 220 | 300 | 170 |
| லீக்ஸ் | 280 | 300 | 240 | 280 | 400 | 280 | 280 | 300 |
| தேங்காய் | 50 | 40 | 60 | 40 | 40 | 45 | 45 | 45 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 90 | 80 | 60 | 80 | 80 |
| தேசிக்காய் | 60 | 60 | 70 | 80 | 40 | 60 | 100 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 20 | 10 | 30 | 20 | 15 |
| கறிமிளகாய் | 250 | 300 | 250 | 320 | 300 | 300 | 500 | 400 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 | 140 | 120 | 90 | 180 | 80 |
| பனங்கிழங்கு | 05 | 04 | 05 | 05 | 05 | 05 | – | 03 |

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | | | | | 5 |
| | 8 | | | 2 | | 4 | 3 | 7 |
| | | | | | 4 | | 6 | 1 |
| 3 | 7 | | | | 9 | | 8 | |
| | 4 | 1 | 6 | | 7 | 3 | 5 | |
| | 9 | | 1 | | | | 4 | 2 |
| 4 | 1 | | 7 | | | | | |
| 8 | 2 | 3 | | 1 | | | 7 | |
| 9 | | | | | | | 1 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 8 | 3 | 9 | 2 | 5 | 7 | 6 |
| 6 | 2 | 3 | 7 | 1 | 5 | 9 | 4 | 8 |
| 9 | 7 | 5 | 4 | 8 | 6 | 2 | 1 | 3 |
| 4 | 5 | 1 | 8 | 2 | 3 | 7 | 6 | 9 |
| 8 | 6 | 7 | 1 | 5 | 9 | 4 | 3 | 2 |
| 3 | 9 | 2 | 6 | 7 | 4 | 1 | 8 | 5 |
| 2 | 8 | 6 | 9 | 4 | 1 | 3 | 5 | 7 |
| 5 | 3 | 4 | 2 | 6 | 7 | 8 | 9 | 1 |
| 7 | 1 | 9 | 5 | 3 | 8 | 6 | 2 | 4 |

## நாளை

**தை-09 வெள்ளிக்கிழமை**

**23.01.2015**

திதி: திருதியை பி.ப.01.21 வரை

நட்சத்திரம்: சதயம் மு.இ.10.01 வரை

சுபநேரம்: 06.36-08.06 வரை

இராகுகாலம்:11.06-12.36 வரை

சதுர்த்தி விரதம்

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே யும் 3 நிரல் களையும் 3 நிரை களையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப் பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகை யில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட் டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# சோதிடம்




கேதுவுடன் குரு சேர்ந்த ஆதிக்கப் பலன் இவர்களுக்கு அமையும். உயரமாக இருப்பார்கள். உருண்டை முகத்தில் நெற்றி மேடாக இருக்கும்.

தெய்வபக்தி உள்ளவர்கள். பரம்பரைப் பழக்க வழக்கங்களில் பற்று, குடும்பப் பாசம், மதப் பற்று, தத்துவ அறிவு பூசை முதலியவற்றில் ஈடுபாடு கொண்டிருப்பர். ஆடையலங்காரத்திலும் அக்கறை காட்டுவர். இவர்களைப் பார்த்தால் அப்பாவி போல இருப்பார்கள்.

பழமையை விடாமல் புதுமையில் ஏற்றத்தை விரும்புவார்கள். குடும்பம், நாடு, இனம், மொழி என்று அனைத்துக் கருத்துக் கலையும் கொண்டிருப்பார்கள். உற்சாகம் இருக்கும்போது நன்கு பேசுவார்கள். பிறரை நன்கு புரிந்து வைத்திருப்பர். இவர்கள் பேச்சை எளிதாகப் பிறர் நம்பி விடுவர். பல மொழிகள் பேசத் தெரிந்தவராக இருப்பர்.

## கூட்டெண் பலன்கள் 7-3

கல்வி, தொழில், வாழ்க்கைத் துணை, வேலை என எல்லாம் இச்சைப்படியே தேர்ந்து எடுப்பார்கள். காதல் விவகாரத்தில் அவமானப்பட நேரும். தோல்வியும் ஏற்படும். ஆனாலும் இவர்கள் மறு காதல் விவகாரத்தில் போராடி வெற்றி பெறுவர்.

கற்பனை ஆக்கபூர்வமாக இருக்கும். எழுத்திலும் மேடைப் பேச்சிலும் நன்கு உதவும். ஆசிரியராக, எழுத்தாளராக, கணக்காளராக, வேலையில் இருப்பர். இசை நடனம், தரகர், புரோகிதர் போன்ற தொழில்களையும் செய்வர். கபம் தொண்டையைப் பாதிக்கும். பித்த வாந்தி, காய்ச்சல் ஏற்படும். வயிற்றுக் கோளாறு, மலச்சிக்கல் இருக்கும்.

இந்த எண்காரர்களுக்கு கேதுவுடன் ராகு சேர்ந்த ஆதிக்கப்பலன் அமையும். சனியும் சுக்கிரனும் சேர்ந்த பலனைத் தரும். இவர்கள் கறுப்பாகவும், உயரமாகவும் இருப்பர். இனிமையாகப் பேசுவர். கூரிய பார்வை இருக்கும்.

மனம் சலனப்படும். கோபம் அதிகம் இருக்கும், பேச்சு கலகலப்பாக இருக்கும். ஒழுக்கம், கட்டுப்பாடு உடையவர்கள். உடல் நன்கு வளையும். நண்பர்கள் அதிகம் இருப்பார்கள். யாருக்கும் அடங்க மாட்டார்கள். இச்சைப்படி நடந்து வம்புகளில் சிக்குவர்.

இவர்களை புரிந்து கொள்ள முடியாமல் மற்றவர்கள் குழம்புவர். நன்கு சிந்திப்பார்கள். பிறருக்கு வரும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள ஆலோசனைகள் மிகச் சுலபமாக வழிகாட்டிடுவர்.

ஓரளவு மன விகாரத்துடனே வாழ்வர். நன்றாக வருமானம் வரும். மனமொத்த துணையோடு, அழகான வாழ்க்கை அமையும். இல்லற இன்பத்தை விரைவில் வெறுத்துவிடுவர். படிப்பு, கல்வியில் மனம் இறுதிவரை செல்லும்.

கலை, கலை சார்ந்த தொழில் கிட்டும். கதை, கவிதை, நாடகம், நடிப்பு என எல்லா வற்றிலும் திறமை இருக்கும். இவர்

## கூட்டெண் பலன்கள் 7-4

கள் எதிர்பாராத தொழிலே இவர்களுக்கு அமையும். சாதாரணமாக இவர்களை நோய் பாதிக்காது.

அஜீரணம், மலச்சிக்கல், வாத சுரம் உண்டாகும்.




# கிராமத்து பெண்களின் நகர வாழ்க்கை


– அகல்யா

இன்றைய காலகட்டத்தில் கிராமத்துப் பெண்கள் பலர் குடும்ப வாழ்க்கை, வேலை போன்ற காரணங்களால் நகரத்துக்கு வரும் நிலை ஏற்படுகிறது. கிராமப்புறங்களில் உள்ள பெண்கள் படிப்பில் நகரப்புற பெண்களை விட முன்னணியில் உள்ளனர்.

எனவே இவர்கள் வேலை தேடி நகரத்துக்கு வரும் நிலை ஏற்படுகிறது. வெளியுலகம் பற்றிய போதிய அனுபவம் இல்லாத கிராமத்துப் பெண் ஒரு கட்டத்தில் நகர வாழ்க்கைக்குள் நுழைகிறாள். அதாவது வேலைக்காகவோ அல்லது திருமணமாகி குடும்ப வாழ்க்கைக்காகவோ நகரத்துக்கு வருகிறாள். தெரியாத இடம், புரியாத மனிதர்கள், நகரத்தின் நாகரிகம் போன்ற சூழ்நிலைகளில் அவள் பல இன்னல்களைச் சந்திக்க நேரிடுகிறது. நகரத்துக்கு வேலைக்கு வரும் கிராமத்துப் பெண்கள் அவர்களின் தோற்றம், உடை, பேச்சு போன்றவை அங்கு வேலைபார்ப்பவர்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாக இருக்கும். இது அவர்களுக்கு ஒரு தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தும். மேலும் தங்கள் உடை, பேச்சு போன்றவற்றை மற்றவர்கள் கிண்டல் செய்வார்களோ என்ற தாழ்வு மனப்பான்மை ஏற்படும். எனவே நகர வாழ்க்கைக்கு ஏற்ப தம்மை மாற்றிக் கொள்ள அவர்கள் முயற்சி செய்ய வேண்டும். கிராமத்துப் பெண்கள் நகரத்துக்கு வந்தவுடன் முதலில் பேருந்து, ரயிலில் செல்ல சரியான தகவல் கிடைக்காமல் கஷ்டப்படுவார்கள். தெரிந்தவர்களிடம் அல்லது உடன் வேலை செய்பவர்களிடம் கேட்டு நன்கு தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். முன்பின் அறிமுகமில்லாதவர்கள் யார் வந்து உங்களிடம் பேசினாலும் அவர்களுடன் அதிகம் பேசக்கூடாது. எமது தோற்றம் மற்றும் பேச்சு என்பவற்றைப் பார்த்து கிராமத்து பெண் என்பதை தெரிந்து கொண்டு ஏமாற்ற நினைப்பார்கள். கிராமப் பெண்களை பார்த்தவுடன் ஆட்டோகாரர்கள் சிலர், அதிக பணம் வசூலிக்க பார்ப்பார்கள். அச்சமயத்தில் தைரியமாகப் பேசி மீற்றரை இயக்கு மாறு சொல்ல வேண்டும். அறிமுகமில்லாத எவருடனும் அதிகம் பேசுவதை தவிர்க்க வேண்டும். மேலும், கிராமத்தில் அனைவரிடமும் சகஜமாக பேசுவதைப் போல் அலுவலகத்தில் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் அவர்கள் கிராமத்துப் பெண்கள் தானே இலகுவாக ஏமாற்றி விடலாம் என்று நினைப்பார்கள். இது போன்ற பிரச்சினைகளை எல்லாம் எதிர்நீச்சல் போட்டுச் சமாளித்து வந்தால் பெண்கள் சிறப்பான வெற்றி பெறமுடியும்.

# ஒரே நேரத்தில் பல வேலைகளை செய்யும் பெண்கள்

பலவகையான வேலைகளை ஒரே நேரத்தில் கொடுக்கும் போது அவற்றை ஆண்களை விட பெண்களே மிகவும் வேகமாகச் செய்து முடிப்பதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். பல வேலைகளை ஒன்றாக அடுத்தடுத்து முடிப்பது என்பது அலுவலகங்களில் மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

ஆனால், அதுதான் எமது வேலை தொடர்ச்சியாக நடப்பதிலும் தாமதத்தை ஏற்படுத்துகிறது. எந்த நெருக்கடியான நிலைமையிலும் நின்று நிதானமாகச் சிந்தித்து, திட்டமிட்டு, செயற்படும் திறன் பெண்களுக்கே அதிகம் என்ற முடிவுக்கு விஞ்ஞானிகள் வந்தார்கள். அது மட்டுமின்றி, ஆண்களைப் பொறுத்தவரை அவர்கள், பல வேலைகளை ஒன்றாகக் கையாளுவதில் தாம் உண்மையில் எவ்வளவு திறமையானவர்களோ, அதனைவிட அதிகமாகவே தம்மிடம் திறமை இருப்பதாக தம்மைப் பற்றி நினைத்து கொள்வதாகவும், ஆனால் பெண்களோ அதற்கு மாறாக, தமக்கு குறிப்பிட்ட விடயங்களில் இருக்கும் உண்மையான திறமையின் அளவைவிட குறைவாகவே தமக்கு திறமை இருப்பதாக நினைத்துக் கொள்வதாகவும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

–சோபனா



# தொழில்நுட்பம்

## லப்டொப், கணினிகளை திருத்தம் செய்ய




லப்டொப் கணினியில் எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும் முதலில் உங்கள் கணினியில் ரீஸ்டார்ட் செய்ய வேண்டும். ரீஸ்டார்ட் செய்தும் பிரச்சனை நீடித்தால், இதற்கு முன் கணினியின் ஓஎஸ் அப்டேட் செய்யப்பட்டுள்ளதா என்பதைச் சரி பார்த்துக் கொள்ளுங்கள், சரியான அப்டேட் செய்யப்படாத சமயங்களில் பாதிப்புகள் அதிகம் ஏற்படும்.

ஓஎஸ் இருக்கும் ஹார்டு டிரைவ் ஸ்பேஸ் கனிசமான அளவு வெறுமையாக இருக்க வேண்டும், அவ்வாறு இல்லாத சமயத்தில் ஸ்பேஸை வெறுமையாக்குவது அவசியமாகின்றது. மேலும் temp பைல்களை அடிக்கடி நீங்கவேண்டும். அதற்கு cclcaner மென்பொருள் உபயோகிக்கலாம்.

நீங்கள் அதிவேக இன்டெர்நெட் உபயோகப்படுத்தியும் குறைவான வேகத்தில் பைல்கள் டவுன்லோட் ஆகும். முதலில் உங்கள் இன்டர்நெட்டின் வேகத்தை Speedtest.net என்ற இணையதளத்தின் மூலம் சரிபார்த்துக்கொள்ளுங்கள். ஸ்பீட் குறைவாகக் காட்டினால் இன்டர்நெட் நிறுவனம் வழங்கிய தொடர்பு படுத்தல் குறைபாடு. அதேவேகம் காட்டியும் டவுன்லோட் ஆகவில்லையெனில் உங்கள் கணினியில் idm டவுன்லோடர் உபயோகி யுங்கள்.

சில ஹார்டு வேர் பிரச்சினைகளை சரி செய்வது சிரமமாகத் தான் இருக்கும். கணினி அடிக்கடி ரீஸ்டார்ட் ஆவதற்கு முக்கிய காரணம் வைரஸ், ஆட்வேர், அதிகப் படியான சூடாக இருக்கலாம். கணினியில் விசித்திர சத்தம் கேட்டால் அதைக் கழற்றி நன்கு சுத்தம் செய்ய வேண்டும்.

இன்டெர்நெட் பயன்படுத்தாமல் இருந்தாலும் கணினியில் நிறைய விளம்பரங்கள் தெரிகின்றதா, அப்படியானால் உங்களது கணினியில் ஆட்வேர் இன்ஸ்டால் செய்திருப்பீர்கள், இதைச் சரி செய்ய நிறைய டூல்கள் இருக்கின்றன. அவற்றில் சில பிசி ஸ்பீடு அப், பிசி ஸ்பீடு ப்ரோ, இவைகளில் எதையாவது பயன்படத்தலாம்

ப்ரவுஸர் ஹைஜாக் செய்பவர்கள் உங்களது தகவல்களை கூகுள் தேடல்களின் மூலம் சுலபமாக களவாட முடியும், இதைத் தவிர்க்க ரியல்–டைம் ஆன்டிவைரஸ் பயன்படுத்துவது சிறந்தது.

அடிக்கடி வைபை கனெக்ஷன் டிஸ்கனெக்ட் ஆனால் கணினி வைபை வட்டத்தில் இருக்கின்றதா என்பதைப் பாருங்கள், பின் கணினியின் வயர்லெஸ் டிரைவ்கள் இன்ஸ்டால் செய்யப்பட்டுள்ளதா என்பதையும் சரி பார்த்துக் கொள்ளுங்கள். வேறு ஏதேனும் பிரச்சினை இருந்தால், single click solve internet problem மென்பொருள்களை உபயோகப் படுத்துங்கள்.

இணைய பாதுகாப்பு சான்றிதழ் சரியில்லை என்ற பிரச்சினையா, பழைய கணினிகளில் சிமோஸ் பேட்டரி சரியாக வேலை செய்யாததால் இந்த பிரச்சினை ஏற்படுகின்றது, அதைச் சரி செய்ய கணினியின் நேரம் மற்றும் திகதியை சரியாக வைத்தாலே போதுமானது.

சில சமயங்களில் ஈமெயில் அட்டாச்மென்ட் டவுன்லோடு ஆகவில்லை என்றால், ஈமெயில் ஃபைல் எம்மாதிரியானது என்பதைப் பாருங்கள், அதன் பின் ஃபைல் எக்ஸ்டென்ஷனை ரீனேம் செய்தால் வேலை முடிந்தது

அதிகம் பயன்படுத்தும் மென்பொருள் புதிய கணினியில் வேலை செய்யாவிட்டால் ஜாவா மற்றும் ப்ளாஷ் ஸ்க்ரிப்ட்கள் தான் முக்கிய காரணமாக இருக்கும், இவைகளை அனைத்து பிரவுஸர்களும் இன்ஸ்டால் செய்ய உதவும்.

**கண்ணீர் அஞ்சலி**

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரபாகு கனகாம்பிகை தம்பதியரின் மூத்த மகன்

**வீ. விஜிகரன்**

அவர்களின் மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகிறோம். அவரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கந்தரோடை, சுன்னாகம். (56010) (10.3.7) கந்தையா நவபாலன் குடும்பம்.

**6ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அன்னையின் திருக்கரங்களில் 04 * 09 * 1915 கட்டுவன் தெல்லிப்பழை

ஆண்டவன் திருப்பாதங்களில் 22 * 01 * 2009 ஒன்ராறியோ கனடா

**அமரர் பொன்னம்பலம் முருகேசு**

(ஓய்வுபெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர்)

ஆண்டுகள் மாறலாம் நினைவுகள் மாறாது

சிங்கம்ஸ் பார்மஸி, கோண்டாவில்.

(55939)(10.3.7)

**நீங்கா நினைவுகளுடன் ஆண்டொன்றானது அம்மா......**



மண்ணில் 03.10.1944


விண்ணில் 02.02.2014

**அமரர் யோகம்மா இராசகுமாரன்**

இமை மூடித் திறப்பதற்குள்
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகளுடன்........

ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம். (55929)(12.3.7)

மகன் சந்திரராஜன்.




## விற்பனையை விரிவுபடுத்தும் கூகுள்

கூகுள் நிறுவனம் அன்ரோயிட் இயங்குதளத்தைக் கொண்ட Android One என்ற ஸ்மார்ட் கைப்பேசியை வடிவமைத்திருந்தது.

இந்தக் கைப்பேசியைச் சில மாதங்களுக்கு முன்னர் விற்பனைக்காக அறிமுகப்படுத்த ஆரம்பித்த நிலையில் கடந்த மாதம் ஐக்கிய இராச்சியத்தில் அறிமுகம் செய்திருந்தது.

தற்போது இந்தக் கைப்பேசி விற்பனையை விரிவுபடுத்த எண்ணியுள்ள கூகுள் நிறுவனம், இலங்கை உட்பட நேபாளம் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளிலும் அறிமுகம் செய்யவுள்ளது.

இந்தக் கைப்பேசி பயனர்களுக்கு ஸ்மார்ட் கைப்பேசி தொடர்பான உயர்தர அனுபவங்களை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.



## ஒலிம்பிக்கில் வீடியோ கேம்

உலகில் காணப்படும் பல்வேறு வகையான விளையாட்டுக்களில் அதிகளவானவர்கள் வீடியோ கேமிற்கு அடிமையானவர்கள் எனக் கூறமுடியும்.

இவ்வாறானவர்களுக்காக ஒலிம்பிக்கில் வீடியோ கேமினை ஒரு போட்டியாக நடாத்த வேண்டும் என Rob Pardo என்பவர் தெரிவித்துள்ளார்.

இவர் கடந்த ஜூலை மாதம் வரை Blizzard Entertainment நிறுவனத்தின் தலைமை அதிகாரிகளுள் ஒருவராக இருந்துள்ளார். இவர் இது குறித்து மேலும் குறிப்பிடுகையில் edsports எனப்படும் வீடியோ கேம்களுக்கு உலகெங்கும் மில்லியன் கணக்கான ரசிகர்கள் இருக்கின்றனர் எனவும், அண்மையில் தென்கொரியாவின் Seoul பகுதியில் இடம்பெற்ற இவ்வாறான ஒரு போட்டியில் சுமார் 40,000 ரசிகர்களால் ஸ்டேடியம் நிரம்பியிருந்ததாகவும், மேலும் பலர் ஒன்லைனில் கண்டுகளித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

# கிழக்கு மாகாண சபை மீளவும் ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, ஜன, 22

30 உறுப்பினர்களுடன் நேற்றுமுன்தினம் கூடிய கிழக்கு மாகாண சபை அமர்வு எதிர்வரும் 10ஆம் திகதிக்கு ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபை தவிசாளர் ஆரிய பதி கலப்பதி தலைமையில் நேற்று செவ் வாய்க்கிழமை காலை 9.30 மணியள வில் கிழக்கு மாகாண சபை அமர்வு ஆரம்பமானது. ஆளும் தரப்புக்கு பெரும் பான்மை இல்லாதபோதிலும் மக்கள் நலன் கருதி 2015ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆதரவு அளிப்பது என சிறிலங்கா முஸ் லிம் காங்கிரஸ் தீர்மானித்திருந்ததாக வும் எனினும் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவது உள்ளிட்ட நிதி விவகாரத் திற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கிழக்கு மாகாண சபை நிர்வாகத்துக்கு ஒரு மாதகால விசேட அனுமதி வழங்கி அதற்கான பணிப்புரையை விடுத்திருப் பதால் வரவு செலவுத் திட்டத்தை நிறை வேற்றவேண்டிய தேவை இல்லை எனக் கருதி அமர்வை ஒத்திவைக்கும்படியும் கோரினார் சிறிலங்கா முஸ்லிம் காங் கிரஸ் குழுத் தலைவர் ஏ.எம்.ஜெமீல்.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 10ஆம் திகதிக்கு சபை அமர்வை ஒத்திவைப்ப தாக தவிசாளர் அறிவித்தார்.

கிழக்கு மாகாண சபை மூன்றாவது தடவை ஒத்திவைக்கப்படுவது வரலாற்றில் இதுவே முதற்தடவை. கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற அமர்வின்போது முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் 2015ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டிருந்த நிலையில் அந்த அமர்வு இம்மாதம் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டிருந்தது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் மைத்திரி பால சிறிசேனவை ஆதரிக்கும் தீர் மானத்தை மேற்கொண்ட சிறிலங்கா முஸ் லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாண சபையிலும் ஆதரவை விலக்கிக் கொண் டதை தொடர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கிழக்கு மாகாண சபையில் பலம் இழந்தது. இதனையடுத்து ஏற்பட் டுள்ள அசாதாரண நிலை காரணமா கவே அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற–10)


## யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

தேசிய பாடசாலை

### நவீன கலையரங்க அடிக்கல் நாட்டுவிழா

ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், சுவிஸ், நோர்வே, கனடா
ஆகிய நாடுகளில் இயங்கும் பாடசாலையின்
பழைய மாணவர் சங்க கிளைகள் மற்றும் எமது
தேசத்திலுள்ள பழைய மாணவர்கள், பெற்றோர்கள்,
நலன் விரும்பிகளின் ஆதரவுடன் 2000 இருக்கைகள் கொண்ட
நவீன கலையரங்கு

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி



நவீன கலையரங்கிற்கான அடிக்கல் நாட்டுதல் :- 23.01.2015

காலம் : 23.01.2015 வெள்ளிக்கிழமை மு.ப. 09.00 மணி
இடம் : பாடசாலை வளாகம்
தலைவர் : திரு. அ. கயிலாயபிள்ளை - அதிபர்

பிரதம விருந்தினர்

பேராசிரியர். கலாநிதி க. கந்தசாமி
சிரேஸ்ட பேராசிரியர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சிறப்பு விருந்தினர்





திரு. க. கிருஷ்ணகுமார்
வலயக் கல்விப் பணிப்பாளர்- தென்மராட்சி.

அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்

பாடசாலைச் சமூகம்.



## தேவை

இயக்கச்சியில் இருக்கும் அம்மன் கோயில் ஒன்றுக்கு அந்தணர் தேவை. தகுந்த ஊதியம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 5814 571

(56026) (10)



## மணமகள் தேவை

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஐயர், 46வயது, சித்திரை நட்சத்திரம், துலராசி சென்னையில் மத்திய அரசு நிரந்தர ஊழியராகக் கடமைபுரி யும் மணமகனுக்கு மணமகள் தேவை.

மேலதிக தொடர்புகளுக்கு:
0091 3600113832

(56027) (10)



உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



## இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
## யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம்
## கல்வியாண்டு 2015/16

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தினால் பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

| கற்கைநெறிகள் | அனுமதித்தகைமைகள் | மொழி | கற்கை நெறிக் கான காலம் | விண்ணப்பிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| முகாமைத்துவ இளமாணிக் கற்கைநெறி (Bachelor of Management Studies Degree) | க.பொ.த உயர்தரத்தில் (பழைய பாடத்திட்டம்) நான்குபாடங்களில் சித்தி அல்லது க.பொ.த உயர்தரத்தில் (புதிய பாடத்திட்டம்) மூன்று பாடங்களில் சித்தி அல்லது இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் யாதாயினும் அத்திவாரக் கற்கை நெறிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும் (முதல் இரண்டு வருடக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் முகாமைத்துவ டிப்ளோமாச் சான்றிதழ் பெற்றுக்கொள்ள முடியும்) | தமிழ்/ ஆங்கி லம் | 4 வருடங் கள் | 13.01.2015 -- 13.02.2015 |
| தொழிலுரிமைத்துவமும் சிறுவணிக முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கைநெறி | க.பொ.த சாதாரணதரத்தில் கணிதம் மற்றும் தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் | தமிழ் | 1 வருடம் | 30.12.2014 -- 28.01.2015 |
| முன்பள்ளிகல்விச் சான்றிதழ் கற்கைநெறி | க.பொ.த சாதாரணதரத்தில் கணிதம் மற்றும் தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் | தமிழ் | 1 வருடம் | 30.12.2014 -- 30.01.2015 |

இக்கற்கை நெறிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் பின்வரும் கற்கை நிலையங்களில் தற்போது விநியோகிக்கப்படுகின்றது.

| நிலையம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் | பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம் | 021 - 2223374 |
| வவுனியா கற்கை நிலையம் | இல.366, கண்டி வீதி, தேக்கவத்தை, வவுனியா | 024 - 2222995 |
| கிளிநொச்சி கற்கை நிலையம் | 155 ஆம் மைல்கல், கண்டிவீதி, கிளிநொச்சி | 021 - 2283970 |
| முல்லைத்தீவு கற்கை நிலையம் | ஆதிபராசக்தி அறிவியல் கல்லூரி, 4 ஆம் வட்டாரம், இரணைப்பாலை வீதி, புதுக்குடியிருப்பு | 076 - 6596615 |

பதிவாளர்,
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்.



## கூறுவிலை கோரல்

வடக்கு மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான சபை அமர்வுகள் மற்றும் கூட்டங்களின் போது வழங்கப்படும் உண வுகள், சிற்றுண்டிகள், குடிதண்ணீர்ப் போத் தல்கள் மற்றும் அலுவலக நடவடிக்கைகளுக் கான காகிதாதிகள் அலுவலக சுத்திகரிப்புச் செய்வதற்கான பொருள்கள் அச்சிடல் போன்ற வற்றுக்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

கூறுவிலை கோரல் படிவங்களை A9 வீதி, கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபையின் நிதிக்கிளையில் அலுவலக நேரத்தில் 23.01.2015 தொடக்கம் 06.02.2015 வரை பெற்றுக் கொள்ளலாம்.

செயலாளர்
பேரவைச் செயலகம்,
வடக்கு மாகாண சபை.

(C/18990) (10)



## அழைப்பு "Hero"

நாளை (23.01.2015) வெள்ளிக்கிழமை எமது
ஆர் ஜீ ரேடர்ஸ்
கிளிநகர் காட்சி அறையில்
காலை 9.30 மணிமுதல் 10.30 மணிவரையிலான
சுபவேளையில், கிளிநொச்சி,
பரந்தன் காட்சி அறைகளில்
17.05.2013 முதல் 23.01.2015 வரை
"கீரோ" உந்துருளி கொள்வனவு செய்த
வாடிக்கையாளர்களுக்கான
அதிர்ஷ்டம் பார்க்கும் நிகழ்வு
இடம்பெறவிருப்பதால் அனைவரும்
கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

ஆர் ஜீ ரேடர்ஸ்
உரிமையாளர் & பணியாளர்கள்.

# செய்திகள்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி யோகமலர் தம்பித்துரை



மானிப்பாய் வடக்கு, இராஜகாரியார் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை யோகமலர் நேற்று (21.01.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பித்துரையின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் துரைசிங்கம் (இளைப்பாறிய யாழ்.கொமர்ஷல் வங்கி உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவம் (SVM யாழ்ப்பாணம்), சகுந்தலா, சிவக்குமார் (றூபன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்), பிறேமினி, சிவறூபன் (யாழ்.பல்கலைக்கழக அனுமதிகள் கிளை), சர்மிளா ஆகியோரின் அன்புத் தாயும், ராஜினி, கேதீஸ்வரன் (பிரதேசசபை - வேலணை), குமுதினி, தமிழ்செல்வன், சுபாஜினி (பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்) ஆகியோரின் மாமியும், கிருத்திகா, கயானன், கயானி, திசான், தேனுகாந், சந்தோஸ், மயூதினி, தனுஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2015) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜகாரியார் வீதி,
மானிப்பாய் வடக்கு.
(56020) (12.3.7)
தகவல்:
குடும்பத்தினர்.

### சின்னத்தம்பி சத்தியலோகநாதன் (பவளம்)

தோற்றம் : 22.07.1947 மறைவு : 21.01.2015



மடத்தடி கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சத்தியலோகநாதன் நேற்று (21.01.2015) புதன்கிழமை அதிகாலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-சௌபாக்கியவதி தம்பதியரின் அன்பு மகனும், சிவலோகநாதன் (தங்கம்), கதிர்காமநாதன் (செல்வம்-கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திலகவதி காலஞ்சென்ற சற்குணநாயகி ஆகியோரின் மைத்துனரும், கார்த்திகாலட்சுமி, சீதாலட்சுமி ஆகியோரின் சிறியதந்தையும், மகாலட்சுமி, சிவநாதன் (தம்பா), கணநாதன் (கிச்சான்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2015) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி, கொல்லங்கலட்டி.
077 154 7537
(C/18983) (10.3.7)
தகவல்:
குடும்பத்தினர்.

### ஆரோக்கியநாதர் பேரின்பநாதன்



உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆரோக்கியநாதர் பேரின்பநாதன் 20.01.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆரோக்கியநாதர் - திரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பர்ணாந்து மற்றும் அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், லூர்த்துமேரியின் அன்புக் கணவரும், இன்வன்ராவின் அன்புத் தந்தையும், ஜெயராஜசிங்கம், அருளானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரேசம்மா, ஜெனிற், காலஞ்சென்ற பிரான்சிஸ் மற்றும் அந்தோனிமுத்து (பிரான்ஸ்), பிறேமா, நேசமலர், நேசகிளி, அன்ரனிதாஸ் ஆகியோரின் மைத்துனரும், தீபன் - தர்மினி, மோகன், யசோ - ஜெனிஸ்கொட், ராயன் ஆகியோரின் சிறிய தந்தையும், நிறோசன், நிசா, நிசாந்தினி, நிசாந்தன், டினு, ஜெனிபர், பவுஸ்ரீனா, ஜெசிக்கா, இலக்கியன், மரிஸ்ரெலா, சஞ்செயன், அனு, துளசிகா, அயய் ஆகியோரின் பெரிய தந்தையும், ஜெமித்தின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (22.01.2015) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஆனையூர் அடைக்கல நாயகி ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் பூதவுடல் காக்கைதீவு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலடி,
ஆனைக்கோட்டை.
(16006) (12.3.7)
தகவல்:
குடும்பத்தினர்.

## கணித மூல வள நிலையம் வேறிடத்துக்கு இடமாற்றம்

தென்மராட்சி,ஜன.22

சாவகச்சேரி மகளிர் கல்லூரி வளாக கட்டடத்தில் இயங்கி வந்த தென்மராட்சி கல்வி வலய கணித மூலவள நிலையம் எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலை மேல் மாடியில் இயங்கவுள்ளது.

வேள்ட்விஷன் நிறுவன அனுசரணையுடன் புனரமைக்கப்பட்ட இந்த நிலையத்தில் கணித பாடத்தில் தாழ்வு நிலையில் உள்ள மாணவர்களின் குறைபாடுகள் இனங்காணப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அடைவு மட்டத்தை உயர்த்துகின்ற விடயங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வேள்ட் விஷன் நிறுவன சாவகச்சேரி கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டம் முகாமையாளர் ஏ.ஜீ.ரொசைரோ கலந்து கொள்வார்.

இவ்வருட கல்வியாண்டின் முதலாம் தவணைக்குரிய செயற்பாடுகள் அன்றைய தினமே ஆரம்பிக்கப்படும் என்றும் நிலையத்தின் முகாமையாளராக சி.பத்மநாதன் செயற்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வலயத்தில் கணித வள நிலையம் மகளிர் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வலயப் பாடசாலைகளில் கணித பாடத்தில் பல மாணவர்கள் சித்தி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(வ–9)

## உயர் கல்வி தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு

தென்மராட்சி,ஜன.22

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கும் மாணவர்களுக்கான உயர்கல்வி தொடர்பான தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

கருத்தரங்குகள் நாளை வெள்ளிக்கிழமை மற்றும் எதிர்வரும் 30, 31 ஆகிய திகதிகளில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி ஆகிய நான்கு நிலையங்களில் நடத்தப்படவுள்ளன.

வேள்ட் விஷன் நிறுவன அனுசரணையுடன் வலய தொழில் வழிகாட்டல் ஆலோசனை அலகால் நடத்தப்படும் ஐந்தவது கருத்தரங்கில்பரீட்சைக்குத்தோற்றிய வலயத்தைச் சேர்ந்த 31 பாடசாலைகளைச் சேர்ந்த 983 மாணவர்கள் பங்குபற்ற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண தொழிற்றுறைப் பணிப்பாளர் க.சிவகரன் கலந்து கொள்வார். மாணவர்கள் உயர்தர வகுப்புகளில் தொழில் நுட்பவியல் பாடநெறிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் பற்றியும் குறிப்பாக உயிரியல் முறைமை, தொழில் நுட்ப பொறியியல், தொழில் நுட்பம் பற்றிய விடயங்களும், வணிக பாடநெறியில் மாணவர்கள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் குறித்தும் தற்போது வணிக பாடத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அணுகுமுறை, உயர்கல்வி வாய்ப்புக்கள் தொழில் வாய்ப்புக்கள் குறித்தும், உரிய வளவாளர்களால் மாணவர்களுக்கு எடுத்துக் கூறப்படவுள்ளது. கருத்தரங்குகள் 11 தலைப்புகளில் 3 தினங்களும் வளவாளர்களால் போதிக்கப்படவுள்ளன.

(வ–9)

## மரண அறிவித்தல்



### ஐயாத்துரை சுதகரன்

புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் (பெருங்காடு) பிறப்பிடமாகவும், சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சுதகரன் 07.01.2015 புதன்கிழமை சுவிஸில் இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், கிறிஸ்பினின் அன்புக் கணவரும், சிந்து, சீனு ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2015) வியாழக்கிழமை சுவிஸில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புங்குடுதீவு,
முதலாம் வட்டாரம்.
077 815 1016
(56013)(12.3.7)
தகவல்:
குடும்பத்தினர்.

## குறுந்திரைப்படப் போட்டியில் தெரிவானோருக்கு பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.22

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினரால் வட மாகாண கல்வி கலாசார விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அனுசரணையுடன் நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட குறுந் திரைப் படப் போட்டியில் சிறந்த குறுந் திரைப்படம் மற்றும் நடிக, நடிகையர், இயக்குநர் தெரிவில் தெரிவானவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் இன்று வியாழக் கிழமை நடைபெறவுள்ள பண்பாட்டுப் பெருவிழாவின்போது வழங்கப்படும்.

நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வில் முதலாம் இடத்தைப் பெற்ற சிறந்த படம் 'பை' இரண்டாம் இடம் 'திரைக் கதையில் அவள்' இவற்றுக்கு முறையே ரூபா 5000, ரூபா 3000 பரிசில்களாக வழங்கப்படும். சிறந்த நடிகர் பொ.சுலக்சன் – பை குறும்படம், சப்தமி கலையகம் நாச்சிமார் கோயிலடி, சிறந்த நடிகை எஸ்.பிரியதர்சினி 'திரைக் கதையில் அவள்' குறும்படம் நல்லூரான் கலைத்தாய் மன்றம் சிறந்த தயாரிப்பாளர் த.மதீசன் 'பை' குறுந்திரைப் படம்.

(வ–7)

## விழிப்புணர்வு செயலமர்வு

தென்மராட்சி, ஜன.22

சங்கானைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முதியோர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கான விழிப்புணர்வு செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை மு.ப.9 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும்.

பிரதேச செயலர் அ.சோதிநாதன் தலைமையில் நடைபெறும் செயலமர்வில் பிரதேச முதியோர் சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட அங்குள்ள முதியோர்களையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச சமூக சேவைகள் அலுவலர் வே.அருந்தவராஜா அறிவித்துள்ளார்.

(வ–9)

## கூட்டம்

தென்மராட்சி,ஜன.22

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை மு.ப.9 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

கூட்டத்தில் பாடசாலை சமூகத்தினர், நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அதிபர் அ.கபிலாயபிள்ளை அறிவித்துள்ளார்.

(வ–9)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ.22

யாழ். மாநகர சபையின் நல்லூர் கிளை நூலகம் நடத்திய தேசிய வாசிப்பு மாத போட்டிகளின் 2014 ஆம் ஆண்டுக்கான பரிச ளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதல்வர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக நூலகர் அறிவித்துள்ளார்.

(வ)

22 JAN 2015

### பணியாளர்களுக்கு மூக்குக் கண்ணாடி

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ். மாவட்டத்தில் நான்கு தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த 128 பணியாளர்களுக்கு இன்று வியாழக்கிழமை இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

தொழில் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நிதி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் சிரமவாசா நிதியத்தினால் அண்மையில் யாழ். மாவட்டத்தில் உள்ள நான்கு தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கான கண் பரிசோதனை முகாம் ஒன்று நடத்தப்பட்டது.

இதில் கண்பார்வை குறைவான வர்களுக்கு இந்த மூக்குக் கண்ணாடிகள் இன்று சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் வைத்து வழங்கப்படவுள்ளதாகவடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பீச் றோட்டில் உள்ள றோபாட் பவுண்டேசன் நிறுவனத்தைச் சேர்ந்த 50 பணியாளர்களுக்கு முற்பகல் 10 மணிக்கு இந்த மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்படும்.

தொடர்ந்து 11 மணிக்கு வடகடல் நிறுவனத்தில் வைத்து 48 பணியாளர்களுக்கும், 11.30 மணிக்கு தப்ரோபேன் கடலுணவு பதனிடும் நிறுவனத்தில் 35 பணியாளர்களுக்கும், நண்பகல் 12 மணிக்கு சாராலைகத்தொழில் நிறுவனத்தில் 31 பணியாளர் களுக்கும் இந்த மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படும்.

(த-17)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்கள்



## திருமதி பிபியானம்மா பேதுருப்பிள்ளை

மண்டைதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பேதுருப்பிள்ளை பிபியானம்மா நேற்று (21.01.2015) புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமாகி விட்டார்.


அன்னார் காலஞ்சென்ற அந்தோனிமுத்து பேதுருப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை -அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அந்தோனிமுத்து -றோசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுவாம்பிள்ளை மற்றும் சூசைப்பிளளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr. அந்தோனிப்பிள்ளை (லண்டன்), சூசைதாஸ் , ஸ்ரனிஸ்லஸ் (லண்டன்), மரியமற்றில்டா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயும், எட்னாறோஸ் (லண்டன்), மேறிமாகிரெட் (கனடா), செல்வநேசம் (லண்டன்), கனிஸ்ரஸ் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியும், Dr. அஜந்தன் (லண்டன்), Dr. றொமனா (லண்டன்), சுரேன், சுதாசன், சுகந்தன், சுலக்ஷனா (கனடா), சுலக்ஷன் (புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி), பிஜேயன் (லண்டன்), சியோபின் (லண்டன்), அனிஸ்ரஸ் (நோர்வே), ஜெனிஸ்ரஸ் (நோர்வே), சியானா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், லூக்கா, லாஸ், ஷிறோன், றொய்ஸ்ரன் , றோஷன், சுவிஸ்கன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (23.01.2015) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து மண்டைதீவில் உள்ள அவரது இல்லத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு அஞ்சலிக்காகவைக்கப்பட்டு 10.00 மணியளவில் புனித பேதுருவானவர் ஆலயத்தில் இறுதித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டுபுனித பேதுறுவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

44, கோயில் வீதி, ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
**பிள்ளைகள்**

## பொன்னுத்துரை ரூபமோகன்



ஏழாலை வடக்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Lemoges ஐ வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை ரூபமோகன் 18.01.2015 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஜீவரட்ணம்-இராலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜீவரேகாவின் அன்புக் கணவரும், றிஷாந், ரூபிஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரன், இந்திரன், மாலா, ராசன், ரூபன், ரூபினி, நந்தினி, கலாஜினி, பரமேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவரான மகாலிங்கம் மற்றும் காந்திமதி, மோகனா, ராசமலர், விஜயராணி, லிங்கம், சுரேந்திரன், விஜீத், யாமினி, காலஞ்சென்ற தாசன் மற்றும் வத்சலா, கௌரி, ராசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மயூரா-கண்ணன், றதன், கரன், வரன், சுஜீதரன், கமல், றஜீவன், றஜீதா, றஜீனா, சுரேன், சுரேனிகா ஆகியோரின் பாசமிகு மாமனும், கஜீபன், கஜா, சிவா, கஜரூபன் ஆகியோரின் சித்தப்பாவும், டிலக்ஷன், சுலக்ஷன், பரனிதன், நிலாஜினி, ஷாகிஷன், ஹரிஸ்சாய் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.01.2015) வெள்ளிக்கிழமை பிரான்ஸில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஏழாலை கிழக்கு,**
**ஏழாலை.**

(56029)(10)

தகவல்:
**குடும்பத்தினர்.**



## திருமதி சிவபாக்கியம் அம்பலம்

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் அம்பலம் நேற்று (21.01.2015) புதன்கிழமை நீர்கொழும்பில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அம்பலத்தின் அன்பு மனைவியும், கனகம்மா (கனடா), காலஞ்சென்ற சிவயோகம் மற்றும் கண்மணியம்மா, பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தியாகராஜா சுவாமிகள், மாணிக்கராசா, சிவஞானம், செல்லத்துரை மற்றும் அருளையா ஆகியோரின் மைத்துனியும், கிருஸ்ணமூர்த்தி (சுவிஸ்), கமலாசினி (சுவிஸ்), திவ்வியலட்சுமி (நீர்கொழும்பு), கலாறாணி (சுவிஸ்), மீனாட்சி அம்மை (கனடா), குமரகண்ணதாசன் (சுவிஸ்), தனலக்சுமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், புஸ்பம் (சுவிஸ்), உபயசேகரன் (சுவிஸ்), தெய்வேந் திரம் (நீர்கொழும்பு), குகதாசன் (சுவிஸ்), தனபாலசிங்கம் (சுவிஸ்), கலைச்செல்வி (சுவிஸ்), பாபுஜி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காரைக்கால், இணுவில் கிழக்கு.**

தகவல்: வை. அருளையா
(மைத்துனர்)

# மரண அறிவித்தல்கள்

பிறப்பு
1948 . 07 . 17



இறப்பு
2015 . 01 . 21

## திருமதி ஆசீர்வாதம் கிறிஸ்றீனா

இரணைப்பாலையை சொந்த இடமாகக் கொண்ட ஆசீர்வாதம் கிறிஸ்ரீனா (மேரி) நேற்று (21.01.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் ஆசீர்வாதத்தின் (அமலன்ஸ் வெதுப்பக உரிமையாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பென்சமின்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அந்தோனிமுத்து- ஆரோக்கியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், பவளம் ராணி, அடைக்கலதாஸ் (பிரான்ஸ்), யேசுதாஸ் (டொக்டர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஜெபநேசன் (சுயன்ஸ்), ஐடா, சுமதி, சுசி(பிரான்ஸ்), டயஸ் (பிரான்ஸ்), சுபாஸ் (பிரான்ஸ்) ரொஸ்கி (பிரான்ஸ்) கொண்சலா, சுப்புறு (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், ராஜன், செல்லக்குமார், குகதாஸ், சுமி, ரிஷா, செறின், சுமன், வினோதினி ஆகியோரின் பாசமிகு மாமியும், டிஷா, டில்சிமா, பிரியா, பிரியங்கா, யாழினி, யாருஷான், யருஷா, சருண், இவான்சி, அஸ்வின், யூனஸ், பிறிஸ்மி, பிரதீஸ், துஸ் மியா, டிருஷன், சக்சிதா, நிஸ்மியா, ஷிகாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை மறுதினம் (24.012015) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று புனித பற்றிமா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித பற்றிமா ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:- 077 9688422 (யூட்)**

தகவல்:
**குடும்பத்தினர்**

## திருமதி தங்கம்மா ஐயாத்துரை



சிறிவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா ஐயாத்துரை நேற்று (21.01.2015) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஐயாத்துரை (முன்னாள் அர்ச்சகர், அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயில்) அவர்களின் அன்பு மனைவியும், நாகலட்சுமி, நாகராசா (ஓய்வுபெற்ற சாலைப்பரிசோதகர்) ஜெயலட்சுமி, காலஞ்சென்ற ஜெயராசா, சௌந்தரராசா (ஜேர்மனி), புஸ்பராசா (யூனியன் கல்லூரி கல்விசாரா ஊழியர், முன்னாள் உதைபந்தாட்டப் பயிற்றுநர்) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற சிவானந்தன் (லிகிதர் துறைமுக அதிகார சபை, திருகோணமலை) மற்றும் புவனேஸ்வரி கோதண்டபாணி (ஓய்வுபெற்ற அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ.ச.கிளை முகாமையாளர்), சியாமினி (ஜேர்மனி), நவநிதி ஆகியோரின் அன்பு மாமியும், வாகீசன் (தற்காலிக போதனாசிரியர் விஞ்ஞானபீடம் - யாழ்.பல்கலைக்கழகம்), அஜந்தன் (நடத்துநர், இ.போ.ச, பருத்தித்துறை சாலை), சுரேகா (யாழ்.பல்கலைக்கழக பட்டதாரி), நிவாஜினி (யாழ்.பல்கலைக் கழக பட்டதாரி) நிராகுலன் (பொலிஸ் உத்தியோகத்தர்), நிரூபனா, கஜந்தன், தினேஷன், ஜனேஷன் (ஆஸ்திரேலியா), சாரங்கா (ஜேர்மனி), பிரியங்கா (ஜேர்மனி), டினோஜன், சரண்ஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தனுமிதன், பூர்விதா, ரக்ஷனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப.2.00 மணிக்கு பூதவுடல் அளவெட்டி இந்துமயானத்துக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுவிளான்,
இளவாலை.

(56022)
(12.3)

தகவல்:
**ஐ.நாகராசா.**

# உலகச் செய்திகள்




## எயார் ஏசியா விமானத்தை தீவிரவாதிகள் தாக்கவில்லை

### கறுப்புப் பெட்டித் தகவலில் உறுதி

யகர்த்தா, ஜன. 22
ஜாவா கடலில் விழுந்து விபத்துக்குள்ளானஎயார்ஏசியா விமானத்தை தீவிரவாதிகள் தாக்கவில்லை என கறுப்புப் பெட்டியின் தகவலில் இருந்து தெரியவந்துள்ளது. எயார் ஏசியா விமானத்தின் உடைந்த பாகங்களுடன் கறுப்புப் பெட்டியும் மீட்கப்பட்ட துடன், அதில் உள்ள குரல் பதிவும் பரிசோதிக்கப்பட்டுள்ளது.

அதில் விமானிகளின் குரல் தவிர வேறு நபர்களின் குரல்கள் எதுவும் பதிவாகாததால், எயார் ஏசியா விமானத்தைத்தீவிரவாதிகள் கடத்திச் சென்று தகர்க்கவில்லை என்பது உறுதியாகியுள்ளது.

இந்தத் தகவலைஇந்தோனேஷிய போக்குவரத்துப் பாதுகாப்பு ஆணைய அதிகாரி ஹனான்போ தெரிவித்துள்ளார்.

எயார் ஏசியா விமான விபத்து நடந்த விதம் பற்றிய பல்வேறு குழப்பங்கள் நிலவி வந்தன.

விமானத்தின் கறுப்புப் பெட்டி கிடைத்தால்தான் விபத்துக்கான மர்மம் தெரியவரும் எனக் கருதப்பட்டது. இந்த நிலையில் கறுப்புப் பெட்டி மீதான தகவல் வெளியாகியுள்ளது. (ரி)

## யேமனில் கடும் மோதல் புரட்சி ஏற்படும் அபாயம்



சனா, ஜன. 22
யேமனின் சனாவில் நேற்று அதிபர் ஹாடி தமது மாளிகையில் பார்வையாளர்களைச் சந்தித்துக் கொண்டிருந்தபோது கிளர்ச்சியாளர்கள் திடீரென அதிபர் மாளிகை மீது வெடிகுண்டுகளை வீசித் தாக்கினார்கள். இதனால் மாளிகைக்குவெளியே கிளர்ச்சியாளர்களுக்கும், இராணுவத்துக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது

அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு துப்பாக்கி ஏந்திய சிலர் அதிபர் மாளிகைக்குள் நுழைந்தனர். அங்கு துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இதற்கிடையே அதிபர் மாளிகையின் 3 வாயில்களையும் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றித் தங்களது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தனர்.

தற்போது அதிபர் மாளிகை கிளர்ச்சியாளர்கள் வசமுள்ளது. அந்தத் தகவலை ஹவுதி கிளர்ச்சியாளர்களின் தலைவர் அப்துல் மாலிக்அல்ஹவுதி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

யேமனில்அதிபர் ஹாடி உள்ளிட்ட தலைவர்கள் ஊழலில் திளைத்துள்ளனர். நாடு மிகவும் நலிவடைந்த நிலையில் இருக்கிறது. அரசு நிர்வாகம் சீரழிந்துள்ளது. ஹாடி அரசு அல்குவைதா தீவிரவாதிகளுக்கு ஆதரவாகவுள்ளது. எனவே, அவர்கள் தூக்கி எறியப்பட வேண்டும். என்றும் அதனாலேயேதாம்இந்தக் கிளர்ச்சியை மேற்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார். இதனால் 2012 ஆம் ஆண்டு நடந்ததைப் போன்று யேமனில் மீண்டும் புரட்சி ஏற்படும் அபாயம் உள்ளது. தற்போது மாளிகை கிளர்ச்சியாளர்கள் வசம் இருந்தாலும் அதிபர் ஹாடி பாதுகாப்பாக இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்துக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே தொடர்ந்து கடும் சண்டை நடைபெற்று வருகிறது. இதில் இது வரை இரு தரப்புக்களையும் சேர்ந்த 9 பேர் சாவடைந்திருப்பதாகவும் பலர் காயம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)



ஆப்கானிஸ்தானில் கேரட் நகரில் உள்ள அகதிமுகாமில் குளிரிலும் பனியிலும் குடிசை வாழ்வை அனுபவித்து வரும் ஆப்கான் சிறுவர்கள். (ரி)

## ஜப்பானிய பணயக் கைதிகளை தலை துண்டித்துக் கொல்வோம்

### ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மிரட்டல்

டோக்கியோ, ஜன. 22
ஜப்பானைச் சேர்ந்த இருவரது தலைகளைத்துண்டித்துக்கொலை செய்யப்போவதாக ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் வீடியோ ஒன்றில் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றித் தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் தொடர்ந்து பல நாட்டினரைப்பணயக் கைதிகளாக பிடித்து வைத்து அவர்களது தலைகளைத்துண்டித்துக்கொலை செய்து வருகின்றனர்.



இந்தநிலையில் ஜப்பானைச் சேர்ந்த இரு நபர்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தற்போது அவர்களைக் கொல்லப் போவதாக மிரட்டியுள்ளது.

இது தொடர்பாக தீவிரவாதிகள் வெளியிட்டுள்ள வீடியோவில், காவி நிற உடைகளுடன் இரு ஜப்பானியர்களும் மண்டியிட்டபடி உட்கார்ந்துள்ளனர்.

அவர்களின் நடுவே நிற்கும் தீவிரவாதி காணொலியில் தெரிவிக்கையில்

72 மணி நேரத்துக்குள் இந்த இருவர்களுக்கான பணயத் தொகையாக மொத்த தொகையான 200 மில்லியன் டொலர்களை ஜப்பானிய அரசு எங்களுக்கு வழங்க வேண்டும் இல்லையேல் அவர்களது தலைகளைத் துண்டித்துக் கொடூரமாகப் படுகொலை செய்வோம் எனவும் மிரட்டியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

## பணயக்கைதிகளை விடுவிக்க நடவடிக்கை

### ஜப்பான் பிரதமர் திட்டவட்டம்

ஐ.எஸ்.ஐ.எஸ். பிடியில் பணயக் கைதிகளாகச்சிக்கியுள்ள இரண்டு ஜப்பானியர்களையும் விடுவிக்க வேண்டும் என அந்தநாட்டின் பிரதமர் ஷின்ஸோ அபே வலியுறுத்தியுள்ளார்.



ஜப்பானைச் சேர்ந்த இரு நபர்களைப் பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்துள்ள ஐஎஸ்ஐஎஸ் அமைப்பு, அவர்களது தலைகளைத் துண்டித்துப் படுகொலை செய்யப்போவதாக அறிவித்ததையடுத்தே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் இதுபோன்ற நடவடிக்கைகள் என்னை மிகவும் கோபம் அடைய செய்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ரி)

## இரு உயிர்களைக் காப்பாற்றியது பிறந்து 6 நாளில் இறந்த குழந்தை

லண்டன், ஜன. 22
பிரித்தானியா மருத்துவமனையில் பிறந்து 6 நாள்களேயான பெண் குழந்தை தன் உறுப்புக்களைத் தானம் செய்து இரண்டு உயிர்களைக் காப்பாற்றியுள்ளது.

பிறந்து 6 நாள்களிலேயே இறந்து போன அந்தப் பெண் குழந்தையின் உறுப்புக்களை எடுத்து, வேறு நோயாளிகளுக்கு பொருத்தியதன் மூலம் பிரித்தானியா நாட்டிலேயே மிக குறைந்த வயதில் உடல் உறுப்புக்களைத் தானம் செய்தவர் என்ற வரலாற்றுப் பெயரை அந்தக் குழந்தை பெற்றுள்ளது.

குழந்தையின் சிறுநீரகம் மற்றும் கல்லீரல் செல்களை வேறு இரு நோயாளிகளுக்குப்பொருத்தப்பட்டுள்ளது.

அது குறித்து பச்சிளம் குழந்தைகள் மருத்துவரான கவுரவ் அட்ரேஜா தெரிவிக்கையில், இறந்து போன ஒரு பச்சிளம் குழந்தையின் உறுப்புக்களை தானமாகத் தாருங்கள் என பெற்றோர் களிடம் கேட்பது மிகவும் கடினமான,வருத்தமளிக்கக்கூடிய செயல் என்று தெரிவித்துள்ளார். (ரி)

## வொஷிங்டன் மெட்ரோ பஸ்ஸில் துப்பாக்கிச்சூடு

வொஷிங்டன், ஜன.22
அமெரிக்காவின் தலை நகரான வொஷிங்டனில் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த பஸ் ஒன்றில் மர்ம நபர் ஒருவர் கண்மூடித்தனமாகப் பயணிகளை நோக்கிச் சுட்டதில் பயணிகள் இருவர் பலத்த காயமடைந்துள்ளனர்.



சம்பவத்தின்போது பயணிகளில் ஒருவன் திடீரென துப்பாக்கியை எடுத்து பயணிகளை நோக்கிச் சரமாரியாகச் சுட்டுவிட்டு பஸ்ஸிலிருந்து குதித்துத் தப்பிச் சென்று விட்டான். பஸ்ஸிலிருந்த கமெராவில் பதிவாகியிருந்த அந்த மர்ம நபரின் புகைப்படங்களை வெளியிட்டு பொலிஸார் அவனைத் தேடி வருகின்றனர். (ரி)

## அரசமைப்புத் திருத்தம் இன்னும் 14 நாள்களில்

### நீதி அமைச்சர் கூறுகின்றார்

கொழும்பு, ஜன.22

அரசமைப்புத் திருத்தம் தொடர்பான சட்டவரைவு எதிர்வரும் 14 நாள்களில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



"18ஆவது திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்து 19ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தத் தேவையான ஏற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன. உத்தேச அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை இன்னமும் இரு வாரத்தில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்க முடியும்"– என்று அவர் தெரிவித்துள்ளார்.

"19ஆவது திருத்தச் சட்டத்தின் நகல் வரைவைத் தயாரிக்கும் பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன. 19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்படவுள்ளன"– என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள மொழி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

## தமிழ் கூட்டமைப்பு மனதை வென்றாலே தீர்வு கிட்டும்

### முன்னாள் அமைச்சர் வாசுதேவ சுட்டிக்காட்டுகிறார்

கொழும்பு, ஜன.22

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மனதை வெல்லாது, தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது இயலாத காரியம் என்று தெரிவித்துள்ளார் முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஜனநாயக இடதுசாரி முன்னணி எதிரணியில் இருந்து கொண்டு அரசின் மக்கள் சார் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும். குறிப்பாக வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள காணிகளின் விவரங்களைப் புதிய அரசு திரட்டிவருகின்றது. இது வரவேற்கப்பட வேண்டிய விடயம். இதைக் கட்டாயம் செய்தாக வேண்டும்."– என்று அவர் கூறினார்.

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனநாயக விழுமியங்களை பின்பற்றிய தலைவராவார். அவர் தேர்தல்களை நடத்தினார். எதிர்ப்புக்கு மத்தியில் வடக்கு மாகாண சபைத் தேர்தலையும் நடத்தினார். எனவே, அவர் மீதான வீண் குற்றச்சாட்டுகளை ஏற்கமுடியாது."– என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.



"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மனதை வெற்றி கொள்ளாமல், தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண முடியாது. அதனை முதலில் செய்யவேண்டும். அவ்வாறான நடவடிக்கைகளுக்கு எமது கட்சி பூரண ஒத்துழைப்பு வழங்கும்."– என்றும் அவர் தெரிவித்தார். (ற)

## பிரிவினை இல்லாது பிரச்சினைக்கு தீர்வு

### எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா வலியுறுத்துகிறார்

கொழும்பு, ஜன.22

நாட்டின் இறையாண்மையைப் பாதுகாத்து – பிரிவினைவாதத்துக்கு இடமளிக்காது தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். அதற்கு எதிர்க்கட்சியான நாம் பூரண ஆதரவை வழங்குவோம் – இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசின் முதலாவது நாடாளுமன்ற அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் புதிய அரசுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜனாதிபதியின் 100 நாள் வேலைத்திட்டத்திற்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம். ஆனால் அது தொடர்பில் எமக்கு தெளிவுபடுத்த வேண்டும். நாங்கள் மக்கள் பிரதிநிதிகள். எனவே அவர்களின் அபிலாசைகள் தேவைகளை அறிந்தே எமது அரசியலை முன்னெடுக்கவேண்டும்."– என்று அவர் குறிப்பிட்டார்.



"எதிர்க்கட்சி என்ற பதத்தை விலக்கி வைத்து அரசின் நல்ல திட்டங்களுக்கு பூரண ஆதரவை வழங்குவோம். ஆயினும் அரசின் தன்னிச்சையான அரசியல் முன்னெடுப்புகளுக்கு ஆதரவு வழங்கமாட்டோம். மக்களுக்காக எமது குரல் தொடர்ந்து ஒலிக்கும் அதேவேளை ஜனநாயகவியூகத்திற்குள் கடமைகளை முன்னெடுப்போம்."– என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"நாட்டின் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்குக் கடந்தகாலங்களில் பல அரசுகள் முயற்சிகளை மேற்கொண்டன. பேச்சு நடத்தப்பட்டன. குழுக்கள் அமைக்கப்பட்டன. விவாதங்கள் நடத்தப்பட்டன.

ஆனால் எதுவும் வெற்றியளிக்கவில்லை. இந்தப் பிரச்சினைக்கு அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை வழங்க வேண்டும். நாட்டின் இறையாண்மை பாதுகாக்கப்படவேண்டும். பிரிவினைவாதத்துக்கு இடமளிக்காமல் தீர்வு காணப்பட வேண்டும்."– என்றும் அவர் வலியுறுத்தினார்.

"தேர்தலுக்குப் பின்னரான பழிவாங்கல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. எமது ஆதரவாளர்கள் தாக்கப்படுகின்றனர். தொழில் ரீதியில் பழிவாங்கப்படுகின்றனர். நல்லாட்சியையும் புதிய அரசியல் கலாசாரம் தொடர்பாக வலியுறுத்தும் பிரதமர் இவ்வாறான சம்பவங்களை தடுக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்"– என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். (ற)

## நல்லிணக்கத்துக்கான காலம் கனிந்துள்ளது

### ஜே.வி.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜன.22

வடக்கு, கிழக்கு மக்கள் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்து பெருமளவில் வாக்களித்திருக்கும் நிலையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான காலம் கனிந்துள்ளது என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

"நடைபெற்று முடிந்த தேர்தலில் தோல்வியடைந்த தரப்பினர் இனவாதத்தை மீண்டும் தூண்டுவதற்கு முயற்சிக்கின்றனர். எனினும், இவ்வாறானவர்களின் முயற்சிகளுக்கு இடமளிக்க முடியாது."– என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித் ஹேரத் தெரிவித்துள்ளார்.

"இனவாதத்தை மீண்டும் தூண்டும் பிழையான நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது. அதேநேரம், கிழக்கில் தனியானதொரு நிர்வாக மாவட்டத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரியதாகக் கூறப்படும் விடயம் பொய்யானது. அவ்வாறொன்றைக் கேட்கவில்லை. அப்படிக் கேட்டிருந்தால் பசில் ராஜபக்ஷ ஏன் முஸ்லிம் காங்கிரஸை அழைத்து

> “ நடைபெற்று முடிந்த தேர்தலில் தோல்வியடைந்த தரப்பினர் இனவாதத்தை மீண்டும் தூண்டுவதற்கு முயற்சிக்கின்றனர்.

மூன்று, நான்கு சுற்றுப் பேச்சு நடத்தியிருந்தார்?" என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

"ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளில் ஜே.வி.பி ஈடுபட்டுள்ளது. ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்கள் அரசில் இருந்தாலும், வெளியில் இருந்தாலும் திருடர்கள் தான். எனவே அவ்வாறானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்"– என்று அவர் சுட்டிக்காட்டினார். (ற)

## ஐ.ம.சு. கூட்டமைப்புக்கே பெரும்பான்மை பலம்

### அதைப் புரிந்து நடக்க வேண்டும் ஐ.தே.க.; அத்துரேலிய ரத்ன தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.22

நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கே உண்டு என்பதை ஐக்கிய தேசியக் கட்சி புரிந்து செயற்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார் ஹெல உறுமயக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரேலிய ரத்ன தேரர்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணைகளைத் தடுத்து நிறுத்த எனக்கோ, அமைச்சரவைக்கோ அல்லது பிரதமருக்கோ முடியாது. இருக்கும் நபர்களுக்கு தண்டனை விதிக்கும் நோக்கில் இந்த விசாரணைகள் நடத்தப்படக் கூடாது"– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் தரப்பினருக்கும் பாடம் புகட்டும் வகையில் விசாரணை நடத்தப்பட வேண்டும். ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் அனைவரும் சுத்தமானவர்கள் என்று நான் கருத்தவில்லை"– என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

"மஹிந்தவை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த எவரேனும் முயற்சித்தால் அது தற்கொலைக்கு ஒப்பானதாகும். ஐக்கிய தேசியக் கட்சி நினைக்கக் கூடாது தற்போது தங்களுக்கே கூடுதல் அதிகாரம் உண்டு என்று. இன்னமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கே கூடுதல் அதிகாரம் காணப்படுகின்றது.

தேவையெனில் 90 நாள்களில் அல்ல 30 நாள்களில் கூட அரசமைப்பில் திருத்தங்களைச் செய்ய முடியும். இனவாதத்தைக் களைந்து தேசிய ஒற்றுமையை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்"– என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# செய்திகள்



## வெலிக்கடையில் நடந்தது திட்டமிட்ட படுகொலையே

### சட்டத்தரணி உத்துல் பிரேமரட்ன அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, ஜன.22

இரு வருடங்களுக்கு முன்னர் வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதிகள் திட்டமிட்டுச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமைக்குச் சாட்சியங்கள் உண்டு என்று கூறியுள்ளார் சட்டத்தரணி உத்துல் பிரேமரட்ன.

வெலிக்கடை சிறைச்சாலையில் கைதிகள் போராட்டம் நடத்தியதை அடுத்து, அதை அடக்கும் முகமாகப் பாதுகாப்புப் படை [illegible] மேற்கொண்ட நடவடிக்கையில் கைதிகள் பலர் உயிரிழந்திருந்தனர். அது தொடர்பிலேயே உத்துல் பிரேமரட்ன இவ்வாறு கூறியுள்ளார்.

"இது முன்னைய அரசு மேற்கொண்ட திட்டமிட்ட படுகொலை என்பதற்குச் சாட்சியங்கள் உள்ளன. இன்றைய அரசு இது குறித்து நியாயமான விசாரணையை நடத்த குழுவொன்றை நியமித்தால் சாட்சியங்களை முன்வைக்கத் தயார்"– என்று அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார். (ற)

# கப்பலில் மீட்கப்பட்டவை சட்டரீதியான ஆயுதங்களே

### பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.22

அண்மையில் காலியில் மீட்கப்பட்ட ஆயுதக் களஞ்சியக் கப்பல் சட்டரீதியானதே என்று பாதுகாப்புச் செயலர் யூ.டி.பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

அந்தக் கப்பலில் இருந்து மீட்கப்பட்ட 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட துப்பாக்கிகள் மற்றும் லட்சக்கணக்கான தோட்டாக்கள் என்பன வெளிநாட்டு நிறுவனங்களுக்குச் சொந்தமானவை என்று விசாரணைகளின் மூலம் தெரியவந்தது என்று பாதுகாப்புச் செயலர் தெரிவித்துள்ளார்.



காலியில் நங்கூரமிடப்பட்டிருந்த மஹநுவர என்ற கப்பலில் பெருந் தொகையான துப்பாக்கிகளும் தோட்டாக்களும் மீட்கப்பட்டிருந்தன. அவை சட்டவிரோதமாகக் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இந்நிலையிலே பாதுகாப்புச் செயலர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த கப்பலில் மீட்கப்பட்ட துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள் பற்றி விவரங்கள் பாதுகாப்பு அமைச்சின் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன என்றும், சோமாலியக் கடற்கொள்ளையர்களிடம் இருந்து கப்பல்களைப் பாதுகாக்கும் பணிகளுக்காக இந்தக் கப்பல் பயன்படுத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# 'சீல்' வைக்கப்பட்ட அறையில் உள்ளதை பகிரங்கப்படுத்துக

### பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் கோரிக்கை

கொழும்பு, ஜன.22

தற்போது 'சீல்' வைக்கப்பட்டுள்ள தனது உத்தியோகபூர்வ அறை மீளத் திறக்கப்படும்போது அங்குள்ள அனைத்துப் பொருள்கள் தொடர்பிலும் தகவல் வெளியிடப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் முன்னாள் தலைவர் எஸ்.அமரசேகர.

உத்தியோகபூர்வ அறை திறக்கப்படும் நாளில் அங்கிருக்கும் ஆவணங்கள், பொருள்கள் மற்றும் பணம் தொடர்பான தகவல்களை ஊடகங்களுக்கு வெளியிட வேண்டும் என்று அவர் அறிக்கை வாயிலாகக் கேட்டுள்ளார்.

தனது மேசையில் உள்ள குண்டூசிக் குவளையில் 25 ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான நாணயக் குற்றிகள் இருந்தன என்றும், அதனைத் தமக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் அவர் அந்த அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ற)


N-Joy
காட்சியறை இல: 32, 33
இங்கு வருகை தாருங்கள்
எண்ணற்ற பரிசில்களை தினந்தோறும் வென்றிடுங்கள்
2015 ஜனவரி 23, 24 மற்றும் 25 ஆகிய தினங்களில்
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சியில்
* 2 Burner கேஸ் குக்கர்கள்
* 2.8L Rice குக்கர்கள்
* அதிஷ்ட சக்கரத்தை சுழற்றி 500 க்கும் மேற்பட்ட பரிசுகள்
மற்றும் 22K தங்கச் சங்கிலிகளை வென்றிடுங்கள்


# பொலிஸிடம் வேலெ சுதா கோர்த்து விட்டார் பலரை

### மஹிந்த ஆட்சியின் முக்கியஸ்தர்களாம்

கொழும்பு, ஜன. 22

பொலிஸாரிடம் சிக்கிய போதைப்பொருள் கடத்தல் மன்னன் வேலெ சுதா, ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விவரங்களை விசாரணையின்போது தெரிவித்துள்ளதாகவும், குறித்த ஆறு பேரும் மஹிந்தவின் ஆளும் கட்சியிலிருந்தவர்கள் என்றும் தெரியவருகின்றது.

"குற்றப் புலனாய்வுத் துறையினரால் விசாரிக்கப்பட்ட வேலெ சுதா, தன்னிடம் ஒழுங்கு முறையாகப் பணம் பெற்று வந்த முக்கிய அரசியல்வாதிகள் பலரின் பெயர்களை வெளியிட்டுள்ளார்"– என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்குப் பல ஆயிரக்கணக்கான கிலோ போதைப் பொருள்களைக் கடத்தி வந்து விநியோகித்த, வேலெ சுதா, கடந்த வாரம் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டுக் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், மஹிந்த ராஜபக்ஷ அரசில் அங்கம் வகித்த முக்கியமான இளம் நாடாளுமன்ற உறுப்பினருக்கு மிகவும் நெருக்கமானவராக வேலெ சுதா இருந்து வந்துள்ளார். குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் அதனை விட 5 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், பொலிஸ் அதிகாரிகள் பலருக்கும்



மாதாந்தம் 10 மில்லியன் ரூபாவை கொடுத்துள்ளார்.

வேலெ சுதாவின் மனைவி மூலம் குறித்த பணம் பரிமாற்றப்பட்டுள்ளது. சில சமயங்களில் வெளிநாட்டு வங்கிக் கணக்குகளிலும் இவர்களுக்குப் பணம் செலுத்தப்பட்டுள்ளது.

தன்னிடம் பணம் பெற்ற அரசியல்வாதிகள் பற்றிய விவரங்களை வேலெ சுதா விசாரணையின் போது வெளியிட்டுள்ளதாக, பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். எனினும், அவர்களின் பெயர் விவரங்களை வெளியிட அவர் மறுத்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற-5)

# தொடர்ச்சிகள்

## டெங்கு

பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தகவல்கள் கூறுகின்றன.

இந்தத் தர வரிசையில் கடந்த ஆண்டு யாழ்ப்பாணம் 7 ஆவது இடத்தில் இருந்தது. இம்முறை தரவரிசையில் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது. கொழும்பு மாவட்டம் முதலிடத்தில் உள்ளது. அங்கு 741பேர் டெங்கு தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். மூன்றாவது மாவட்ட மான ஹம்பகாவில் 263 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்

மன்னாரில் 37 பேரும், முல்லைத் தீவில் 19 பேரும், வவுனியாவில் 9 பேரும், கிளிநொச்சியில் 5 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ற-4)

## தலைமைத்துவ

நேற்று கொழும்பில் உள்ள உயர் கல்வி அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ற)

## மு.காவுக்கு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹசன் அலி சுகாதாரப் பிரதியமைச்சராகவும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் போக்குவரத்து பிரதியமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ற-10)

## இளம்

குத்தப்பட்டபோதும் அவர் மயங்கிய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு உயிர்தப்பினார். இந்தக் கொடூரச் சம்பவம் நேற்று முன்தினம் சுழிபுரத்தில் நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த மகேந்திரன் சுயந்தன் (வயது-26) என்பரே இவ்வாறு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டவராவார். அவரது மனைவி தனுசியா (வயது -24) வெட்டுக் காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தற்காலிக வீட்டில் வசிக்கும் சுயந்தன், தனது வீட்டுக்கு அருகில் பெட்டிக் கடை ஒன்றை நடத்தி வருகின்றார். சில சமயம் கூலி வேலைக்குச் செல்வார். இவையே அந்தக் குடும்பத்தின் வாழ்வாதாரம். இந்தத் தம்பதிகளுக்கு 4 வயதில் இரட்டைப் பெண் குழந்தைகள் உள்ளனர்.

நேற்றுமுன்தினம் வீட்டில் கட்டிலில் மனைவியும், கீழே கணவனும் உறங்கியுள்ளனர். ஒரு குழந்தையும் அவர்களுடனேயே உறங்கியுள்ளது. அவர்களின் வீட்டுக்குப்பின் புறம் பனைகளுடன் கூடிய காணி ஒன்று உள்ளது. அந்தப்பகுதியில் மின்சார வசதியும் இல்லை. தற்காலிக சிறிய வீடு என்பதால் அதன் கதவுகள் திறந்தவாறே இருக்கும்.

"நாங்கள் தூக்கத்தில் இருந்தோம். இரவு நேரம் காலில் ஏதோ தட்டுப்பட்டு எழும்பினேன். வீட்டுக்குள் யாரோ நிற்பது போல இருந்தது. இருட்டில் உற்றுப் பார்த்தபோது 4 பேர் வரையில் எனது கணவரைக் கத்தியால் குத்திக் கொண்டிருந்தனர். எனக்கு எதுவும் புரியவில்லை. நான் சத்தமிட்டவாறு அவர்களைத் தடுத்தேன். தடுத்துக் கொண்டே எனது கைத்தொலைபேசியில் உறவினர் ஒருவருக்கு அழைப்பை எடுத்து யாரோ குத்துகின்றனர் என்று கூறினேன். அப்போது என்னையும் அடித்தனர். எனது வயிற்றில் கத்தியால் குத்தினார்கள். கழுத்தில் குத்தவந்தபோது நான் அசைந்ததால் அது ஆழமாகப்படவில்லை. அப்படியே மயங்கிவிட்டேன்"- என்று தனுசியா கூறியதாக அவரின் உறவினர்கள் கூறினார்கள்.

சுயந்தனுக்கு தலையின் பின்புறம் அடிகாயம் காணப்படுகின்றது. நெஞ்சு, வயிறு, கழுத்து ஆகிய இடங்கயில் சிறிய ரக கத்தியால் பல தடவைகள் குத்தியுள்ளனர். சுயந்தனை சத்தமிடாதவாறு பிடித்துக் கொண்டே கத்தியால் குத்தியுள்ளனர்.

தனுசியாவின் தொலைபேசி அழைப்பை அடுத்து அயலவர்களையும் அழைத்துக் கொண்டு குறித்த உறவினர் வந்தபோது கணவன், மனைவி இருவரும் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர். உடனடியாக அவர்கள் ஓட்டோவில் மூளாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். ஆயினும் சுயந்தன் உயிரிழந்தார்.

அதேவேளை,

இந்தச் சம்பவம் தொடர்பில் உடனடியாக 119 அவசர அழைப்புக்கும், வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த பொலிஸார் தாம் வருவதற்கு வாகனம் ஏதுமில்லை என்று கூறியுள்ளனர். ஏதாவது வாகனம் கொண்டு வந்து தம்மை அழைத்துச் செல்லுமாறு கூறிவிட்டு வளாவிருந்தனர் என்று அங்கிருந்த மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். பொழுது விடிந்து (நேற்றுக்காலை) சுமார் 8 மணியளவிலேயே பொலிஸார் வந்து சேர்ந் தனர் என்றும் அவர்கள் கூறினர்.

கொலையைச் செய்தவர்களில் ஒருவரை கொல்லப்பட்டவரது மனைவி அடையாளம் கண்டுள்ளதாக திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமாரிடம் கூறப்பட்டுள்ளது. தொடர்ந்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ற-4)


## பதவி விலகுமாறு

பிரதம நீதியரசர் பதவி வகித்து வருவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஏற்கனவே குற்றம் சுமத்தியுள்ளது. பிரதம நீதியரசராக கடமையாற்றி வந்த சிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக குற்றப் பிரேரணை ஒன்றை முன்வைத்த மஹிந்த ராஜபக்ஷ அரசு அவரை பணி நீக்கி மொஹான் பீரிஸுக்கு அந்தப் பதவியை வழங்கியிருந்தது. இந்த நிலையிலேயே பதவியிலிருந்து விலகுமாறு மொஹான் பீரிஸிடம் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

அதனையடுத்துப் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் பதவியை விட்டு விலகுவதாக உறுதியளித்துள்ளார். அது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கூறியுள்ளார் என்று கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். (ற-4)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

### மரண அறிவித்தல்



**இராசதுரை சின்னத்துரை**

அராலியைப் பிறப்பிடமாகவும், இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை சின்னத்துரை நேற்று (19.01.2015) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2015) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, மு.ப 11 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **மனைவி, பிள்ளைகள், மருமகன்மார்.**

(56032)(10)

### கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் 110 அவசர அழைப்புப் பிரிவில் கடமையாற்றும் திரு **நா.கவிரதன்** அவர்களின் அன்புத் தந்தையாரான

**தம்பையா நாகேஸ்வரன்**

இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**பணிப்பாளர்,**
**உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள்,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**யாழ்ப்பாணம்.**

(56024) (10)

### கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 04 . 05 . 1946



இறப்பு 21 . 01 . 2015

எமது ஸ்தாபனத்தில் பணிபுரியும் **தம்பித்துரை சிவம்** அவர்களின் அன்புத் தாய்

**தம்பித்துரை யோகமலர்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


**S.V முருகேசு**
**உரிமையாளரும்,**
**ஊழியர்களும்.**

**154, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(56021) (10)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண் மகிழ 26 ★ 09 ★ 2000



கண் நெகிழ 23 ★ 12 ★ 2014

**அமரர் சுரேந்திரன் மீனலக்ஷன்**

(தரம் 09 மாணவன்- யா/சென் ஜோன்ஸ் கல்லூரி)

நீ ஓடித்திரிந்த எமதில்லம் இன்று
ஒளி இழந்து போனதையா!
எம் இல்லத்தின் ஒளி விளக்கே
எங்களைப் பரிதவிக்கவிட்டு எங்கையா சென்றீர்?...
ஆறவில்லையையா, ஓயவில்லையையா
கனத்த நெஞ்சின் ஓலம்!!
எங்கள் செல்வத்தின் ஆத்மா
சாந்திபெற சிவனடி நிழல் வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று எமதில்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து **யாழ்ப்பாணம், இல. 63, கல்லூரி வீதி, நீராவியடி இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில்** நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

**383/1, நாவலர் ஒழுங்கை,**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

# தொடர்ச்சிகள்

## ஆனைக்கோட்டையில் காணி சுவீகரிப்பதை தடுத்துநிறுத்தினார் மைத்திரி

### தேசிய நிறைவேற்றுச் சபைக் கூட்டத்தில் சம்பந்தனின் வேண்டுகோளையடுத்து

யாழ்.ஆனைக்கோட்டை, கூழாவடிப் பகுதியில் பொதுமக்களின் காணிகளைச் சுவீகரித்து அதனை இராணுவத்துக்குக் கையளிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் தடுத்துநிறுத்தப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.
நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால தலைமையில் நடைபெற்ற தேசிய நிறைவேற்றுச் சபையின் இரண்டாவது அமர்வில் தான் தெரிவித்த முறைப்பாட்டையடுத்து ஜனாதிபதி மேற்படி நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தினார் என்று அவர் கூறினார்.
குறித்த கூட்டத்தில் காணி சுவீகரிப்பு விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்த போது உடனே இராணுவத் தளபதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட ஜனாதிபதி, பொதுமக்களின் காணிகளைச் சுவீகரித்து இராணுவத்தினருக்குச் சொந்தமாக்கும் நடவடிக்கையைக் கைவிடுமாறு உத்தரவிட்டார் என்றும் அவர் தெரிவித்தார். (ற-சி)

### இறுதிப்போரில்

சந்திரிகா குமாரதுங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க, ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாட் பதியுதீன், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.
தேசிய நிறைவேற்றுச் சபையின் இரண்டாவது அமர்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. அதன் போது பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.
தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்கு வந்த போது, முள்ளிவாய்க்காலில் இருந்து பெருமளவான தங்க நகைகள், பணம் என்பன இராணுவத்தால் மீட்கப்பட்டன. அவற்றில் மிகச் சொற்ப அளவிலான நகைகளே மஹிந்த அரசால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.
ஏனைய நகைகள் மற்றும் பணத்துக்கு என்ன நடந்தது என்பது இதுவரையில் தெரியாதுள்ளது.
இந்த நிலையில் வடக்கிலிருந்து மீட்கப்பட்ட தங்க நகைகள் தொடர்பில் முழுமையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் இதற்கு தனியானதொரு விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த காலத்தில் இடம்பெற்ற படுகொலைகள் குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க ஆகியோரது கொலைகள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் இதற்கு தனியான விசாரணைக் குழு அமைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.
இதனைவிட, ஜனாதிபதித் தேர்தல் முடிவு வெளியான நேரத்தில் அலரிமாளிகையில் இடம்பெற்ற சதித் திட்டம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளரை நீக்கி, புதிய பணிப்பாளர் ஒருவரை நியமிப்பது தொடர்பான இணக்கப்பாடும் இந்தக் கூட்டத்தில் எட்டப்பட்டுள்ளது.
அதேவேளை, கடந்த 16 ஆம் திகதி அலரிமாளிகையில் பெருமளவு பணம் மற்றும் தங்க நகை என்பன மீட்கப்பட்டிருந்தன.

(ற-5)

### யாழ். தேர்தல்

வன்னி தேர்தல் மாவட்டத்திற்கு 6 நாடாளுமன்ற ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. கடந்த வருடம் யாழ்ப்பாணம் மற்றும் வன்னி தேர்தல் தொகுதிகளுக்கு தலா 6 நாடாளுமன்ற ஆசனங்களே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன.
2014ஆம் ஆண்டு வாக்காளர் பெயர் பட்டியலுக்குரிய, ஒவ்வொரு மாவட்டத்துக்குமான நாடாளுமன்ற ஆசனப் பங்கீடு தேர்தல்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது. அதில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்துக்கு 7 நாடாளுமன்ற ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.
முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதிக்கு 6 நாடாளுமன்ற ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் கடந்த 1994 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரையில் 9 நாடாளுமன்ற ஆசனங்கள் பங்கீடு செய்யப்பட்டிருந்தன. அதன்பின்னர் வாக்காளர் பெயர் பட்டியல் மீளாய்வுமேற்கொள்ளப்பட்டதைதொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 6 ஆகக் குறைவடைந்தது. கடந்த மூன்று வருடங்களாக யாழ்.மாவட்டத்துக்கு 6 நாடாளுமன்ற உறுப்பினர்களே பங்கீடு செய்யப்பட்டிருந்தனர். 2014 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலின்படி தற்போது ஒரு ஆசனம் அதிகரித்து 7 ஆசனமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
வன்னித் தேர்தல் மாவட்டத்தில் கடந்த 1994 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரையில் 6 நாடாளுமன்ற ஆசனங்கள் பங்கீடு செய்யப்பட்டிருந்தன. இதன் பின்னர் வாக்காளர் பெயர்பட்டியல் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை 5 ஆகக் குறைவடைந்தது. கடந்த வருடம் அது 6 ஆக அதிகரித்தது. தற்போது புதிய வாக்காளர் பெயர்ப் பட்டியலின்படி ஆசன எண்ணிக்கை மாற்றம் ஏற்படவில்லை.
கிழக்குமாகாணத்தில்திருகோணமலைக்கு 4 நாடாளுமன்ற ஆசனங்களும், மட்டக்களப்புக்கு 5 நாடாளுமன்ற ஆசனங்களும், அம்பாறை மாவட்டத்துக்கு 7 நாடாளுமன்ற ஆசனங்களும் பங்கீடு செய்யப்பட்டுள்ளன.
இந்த ஆண்டு இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின் போது மேற்படி ஆசனப் பங்கீட்டுக்கு அமையவே நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

(ற-5)

### பொன்சேகாவுக்கு

கிடைக்கவுள்ளது.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அரசின் காலத்தில் இராணுவப் பட்டங்கள் பறிக்கப்பட்டிருந்ததுடன், அவரது குடியுரிமையும் பறிக்கப்பட்டிருந்தது. அதனையே தற்போது புதிய ஜனாதிபதி வழங்கியுள்ளார்.
யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியாக 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டு வரையில் பணியாற்றிய சரத் பொன்சேகா, 2006 ஆம் ஆண்டு இராணுவத்தளபதியாக நியமிக்கப்பட்டார். இவரின் தலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இதன் பின்னர் இராணுவத்தளபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். அப்போதைய ஜனாதிபதி மஹிந்த, முப்படைகளின் பிரதானி என்ற கௌரவப் பட்டத்தை சரத் பொன்சேகாவுக்கு வழங்கியிருந்தார்.
இதன் பின்னர், சரத் பொன்சேகாவுக்கும், மஹிந்தவுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலைமையைத் தொடர்ந்து, 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அவர் மஹிந்தவை எதிர்த்துப் போட்டியிட்டார். அதில் தோல்வியைத் தழுவியிருந்தார்.
அதையடுத்து 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டார். இருப்பினும் அவர் சிறையிலிருந்து கொண்டே நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். சரத் பொன்சேகா மீது இராணுவ நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் அவரைக் குற்றவாளியாக இராணுவ நீதிமன்றம் அடையாளம் கண்டது.
அதனால், சரத் பொன்சேகாவின் இராணுவப் பதக்கங்கள் யாவும் பறிக்கப்பட்டன. இராணுவப் பட்டங்களும் பறிக்கப்பட்டன. அவரது ஓய்வூதியமும் நிறுத்தப்பட்டது. இதற்கு மேலாக, அவரது குடியுரிமையும் பறிக்கப்பட்டது. சிறையில் அடைக்கப்பட்டிருந்த பொன்சேகா, சர்வதேச நாடுகளின் அழுத்தம் காரணமாக 2012 ஆம் ஆண்டு மே மாதம் விடுவிக்கப்பட்டார்.
ஆனாலும் அவருக்கு நாட்டுக் குடியுரிமையோ அல்லது இராணுவப் பட்டங்களோ மீளவும் வழங்கப்படவில்லை. பொது மன்னிப்பும் வழங்கப்படவில்லை.
இந்த நிலையில் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, மஹிந்தவை எதிர்த்துப் போட்டியிட்ட மைத்திரிபாலவுக்கு நிபந்தனையுடன் பொன்சேகா ஆதரவளித்திருந்தார். ஜனாதிபதியாக மைத்திரி தெரிவு செய்யப்பட்டதும், மீளவும் இராணுவப் பட்டங்கள் வழங்கப்பட வேண்டும் என்று கோரியிருந்தார். அதற்கு மைத்திரிபாலவும் இணங்கியிருந்தார்.
இதற்கமைய, ஜனாதிபதி மைத்திரிபால சரத் பொன்சேகாவுக்கு பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

(ற-5)

### ரவிராஜ்,

ராஜித சேனாரத்ன.
ரவிராஜ் எனது சிறந்த நண்பராக இருந்தார். அவர் திக்கி, திக்கி பேசும் சிங்கள மொழியைக் கேட்பதில் சிங்கள மக்கள் விருப்பம் கொண்டிருந்தனர். தமிழ் மக்களின் பிரச்சினையை அனைவருக்கும் தெரியப்படுத்தினார். அவர் கொலை செய்யப்பட்டதும் சிங்கள மக்கள் மிகவும் கவலையடைந்தனர்."– என்றும் அவர் கூறினார்.
எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. நாம் உனடியாக விசாரணைகள் மேற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுப்போம்"–என்றும் அவர் உறுதியாகத் தெரிவித்தார்.
அரச தகவல் திணைக்களத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பு நடந்தது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.
நண்பர் ரவிராஜின் இறுதிக் கிரியைகளை நானே பெறுப்பேற்றுச் செய்தேன். அவரது உடலைத் தகனம் செய்யவிடாது தடுத்தனர். நான் வீதியில் வைத்து தகனம் செய்வேன் என்று ஆர்ப்பாட்டம் செய்தேன். அப்போது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக இருந்த தற்போதைய பொலிஸ்மா அதிபர் சரியான முறையில் உடலைத் தகனம் செய்ய உதவினார்" என்றும் அவர் கூறினார்.
ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயை புலிகள் கொலை செய்தார்கள் என்று கூறுகின்றனர். ஆனால் எமக்குச் சந்தேகம் ஏற்பட்டது. இப்போது அவரது கொலை தொடர்பான தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன"– என்று அவர் அங்கு குறிப்பிட்டார்.
ஜெயராஜ் பெர்னாண்டோ, ரவிராஜ் ஆகியோர் இப்போது இருந்திருந்தால் தமிழ் மக்களுடனான உறவு எவ்வாறு அமைந்திருக்கும் என்று முன்னாள் ஜனாதிபதியிடம் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினேன். அதற்கு அவர், இராணுவத்தினருக்கு அரசியல் பற்றி ஒன்றுமே தெரியவில்லை என்று எனக்குப் பதிலளித்தார்"– என்றும் ராஜித அங்கு தெரிவித்தார்.
ஊடகவியலாளர் லசந்த படுகொலை செய்யப்பட்டபின்னர் அரசில் இருந்து நான் வெளியேற எண்ணினேன். அது குறித்து முன்னாள் அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவிடமும் கூறினேன். அவர் மஹிந்த ராஜபக்ஷவிடம் இதுகுறித்துக் கூறினார். என்னிடம் பேசிய மஹிந்த ராஜபக்ஷ, நீங்கள் ஒன்றும் குழம்ப வேண்டாம். அமைதியாக இருங்கள். இந்தச் செயலைச் செய்தவர்கள் மீது நான் நடவடிக்கை எடுப்பேன்' என்றார். ஆனால் இன்றுவரை ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை"– என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.
மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசில் விசாரணை குழு அமைக்கப்பட்டு இந்தச் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தப்படும். குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்"– என்றும் ராஜித சேனாரத்ன அங்கு குறிப்பிட்டார்.

(ற)

### கிழக்கு

ஆட்சி அமைப்பது தொடர்பில் இழுபறி நிலை நிலவுகின்றது. அதனால் இரண்டு தடவைகள் சபை ஒத்தி வைக்கப்பட்டது.
கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் நடத்திய பேச்சு தோல்வியடைந்தது. மாகாண சபையில் தமிழ்க் கூட்டமைப்பு 11 ஆசனங்களைக் கொண்டு கூடிய ஆசனங்களைக் கொண்ட கட்சியாக இருக்கின்றது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 7 ஆசனங்களை மாத்திரம் கொண்டிருக்கின்றது. இரு கட்சிகளுமே முதலமைச்சர் பதவி தமக்குத் தேவை என்ற நிலைப்பாட்டில் உள்ளன. அதனால் இது குறித்து முடிவு எட்டப்படாதுள்ளது.
இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் 11 பேருக்கும், கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் ஏனைய பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கும் இடையில் கொழும்பில் நேற்றுக் காலை சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில், மாகாணசபை உறுப்பினர்கள், முதலமைச்சர் பதவி கட்டாயம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்.
அதனை கட்சித் தலைமை ஏற்றுக் கொண்டுள்ளது. அத்துடன் முதலமைச்சர் பதவியை, இரந்து கேட்பதில்லை என்ற கட்சித் தலைமையின் முடிவையும் மாகாணசபை உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.
அதனடிப்படையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபாலவுடனும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவுடனும் இன்று சந்திப்புக்களை நடத்தவுள்ளனர். இந்தச் சந்திப்புக்களின் போது, கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் பதவியை கூட்டமைப்பு ஏன் கோருகின்றது என்பது தொடர்பில் விளக்கவுள்ளனர்.
கடந்த இரண்டரை வருடங்களும் முஸ்லிம் முதலமைச்சர் இருந்துள்ளார். கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களே பெரும்பான்மையாக வாழ்கின்றனர். எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு முதலமைச்சர் பதவி தமக்குத் தேவை என்ற நிலைப்பாட்டை வலியுறுத்தவுள்ளனர்.

(ற-5)

### 33 ரூபாவால்

128 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும்.
சாதாரண டீசல் 95 ரூபாவாகவும் (16 ரூபா குறைப்பு), சுப்பர் டீசல் 110 ரூபாவாகவும் (23 ரூபா விலைக் குறைப்பு) விற்பனை செய்யப்படும்.
மண்ணெண்ணெய் 65 ரூபாவாக (16 ரூபா விலைக்குறைப்பு) விற்பனை செய்யப்படும்.
ஜனாதிபதி மைத்திபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரசிங்க தலைமையில் புதிய அமைச்சரவையின் அமைச்சரவைக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் 4 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. அதன்போதே எரிபொருள் விலை குறைப்புத் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டதுடன், அதனை உடனடியாக நடைமுறைப்படுத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

(ற-5)

# வோர்ணர் நீக்கம்



இந்தியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் பங்குபற்றும் முத்தரப்பு கிரிக்கெட் போட்டி ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது.

தொடரின் மூன்றாவது போட்டியில் இங்கிலாந்து அணியை ஆஸ்திரேலியா நாளை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டிக்கான ஆஸ்திரேலிய அணியில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

மெதுவாக பந்து வீசிய குற்றச்சாட்டு காரணமாக ஆஸ்திரே லிய அணித் தலைவர் ஜோர்ஜ் பெய்லிக்கு ஒரு போட்டியில் விளையாடத் தடை விதிக்கப் பட்டுள்ளது.அவருக்கு பதிலாக ஸ்ரீபன் சிமித் அணியை வழி நடத்துவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

லேசான தசைப்பிடிப்பு பிரச்சினையால் அவதிப்படும் டேவிட் வோர்ணருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு பதிலாக ஷோன் மார்சும், கமரூன் வையிட்டும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தனிப்பட்ட காரணமாக விலகியுள்ள வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஜோன்சன் இந்த ஆட்டத்திலும் இடம்பெறமாட்டார்.

ஆஸ்திரேலிய அணி:–

ஆரோன் பிஞ்ச், ஷான் மார்ஷ், ஷேன் வொட்சன், ஸ்ரீபன் சிமித் (அணித் தலைவர்), கமரூன் வையிட், மக்ஸ்வெல், பிரட் ஹடின், ஜேம்ஸ் பவுல்க்னெர், மிட்செல் ஸ்டார்க், கம்மின்ஸ், குரிந்தர் சந்து, டோஹர்த்தி. (த)



# சங்கக்கார புதிய சாதனை

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்களில் சனத் ஜெயசூரியாவின் சாதனையைச் சங்கக்கார முறியடித்துள்ளார். நியூஸிலாந்து அணிக்கு எதிரான 4ஆவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் குமார் சங்கக்கார 76 ஓட்டங்களைக் குவித்தார்.

இதன் மூலம் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்களில் 3ஆவது இடத்தில் இருந்த இலங்கை அணியின் முன்னாள் ஜாம்பவான் சனத் ஜெயசூரியாவை (13,430) அவர் முந்தியுள்ளார். இதுவரை 394 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள சங்கக்கார 13,490 ஓட்டங்களை குவித்து 3ஆவது இடத்தில் இருக்கிறார். முதல் 2 இடங்களில் முறையே சச்சின் (18,426), ரிக்கி பொண்டிங் (13,704) ஆகியோர் உள்ளனர். (த)



# தொடர்கிறது கார்ல்சனின் ஆதிக்கம்

தற்பொழுது இடம்பெற்றுவரும் சர்வதேச செஸ் தொடரின் 9ஆவது சுற்றில் நோர்வேயின் கார்ல்சன் வெற்றி பெற்றார். நெதர்லாந்தின் பெவர்விஜ்க்கில் 14 பேர் பங்கேற்கும் சர்வதேச மாஸ்டர் செஸ் தொடர் தற் பொழுது நடந்து வருகின்றது. இதன் எட்டாவது சுற்றில் நோர்வேயைச் சேர்ந்த உலக சம்பியன் கார்ல்சன், அஜர்பைஜானின் ரட்ஜபோரை எதிர்கொண்டார். இதில் வெள்ளை நிற காய்களுடன் விளையாடிய கார்ல்சன், தொடக்கத்தில் இருந்தே, ஆதிக்கம் செலுத்தினார். முடி வில், போட்டியின் 40ஆவது நகர்த்தலில் வெற்றி பெற்றார்.

இதுவரை நடந்த 9 சுற்றுகளில் முடி வில், கார்ல்சன் 7 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் நீடிக் கிறார். அமெரிக்காவின் வெஸ்லே, பிரான்சின் மேக்சி மெர், தலா 6 புள்ளிகள் பெற்று அடுத்த இடங்களில் உள்ளனர். (த–ரி)

# வில்லியம்ஸ் சகோதரிகள் திடீர் விலகல்



ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடர் தற்பொழுது மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் இரட்டையர் பிரிவில் 4 முறை பட்டம் வென்ற வில்லியம்ஸ் சகோதரிகள் திடீரென இந்த வருடத்துக்கான தொடரில் இருந்து வெளியேறினர்.

வில்லியம்ஸ் சகோதரிகள் முதல் சுற்று ஆட்டங்களில் ஸ்பெயினைச் சேர்ந்த அனபெல் மெடினா மற்றும் கஜகஸ்தான் யாரோஸ்லாவா ஆகியோருடன் மோதி வெற்றி பெற்றனர். இரண்டாம் சுற்றுக்கு தகுதிபெற்ற அவர்கள் திடீரென இரட்டையர் ஆட்டங்களில் இருந்து தற்போது விலகி உள்ளனர். இதை தொடரின் ஏற்பாட்டு அதிகாரிகள் உறுதி செய்து உள்ளனர். ஆனால் அதற்கான காரணம் குறிப்பிடப்படவில்லை. (த–ரி)

## தொடர்ச்சிகள்

### வடக்குப்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயகத்துக்கு திரும்பியுள்ள ஒரு அமைப் பாகும். அவர்கள் மக்கள் ஆதரவைப் பெற்று நாடாளுமன்றம் வந்துள்ளனர். அவர்கள் மதிக்கப்பட வேண்டும். – என்று அவர் தெரிவித்துள்ளார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டைத் தெளிவாகக் கூறியுள்ளது. அதேபோன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவரது நிலைப்பாட்டைக் கூறியுள்ளார். ஐ.தே.கவும் தமது நிலைப்பாட்டைக் கூறியுள்ளது. ஆகவே இங்கு எந்த வித இரகசிய உடன்படிக்கைகளும் ஏற்படுத்திக் கொள்ளப்படவில்லை"– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் அந்த அமைப்பு இன்று பொது இடத்துக்கு வந்துள்ளது. ஆகவே வடக்கு மக்களின் பிரச்சினைகள் குறித்து நாம் கவனத்தில் கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். வடக்கு மக்களின் பிரச்சினைகள் பற்றிப் பேசும்போது அதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்"– என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ற–5)

### பிரச்சினையை

ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

கிழக்கு மாகாணசபையில் எந்தவொருகட்சிக்கும் பெரும்பான்மை இல்லாத நிலையில், ஆட்சி அமைப்பதில் அங்கு குழப்பம் நிலவி வருகின்றது. கிழக்கில் முதலமைச்சர் பதவியைக் கோரியுள்ள முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதியை நேற்றுச் சந்தித்துள்ளதுடன், முதலமைச்சர் பதவியைக் கேட்டுள்ள மற்றொரு கட்சியான தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இன்றுகாலை ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளது.

இந்தச் சந்திப்புக்களின் பின்னர், ஜனாதிபதி செயலகத்தில் இன்று மாலை கிழக்கு மாகாணசபையின் உறுப்பினர்கள் 37 பேரையும் ஜனாதிபதி மைத்திரிபால சந்தித்துப் பேசவுள்ளார். இதன் போது கிழக்கு மாகாண ஆட்சி தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–5)

### படைக்குறைப்பு

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் மற்றும் பிரதமர் ஆகியோரைச் சந்தித்த பின்னர் கடந்த திங்கட்கிழமை, தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய ஊடகவியலாளர்கள் சிலருடன் சந்திப்பை நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

படைக்குறைப்பு

"எமது அரசு வடக்கில் இருந்து படைகளைக் குறைக்கும். உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான நிவாரணம் மற்றும் நீதியை வழங்க பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ளும். வடக்கை மீளமைப்பது தொடர்பாக உலகெங்கும் பரந்து வாழும் ஒரு மில்லியன்புலம்பெயர்மக்களுடன்விரைவில் பேச்சு ஆரம்பிக்கப்படும்.

வடக்கில் இருந்த இராணுவப் பின்புலம் கொண்ட ஆளுநரான மேஜர் ஜெனரல் சந்திரசிறி நீக்கப்பட்டு, புதிய ஆளுநராக பாளிஹக்கார நியமிக்கப்பட்டுள்ளதும், வடக்கிற்கு வெளிநாட்டவர்கள் கட்டுப்பாடு இன்றி பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளதும், தேசிய நல்லிணக்கத்தை எட்டுவதற்காக அரசால் காட்டப்பட்டுள்ள ஆரம்ப சமிக்ஞைகளாகும்."– என்று அவர் தெரிவித்துள்ளார்.

நீதி வழங்கப்படும்

"ஒரு பொறுப்புள்ள ஜனநாயக அரசாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி, நிவாரணம், நட்டஈடு வழங்க முயற்சிக்க வேண்டும். அது எமது கடமை. போரால் இடம்பெயர்ந்து இந்தியாவிலும், உலகின்ஏனைய இடங்களிலும்அகதிகளாக வாழுகின்ற தமிழர்கள் அனைவரும் இலங்கைக்குத் திரும்பி வரவேண்டும். உலகில் எங்கும் இலங்கையர்கள் அகதிகளாக வாழக் கூடாது.

முன்னாள் விடுதலைப் புலிப் போராளிகள் திரும்பி வரலாம். அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது. அவர்கள் அனைவரும் எமது மக்கள். பல்வேறு காரணங்களுக்காக அவர்கள் தமது தாயகத்தை விட்டுச் சென்றுள்ளனர். முன்னைய அரசினால் தடைசெய்யப்பட்ட குழுக்களைச் சேர்ந்த பலரை நான் லண்டனில் சந்தித்துள்ளேன். அவர்களைத் தீவிரவாதிகளாக என்னால் நம்ப முடியவில்லை."– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தீர்வுக்கு காலம் கனிந்துள்ளது

"கடந்த காலங்களில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த நாம் முயன்றோம். ஆனால் முடியவில்லை. எமது அரசு பதவிக்கு வருவதற்கு சகல இன மக்களும் வாக்களித்துள்ளனர். இந்த நிலையில் அனைவரும் அமைதியாகவும் நல்லிணக்கத்துடனும் வாழ வேண்டும். உண்மையான தேசிய நல்லிணக்கத்தை எட்டுவதற்கு அவர்களின் பங்களிப்பும் உதவியும் அவசியம்.

தேசிய நல்லிண்க்கத்துக்கு ஏற்கனவே பல யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. திம்பு யோசனைகள், மங்கள முனசிங்க திட்டம், சந்திரிகாவின் திட்டம், இன்னும் பல யோசனைகள் உள்ளன. தேசிய நல்லிணக்கம், அரசியல் விருப்பமின்மை காரணமாகவே இதுவரை எட்டப்படவில்லை. இப்போது அரசியல் விருப்பம் உள்ளது. எனவே தீர்வை எட்ட முடியும் என்று நம்புகிறோம் – என்றும் அங்கு அவர் தெரிவித்துள்ளார். (ற–5)

# செய்திகள்



## 51 கோடி கேட்டு பத்திரிகை மீது ஜடேஜா வழக்கு

ராஜ்கோட்டிலிருந்து வெளியாகும் மாலை நாளிதழ் ஒன்றின் மீது ரவீந்திர ஜடேஜா அவதூறு வழக்குத் தொடர்ந்து ரூபா 51 கோடி (இந்திய மதிப்பில்) இழப்பீடு கோரியுள்ளார்.

'அப்தக்' என்ற அந்த மாலை நாளிதழில் ரவீந்திர ஜடேஜா பற்றி வெளியான செய்தி ஒன்றே இதற்குக் காரணம். அதாவது, ஜடேஜா மற்றும் அவரது வர்த்தகக் கூட்டாளி ஜெனீசி அஜ்மீரா ஆகியோர் நில அபகரிப்பு வழக்கில் சிக்கியுள்ள பாலி தங்கர் என்பவருடன் தொடர்பு வைத்திருப்பதாக 2014 நவம்பர் 20ஆம் திகதி அந்தச் செய்தித்தாளில் செய்தி ஒன்று வெளியானது.

இதனையடுத்து ரவீந்திர ஜடேஜா, தனது பெயருக்கு அந்தப் பத்திரிகை களங்கம் ஏற்படுத்தி விட்டதாக அவதூறு வழக்குத் தொடர்ந்துள்ளார். இதனையடுத்து அந்த செய்தித் தாளின் ஆசிரியர் சதீஸ் மேத்தா மீது அவதூறு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து இந்த மனுவை விசாரித்த நீதிபதி பெப்ரவரி 4 ஆம் திகதி அந்த செய்தித்தாள் ஆசிரியரை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இது பற்றி ஜடேஜாவின் வழக்கறிஞர் ஹிரன் பட் கூறுகையில், 'உண்மையை சரி பார்க்காமல் அந்தச் செய்தித்தாள் இதனை வெளியிட்டுள்ளது. ஜடேஜா தன் வாழ்நாளில் ஒருமுறை கூட அந்தச் செய்தித்தாள் குறிப்பிட்ட, நில அபகரிப்பில் சிக்கியுள்ள தங்கர் என்பவரைச் சந்தித்ததில்லை. மேலும் உணவு விடுதி வர்த்தகத்தில் ஜடேஜாவின் கூட்டாளி அஜ்மீரா என்றும் அந்த செய்தித்தாள் கூறியுள்ளது. இதுவும் முற்றிலும் தவறு. அஜ்மீரா ஜடேஜாவுடன் எந்தவித வர்த்தக தொடர்பும் இல்லாதவர். நாங்கள் செய்தி ஆசிரியருக்கு நோட்டீஸ் அனுப்பினோம், ஆனால் அவர் பதில் அளிக்கத் தவறியதால் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளோம் – என்றார். ஜடேஜா தற்போது ஆஸ்திரேலியாவில் இந்திய அணியுடன் இருந்து வருகிறார். தோள் பட்டை காயத்திற்குச் சிகிச்சை பெற்றுவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(த–ரி)

## உலகக் கிண்ணத்தில் ஆடுவார் மலிங்க

இலங்கை அணியின் நட்சத்திர பந்துவீச்சாளர் மலிங்கவின் உடல்நிலை குறித்து அந்த அணியின் தெரிவு குழுத் தலைவர் சனத் ஜெயசூரியா தெரிவித்துள்ளார்.

கடந்த செப்டம்பர் மாதம் கணுக்கால் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட மலிங்க, 16 மாதங்களுக்குள் குணமாகிவிடுவார் என்றும், நியூஸிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் கடைசி 2 போட்டிகளில் விளையாடுவார் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அவரது காயம் மெதுவாக குணமடைவதால் நியூஸிலாந்து அணிக்கு எதிரான தொடரில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உலகக்கிண்ணப் போட்டிகளில் மலிங்கவின் செயல்பாடு குறித்து சனத் ஜெயசூரியா கூறுகையில், உலகக்கிண்ணப் போட்டிக்குள் மலிங்க குணமடைந்து விடுவார். உடல்நிலையை சரியான நிலையில் வைத்துள்ளார். பெப்ரவரி 14 இல் ஆரம்பமாகும் உலகக்கிண்ண போட்டியில் அவர் கண்டிப்பாக களமிறங்குவார் என்று தெரிவித்துள்ளார்.

## போராடி வென்றது சென்.லூட்ஸ்

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் ஏவ்.ஏ கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆட்டம் ஒன்றில் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழன அணி வெற்றி பெற்றது.

கடந்த வாரம் அராலி மாவத்தை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அராலி பாரதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. (த–23–ரி)

## அரையிறுதிக்கு யங் ஹென்றிஸ்

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தைப்பொங்கல் விழாவை முன்னிட்டு அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் நடத்திய 11பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதியாட்டம் ஒன்றில் யங் ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

கடந்த வாரம் அராலி மாவத்தை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியைய் எதிர்த்து மாதகல் சென். தோமஸ் யுத் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காகச் சமநிலை தகர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் யங் ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (த–23–ரி)


உதயன்
advt@uthayan.com
0215671111

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
கற்பதற்கு இலங்கையில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. (யாழில் 1976 முதல்). 136 நாடுகளில் 1040 கிளைகள். ஆசிரியர்கள் : யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் & ஆங்கில விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள். புதிய வகுப்புகள் விரைவில் ஆரம்பம்

French Embassy: www.ambafrance-lk.org உடன் அழையுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L எழுதியோர் அரச, தனியார் ஊழியர்கள், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், இணைய முடியும்.
"ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட இப்பயிற்சியில் இணைந்து மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 24.01.2015 சனிக்கிழமை
1. காலை 08.00-10:00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாத விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.
24.01.2015 இற்குமுன் இணைவோருக்கு 10 பாடப்புத்தகங்கள் இலவசம்
SAAMSON LANGUAGE SCHOOL 179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567 021 320 3313

கருத்தரங்கு
அரச முகாமைத்துவ
அதிசிறப்புக்கு
சேவைமூப்பு (Merit)
[illegible]
[illegible]
[illegible]- 10.00 மணி
[illegible]-9.00 மணி
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்சியல் வங்கி அருகில்)

அறைகள்/வீடு வாடகைக்கு
மானிப்பாயில் சகல வசதிகளுடனும் கூடிய அறைகள்/ வீடு வாடகைக்கு
[நாளாந்த அடிப்படையில்]
வாகனத்தரிப்பிடம் உண்டு.
தொடர்புகளுக்கு:- 077 3220722

தேவை
முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவு னியா, மன்னார் ஆகிய இடங் களில் சிறு சிறு கட்டட/ இரும்பு வேலை செய்யக்கூடிய கொந்தராத்துகாரர் தேவை.
விபரங்கட்கு:- 0712387076/ 077 3321754
0718643635

A/L பொருளியல்
வினா - விடை
விடயத்தலைப்புகளுக்கேற்ப ஒழுங்குபடுத்தப்பட்டது.
உயர்சித்தி பெற
இலகு வழிகாட்டி
வே. கருணாகரன்
ஆசிரியர்
பொருளியற் கல்லூரி
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை


## மரண அறிவித்தல்



### அம்பலவாணர் கனகசுந்தரம்

(இளைப்பாறிய தபால் அதிபர்)

காரைநகர் நடுத்தெருவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய தபாலதிபர் அம்பலவாணர் கனகசுந்தரம் நேற்று முந்தினம் (20.01.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோதிமணியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற அம்பலவாணர்-அன்னம்மா தம்பதியரின் ஆசை மகனும், காலஞ்சென்ற நாகலிங்கம்-அருளம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அற்புதமலர் (கனடா), சிவமலர் (பிரான்ஸ்), அற்புதராசா (ஜேர்மனி), ஆனந்தராசா (காரைநகர்), சிவராசா (பிரான்ஸ்), அன்னமலர் (காரைநகர்) ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற பாலச்சந்திரன் (பேபி -முன்னாள் ஆங்கில ஆசிரியர் யாழ்றரன் கல்லூரி), ஸ்ரீஸ்கந்தராசா, இராஜதுரை (கிராமசேவையாளர் காரைநகர் J/43) தினமணி, கமலாதேவி, லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், மீரா, ராகுல், கஜன், ரோஜினி, செந்தூரன், மயூரன், ஆர்த்திகன், அஜிதன், அருந்தா, அமிர்தா, அரிகரன், அரவிந்தன், மதுசன், மதுரா, மதுசங்கர், பவானந்தன், லக்சிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் காரைநகர் நடுத்தெருவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரிகைக்காக இன்று (22.01.2015) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் சாம்பலோடை இந்த மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நடுத்தெரு, காரைநகர்.
தொ.பேசி இல:021 3209261. (C/18995F(10)

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.